REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஓகஸ்ட் 2 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 183 | Friday 02, August, 2024 | 24 பக்கங்கள் | 50/-


## தங்கம் விலை சற்று அதிகரிப்பு 22 கரட் பவுண் 1,92,100 ரூபா



நாட்டில் கடந்த சில மாதங்களாக தங்கத்தின் விலை சற்று ஏற்ற இறக்கத்துடன் காணப்படுகிறது. ஆகஸ்ட் 01 திகதிய நிலவரத்தின் படி ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 7,42,441 ரூபாவாக காணப்பட்டது. அத்தோடு, 08






711 கோடியே 20 இலட்சம் ரூபாய் முதலீடு

## சகல மாணவர்களுக்கும் 'சுரக்ஷா' காப்புறுதி திட்டம்

### நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டிலுள்ள அனைத்து அரசாங்க பாடசாலைகள், அரச அனுசரணை தனியார் பாடசாலைகள், பிரிவேனாக்கள் மற்றும் ஏனைய விசேட பாடசாலைகளிலும் கல்வி 08

## ஜனாதிபதியின் வெற்றிக்காக அனைவரும் அர்ப்பணிப்போம்

### SLFP மத்திய செயற்குழு அறிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக முழுமையான அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் (31) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து உத்தியோகபூர்வமாக அறிவித்தனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்மானத்தை 08



### பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான

# மக்கள் ஐக்கிய முன்னணி ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு

### கட்சியின் மத்திய குழு நேற்று ஏகமனதாக தீர்மானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளது.

கட்சியின் மத்திய குழு நேற்று பிற்பகல் மஹரகமையிலுள்ள கட்சித் தலைமையகத்தில் கலந்துரையாடி, இத்தீர்மானத்தை எடுத்துள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் கூடிய கட்சியின் மத்திய குழு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதென மேற்கொண்ட தீர்மானம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

கடந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிட்ட மக்கள் ஐக்கிய முன்னணி, மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றது.

இவர்களுள் தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்தன கொழும்பு மாவட்டத்தையும் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி கம்பஹா மாவட்டத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தினர். 08



### பெருந்தோட்டத்துறை மக்களுக்கான

## நிரந்தர காணி உறுதிகள் வழங்கும் ஜனாதிபதியின் திட்டம் தொடரும்



பெருந்தோட்ட மக்களின் உண்மையான சமூகமயமாக்கலுக்காக நிரந்தர காணி உறுதிகளை வழங்குவதாகவும் இவர்களுக்கான வசிப்பிட உரிமையை இனி சலுகைப் பத்திரத்தில் மட்டுப்படுத்தாமல் தொடர்வதாகவும் பெருந்தோட்ட நிறுவன மறுசீரமைப்பு 08

## தடையின்றி எரிபொருள் விநியோகம்: அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர உறுதி

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நாடளாவிய ரீதியில் தடையின்றி எரிபொருள் விநியோகத்தை முன்னெடுக்கும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

சுத்திகரிப்பு நிலையங்களில் வருடாந்த பராமரிப்புப் பணி நடைபெற்று வருவதால், 08



### தேசிய ஜனநாயக முன்னணி சார்பில்

## கட்டுப்பணம் செலுத்தினார் முன்னாள் அமைச்சர் விஜேயதாச

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக தேசிய ஜனநாயக முன்னணியின் சார்பில் முன்னாள் அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் விஜேயதாச ராஜபக்ஷ நேற்று கட்டுப்பணம் 08



### கொத்தலாவல பாதுகாப்பு பல்கலையில்

## மருத்துவ பட்டப்படிப்புக்கு எதிரான மனு விசாரணையின்றி நிராகரிப்பு



கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் மருத்துவப் பட்டப்படிப்புக்கான தராதரங்களுக்கு மாறாக மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்காக மேற்கொண்டுள்ள தீர்மானம், அடிப்படை மனித உரிமை மீறல் என கோரி பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம தலைமையிலான குழு, தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமல் உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது. இது தொடர்பான மனுவில் விடயங்கள் மறைக்கப்பட்டு மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக 08

## தற்காலிகமாக நிறுத்தப்பட்ட 171 பாரிய திட்டங்கள் மீள ஆரம்பம்

### 58 திட்டங்களை விரைவில் பூர்த்தி செய்யவும் தீர்மானம்

கொரோனா தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த 171 பாரிய திட்டங்கள், மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இவற்றில் 58 வேலைத் திட்டங்களை இந்த வருடமும் அடுத்த வருடமும் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். குடிநீர், சுகாதாரம் மற்றும் கல்வி, வீதிகள் போன்ற துறைகள் தொடர்பான 58 திட்டங்கள் இந்த ஆண்டு நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது நடைமுறையிலுள்ள 171 திட்டங்களுள் 02 வெளிநாட்டு மானிய திட்டங்கள், 03 வெளிநாட்டு கடன் திட்டங்கள் மற்றும் 08 திட்டங்கள் உள்ளூர் நிதியில் செயல்படுத்தப்பட்டுள்ளதாக 08

## நாட்டில் முதலிட முன்வருமாறு புலம்பெயர் இளைய தலைமுறையினருக்கு அழைப்பு

### தந்தையர் நாடென்ற பேச்சிலேயே சக்தி பிறக்கும்



சுவிஸ்சர்லாந்தில் வாழும் புலம்பெயர் மக்களின் இரண்டாவது தலைமுறையை சேர்ந்த இளையோர், இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வரவேண்டுமென அழைப்பு விடுத்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே..., 08

## தமிழ் பொது வேட்பாளரை களமிறக்க தமிழ் கட்சிகளுக்கு முழு உரிமை உண்டு

### வடகிழக்குக்கு வெளியே அவசியமில்லை



வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே, மட்டும் தமிழ் பொது வேட்பாளரை கொண்டு வந்து விடாதீர்கள். அது இங்கு வாழும் தமிழ் மக்களுக்கு சிக்கலை உருவாக்கிவிடுமென, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ் பொது வேட்பாளரை களமிறக்க தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு முழு உரிமையும் உண்டு. ஆனால் அது வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வேண்டாமென்றும் அவர் தெரிவித்துள்ளார். 08



08 தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை இன்னும் தேடிக்கொண்டிருக்கிறோம்
இந்த வாரத்துக்குள் அறிவிக்கலாம்



08 நீதிமன்றில் CID யினர் முன்வைத்த குற்றங்களை மறுத்தார் டயானா



03 'காஸா சிறுவர் நிதியம்' பங்களிப்பு காலம் ஜூலை 31இல் முடிந்தது

92 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# இஸ்லாம் போதிக்கும் சகோதரத்துவம்



இஸ்லாம் சகோதரத்துவத்தை அதிகம் வலியுறுத்தும் மார்க்கமாகும். அதன் வழிகாட்டல்கள் அதனைத் தெளிவாக எடுத்தியம்புகிறது. இதன் ஊடாக பலம் வாய்ந்த ஈமானிய சமுதாயத்தை கட்டியெழுப்புவதும் ஒற்றுமையை வளர்ப்பதுவுமே இஸ்லாத்தின் இலக்காகும். இஸ்லாம் தன்னகத்தே கொண்டுள்ள தனிச் சிறப்புகளில் இதுவும் ஒன்றாகும்.

இஸ்லாமிய வரலாற்றைப் படிக்கின்ற போது இதன் உண்மையை அறிந்துக் கொள்ளலாம். நபி (ஸல்) அவர்களுக்கு நபித்துவம் அருளப்படுவதற்கு முன்னரான அக்கால அரேபியர்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள்? அவர்களுக்கு மத்தியில் கோத்திர வெறி அதிகரித்துக் காணப்பட்டது. கோத்திரங்களுக்கு இடையில் வருடக்கணக்கில் சண்டை சச்சரவுகள் தலைவிரித்தாடியது. அது காலா காலமாக தொடர்ந்தது. அடிமை, எஜமான் என்ற பாகுபாடு வேரூன்றி இருந்தன. எஜமானர்கள் தங்கள் அடிமைகளை தங்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு நடத்தினார்கள். நாட்டுக்கு நாடு, இடத்துக்கு இடம், மொழிக்கு மொழி, கோத்திரத்திற்கு கோத்திரம், இனத்திற்கு இனம், நிறத்திற்கு நிறம் என்றபடியெல்லாம் அவர்கள் பேதங்களுடன் வாழ்ந்தார்கள்.

இஸ்லாம் இவை அனைத்தையும் துடைத்தெறிந்தது. அல்குர்ஆன் அருளப்பட்டது முதல் ஈமானிய ஒளி பிரகாசிக்க ஆரம்பித்தது. அதற்கு ஏற்ப நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தை தெளிவாக எடுத்தியம்பினார்கள். அதன் ஊடாக அவர்களது உள்ளங்கள் அமைதியடைந்தன. இறைவிசுவாசம் என்ற ஒரே கோட்பாட்டின் கீழ் அவர்கள் ஒன்றிணைந்தார்கள். வேற்றுமைகளில் இருந்து முழுமையாக நீங்கிக் கொண்டார்கள். கோத்திரவெறி மற்றும் உலக ஆசைகள் இவை போன்ற அனைத்துக்கும் பகரமாக ஈமானிய சகோதரத்துவம் தலைத்தோங்கியது. அதே கோட்பாட்டின் கீழ் அனைவரும் சகோதரரானார்கள். அதன் ஊடாக குறுகிய காலப்பகுதியில் உலகில் ஒற்றுமைக்கும் சகோதரத்துவத்துக்கும் முன்மாதிரியான சமுதாயம் தோற்றம் பெற்றது.

இஸ்லாம் சகோதரத்துவத்தை இறைவிசுவாசத்துடன் இணைத்துக் குறிப்பிட்டிருக்கிறது. இரண்டு சகோதரர்களுக்கு மத்தியில் பிணக்கு ஏற்பட்டால் அதனைத் தீர்த்து வைக்கவும் கட்டளையிடுகின்றது.

(அல் குர்ஆன் 49:10 )

இறைவிசுவாசிகள் அனைவருமே சகோதரர்கள் என்பதன் மூலம் சகோதரத்துவத்தைத் தூண்டக்கூடியதாகவும் சகோதரத்திற்கு களங்கம் ஏற்படுகின்ற விடயங்கள் நடந்தால் அவற்றைத் தீர்த்து வைக்க ஏவுவதன் மூலமும் சகோதரத்துவம் மென்மேலும் உருவாக இவ்வசனம் தெளிவுபடுத்துகின்றது. நபித் தோழர்களது வாழ்க்கையும் அவ்வாறே அமைந்திருந்தது. நபி (ஸல்) அவர்களும் தனது தோழர்களுக்கு மத்தியில் பிரச்சினைகள் ஏற்படுகின்ற போது அவற்றை தீர்த்து வைத்து ஒற்றுமையைப் பேண வழிகாட்டியுள்ளார்கள். அதனால் தான் மூன்று நாட்களுக்கு மேல் ஒரு சகோதரன் இன்னொரு சகோதரனுடன் பேசாமல் இருப்பதைத் தடை செய்தார்கள்.

ஒரு முஃமின் இன்னொரு முஃமினை நேசிக்குமாறு இஸ்லாம் அறிவுரை கூறுகிறது. ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'ஒரு முஃமின் தான் விரும்புவதை இன்னொரு முஃமினுக்கு விரும்பாத வரை அவன் உண்மையான விசுவாசியாக மாட்டான்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

இன்றைய காலகட்டத்தில் முஸ்லிம் சமூகத்தில் நிலவுகின்ற ஒற்றுமை இன்மைக்கும் சமூகம் பல பிரிவுகளாகப் பிரிந்திருப்பதற்கும் இஸ்லாமிய வழிகாட்டல்கள் உரிய முறையில் உள்வாங்கப்படாமையே காரணமாகும். ஆனால் இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு அமைய வாழ்வொழுங்கை அமைத்து கொள்வது ஒவ்வொரு இறைவிசுவாசியினதும் பொறுப்பாகும். அந்த வகையில் சகோதரத்துவ வாஞ்சையும் ஒற்றுமையும் பேணப்படுவது அவசியம்.

ஒருவர் தனது வாழ்வில் முன்னேறிச் செல்கின்ற போது இன்னொருவர் அதனைப் பார்த்துப் பொறாமைக் கொள்ளக் கூடியவராகவும் அவரது முன்னேற்றத்தை தடுக்க முயற்சிக்கக்கூடியவராகவும் இருக்கிறார் என வைத்துக் கொள்வோம். மேற்படி நபிமொழியின் போதனைப் படி சகோதரத்துவ ஒழுங்கைப் பேணத் தவறியதன் விளைவாகவே இது. அதனால் தான் பிரச்சினையொன்று தோன்றக்கூடிய விடயங்களை முளையிலேயே தடுத்துவிடக்கூடியதாக விளங்குகிறது இஸ்லாம்.

அந்த வகையில் எப்படிப்பட்ட விடயங்களுக்காக சகோதரத்துவ நட்பை பேண வேண்டும் என்பதையும் இஸ்லாம் கற்றுத்தந்துள்ளது. ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள்,'அல்லாஹ்வுக்காகவே நட்புக் கொள்ளுங்கள். அல்லாஹ்வுக்காகவே ஒருவனை வெறுத்து நடங்கள்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: அஹ்மத்)

மேலும் ஒன்றாக பழகும் சந்தர்ப்பத்தில் ஒருவருக்கொருவர்அல்லாஹ்வின்கட்டளைகளை ஏற்று நடக்கக்கூடியவாறு நல்லுபதேசங்களைச் செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு நட்பாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் ஒருவர் அல்லாஹ்வுக்கு மாறு செய்கின்ற போதும் வணக்க வழிபாடுகளைப் புறக்கணிக்கின்ற போதும் மற்றவர் அச்சகோதரனுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அவன் அவற்றை அலட்சியப்படுத்துகின்ற போது நல்லுபதேசங்களைக் கேட்காத போது அவற்றை அவர் ஏற்று செயல்படுத்தும் வரை அவரை அல்லாஹ்வுக்காக வெறுத்து நடப்பது அவசியம்.

இஸ்லாம் இனம், நாடு, நிறம், சாதி, மொழி ஆகியவற்றுக்கிடையே எவ்வித பாகுபாடும் காட்டுவதில்லை. மாறாக ஏக இறைவனை ஏற்றுக்கொண்ட அனைவரையும் 'முஸ்லிம்கள் ' என்றே இஸ்லாம் நோக்குகின்றது. இவற்றை நபி (ஸல்) அவர்களது காலத்தில் வாழ்ந்த நபித்தோழர்களது வாழ்க்கை வரலாற்றின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

பிலால் (ரழி) அவர்களைப் பொருத்தவரையில் ஒரு மிகப் பெரும் குரைஷிக் குலத் தலைவனுக்கு அடிமையாக இருந்தவர். அவர் கருமை நிறமுடையவராக இருந்ததோடு எத்தியோப்பியாவைச் சேர்ந்தவரும் ஆவார். இருந்தும் நபி (ஸல்) அவர்களோ அல்லது நபித்தோழர்களோ அவரை ஒரு போதும் பிரித்துப் பார்க்கவில்லை. முஸ்லிம்கள் அனைவரும் ஒரே சகோதரர்கள் என்ற வகையில் அன்றைய நபித்தோழர்கள் மத்தியில் ஒற்றுமை நிலவியது. அதனால் அபூபக்கர் (ரழி) அவர்கள் இவரை அடிமைத் தளையில் இருந்து விடுவித்தார்கள். மஸ்ஜிதுல் நபவியில் முஅத்தினாகவும் பணியாற்றினார்கள்.

மக்கா வெற்றியின் போது பெரும் பெரும் நபித்தோழர்கள் மக்காவில் இருக்கின்ற சந்தர்ப்பத்திலே நபி (ஸல்) அவர்கள் கஃபாவுக்கு யாரை அழைத்துச் செல்வார் என்று எதிர்ப்பார்த்திருந்தனர். அச்சமயம் ஆரம்பத்தில் அடிமையாகவும், நிறத்திலே கருமையாகவும் இருந்த பிலால் (ரழி) அவர்களை நபி (ஸல்) அவர்கள் கஃபாவுக்குள்ளே அழைத்துச் சென்றார்கள். இவைகள் அனைத்துமே இஸ்லாம் சகோதரத்துவத்திற்கு அளித்துள்ள முக்கியத்துவத்தை எடுத்தியம்புகிறது. இதே போன்று சகோதரத்துவத்திற்கு எடுத்துக்காட்டாக ஏராளமான நிகழ்வுகள் நடந்திருப்பதையும் இஸ்லாமிய வரலாற்று பதிவுகள் எடுத்தியம்புகின்றன.

அந்த வகையில் மக்களுக்கு மத்தியில் இருக்கும் குலங்களும் கோத்திரங்களும் அவர்களுக்கு மத்தியில் ஒருவருக்கொருவர் அறிந்துக் கொள்வதற்கான அல்லாஹ்வின் ஏற்பாடு என்று இஸ்லாம் குறிப்பிட்டிருக்கிறது. அவர்களுக்கு மத்தியில் எவ்வித உயர்வு தாழ்வு கிடையாது என்றும் இஸ்லாம் கூறுகின்றது.

'மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம். நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ அவர் தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்.' (அல்குர்ஆன்) 49:13)

இந்த அல்குர்ஆன் வசனம் அல்லாஹ் மனிதனை ஒரே ஆண் ஒரே பெண்ணிலிருந்து படைத்தான் என்பதன் மூலம் அனைத்துப் பாகுபாடுகளுக்கும் ஆரம்பத்திலேயே முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது. வசனத்தின் இறுதியில் அல்லாஹ்விடத்தில் கண்ணியமிக்கவர் யார் என்பதற்கு ஒரு அளவுகோலையும் தருகின்றது. அவர்களே அல்லாஹ்விடத்தில் கண்ணியமிக்கவர். அவர்கள் தான் இறையச்சமுடையவர்கள். அரபிக்கும் அஜமிக்கும், அஜமிக்கும் அரபிக்கும் மத்தியிலும் கருப்பனுக்கும் வெள்ளையனுக்கும்,வெள்ளையனுக்கும் கருப்பனுக்கும் மத்தியிலும் வித்தியாசங்கள் கிடையாது அனைவருமே ஆதமில் இருந்து வந்தவர்கள். ஆதமோ மண்ணால் படைக்கப்பட்டவர்" என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: அஹ்மத்)

இவ்வாறாக இனம், நிறம், மொழி, பிரதேசம் என்றெல்லாம் பாகுபாடு காட்டாமல் சகோதரத்துவத்தை முக்கியத்துவம் அளித்திருக்கிறது இஸ்லாம். ஆதம் (அலை) அவர்களுடைய மக்களாகிய நாம் அனைவரும் சகோதரர்களே. ஒரே குடும்பத்தவரே, இனத்தவரே என்ற தூர நோக்குடன் கூடிய பரந்த பார்வையை உலகிற்கு அளித்திருக்கிறது இஸ்லாம்.

மனித குலம் ஓர் உடலுக்கு ஒப்பாக்கப்பட்டுள்ளது. உடலின் பல்வேறு உறுப்புக்களை மனித இனத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு உவமையாகக் கூறுகிறது.

உடலின் ஓர் உறுப்பு நோய் வாய்ப்பட்டால் அதன் இதர உறுப்புகளும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றவோ, அதே போன்று மனிதர்களில் ஒரு பிரிவு துன்பத்திற்குள்ளாகினால் மற்றப் பிரிவுகளும் நிச்சயமாகப் பாதிக்கப்படும் என்று விளக்குகிறது இஸ்லாம். எனவே ஒரு தனி நபர் இன்னல்களுக்கு உள்ளானால் அவருடைய இன்னல்களை நீக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் மனித சமுதாயம் முழுமைக்குமே உரியது எனலாம்.

மௌலவி
**எம்.யூ.எம். வாலிஹ்...**
(பாரி, (அல் அஸ்ஹரி), வெலிகம.



## சுவர்க்கத்திற்கான பாதை

ஏக இறைவன் அல்லாஹ் மீது நம்பிக்கை கொண்ட நல்லடியார்களின் விருப்பம் இந்த உலக வாழ்க்கையின் நன்மைகளை விடவும் மறுமை வாழ்க்கையில் இறைவனின் திருப்பொருத்தத்தைப் பெற்று சுவர்க்கத்தில் வாழ வேண்டும் என்பதாகத்தான் இருக்கும்.

ஆனால் மனிதர்கள் விரும்பும் அந்த சுவர்க்கத்துக்கான பாதை எளிதாக இருப்பதில்லை. மாறாக இறைவனின் சோதனைகளுடன், உலக வாழ்வில் தற்காலிக இன்பங்களின் சோதனைகளும் நிறைந்ததாக இருக்கும்.

அந்த வகையில் அல் குர்ஆன் 'அல்லாஹ் எந்த மனிதரையும் அவரது சக்திக்கு மேல் (பொறுப்புகளை சுமத்தி) சிரமப்படுத்துவதில்லை. அவர் சம்பாதித்த நன்மையின் பலனும் அவருக்கே. அவர் சம்பாதித்த தீமையின் விளைவும் அவருக்கே' (2:286) என்று குறிப்பிட்டுள்ளது.

இந்த வசனத்தின் படி இன்பங்களும் துன்பங்களும் நிறைந்ததும் சூழந்ததும் தான் மனித வாழ்க்கை. அதனால் உலக வாழ்வில் சோதனைகள், துன்பங்கள் ஏற்படும். அதேபோன்று மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் அனுபவிக்க நேரிடும். இரண்டும் மாறிமாறி வரக்கூடியவை. அதுவே மனித வாழ்க்கையாகும். ஆனால் இவை எதுவும் மனித சக்திக்கு அப்பாற்பட்டதாக இருக்காது.

அதனால் சோதனைகள், துன்பங்கள் கண்டு துவண்டுவிடவோ, மகிழ்ச்சியிலும் இன்பத்திலும் மெய் மறந்து திளைத்து விடவோ கூடாது. மாறாக எல்லா சந்தர்ப்பங்களிலும் அல்லாஹ்விடம் சரணடைந்து அவற்றில் வெற்றி பெற வேண்டும்.

குறிப்பாக அல் குர்ஆன் வசனத்தில், 'யார் என்ன நன்மை சம்பாதித்தார்களோ அதன் பலன் அவருக்கே, அது போல அவர் தீமைகளை சம்பாதித்திருந்தால் அதன் விளைவும் அவருக்கே' என்று அல்லாஹ் குறிப்பிட்டிருக்கிறான்.

அதனால், நாம் நன்மைகள் செய்திருந்தால் அதன் பலனைக்கொண்டு நமக்கு வரும் சோதனைகளில் வெற்றி பெற்றிடலாம். அதேநேரம் நாம் தீமைகள் செய்திருந்தால் அதற்குரிய பலனை நாம் அனுபவித்தே தீர வேண்டும் என்பதும் இறைவனின் கட்டளையாகும்.

இறைவனின் தரப்பில் இருந்து வரும் சோதனைகளை வென்று வாழ்வில் முன்னேற விரும்பும் மனிதன், இறைவனிடம் எப்படி பிரார்த்தனை செய்யவேண்டும் என்பதற்கும் இஸ்லாம் வழிகாட்டியுள்ளது.

இது தொடர்பில் அல் குர்ஆன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. "எங்கள் இறைவனே! நாங்கள் மறந்து போயிருப்பினும், பிழை செய்திருப்பினும் நீ எங்களை குற்றம் பிடிக்காதே. எங்கள் இறைவனே! மேலும், எங்களுக்கு முன் சென்றோர் மீது நீ பாரத்தை சுமத்தியது போல் எங்கள் மீதும் பாரத்தை சுமத்தி விடாதே. எங்கள் இறைவனே! மேலும் நாங்கள் தாங்க இயலாத பாரத்தை எங்கள் மீது சுமத்தி விடாதே. எங்களைப் பொறுத்தருள்வாயாக! எங்களுக்கு மன்னிப்பு வழங்குவாயாக! எங்கள் மீது கருணை பொழிவாயாக! நீயே எங்கள் பாதுகாவலனாவாய்! (சத்தியத்தை) நிராகரிக்கும் மக்களுக்கு எதிராக வெற்றிகொள்ள எங்களுக்கு உதவி செய்வாயாக!".

பாவம் செய்த மனிதர்கள் இறைவனிடம் சரணடைந்து வணங்கி மன்னிப்பு கேட்க வேண்டும். அப்போது தனது கருணை ஊடாக மனிதர்களின் பாவங்களை இறைவன் மன்னிக்கின்றான் என்று பின்வரும் அல் குர்ஆன் வசனங்கள் எடுத்தியம்புகின்றன.

"நன்கு அறிந்து கொள்ளுங்கள்: அறியாமையின் காரணமாக, ஏதேனும் பாவச் செயலை செய்துவிட்டாலும், உடனடியாக எவர்கள் பாவ மன்னிப்புக் கோருகின்றார்களோ அவர்களின் பாவ மன்னிப்பை ஏற்றுக்கொள்வதே அல்லாஹ்வின் பொறுப்பாகும். ஆகவே அத்தகையோரை நோக்கி அல்லாஹ் தன் கருணைப் பார்வையை மீண்டும் திருப்புகின்றான். மேலும், அல்லாஹ் அனைத்தையும் நன்கறிந்தவனாகவும், நுண்ணறிவுடையவனாகவும் இருக்கின்றான்.

(அல் குர்ஆன் 4:17).

'மேலும் அவர்கள் எத்தகையோர் எனில், மானக்கேடான செயலைச் செய்துவிட்டால் அல்லது (ஏதேனும் பாவங்கள் செய்து) தமக்குத்தாமே அநீதி இழைத்துக் கொண்டால், உடனே அவர்கள் அல்லாஹ்வை நினைத்து, தம் பாவங்களுக்காக அவனிடம் மன்னிப்புக் கோருவார்கள். (ஏனெனில்) அல்லாஹ்வைத் தவிர பாவங்களை மன்னித்தருள்பவன் வேறு யார்? மேலும் தாம் செய்தவற்றில் அறிந்து கொண்டே பிடிவாதமாக இருக்கமாட்டார்கள்.

(அல் குர்ஆன் 3:135).

இந்த வசனங்களின் படி, பாவமன்னிப்பு கோருபவர்களை அல்லாஹ் மன்னித்து அருள்புரிகின்றான் என்பது தெளிவாகிறது. அத்தோடு அவர்களுக்கு சிறந்த நற்கூலியையும் அவன் அளிக்கின்றான். அதுதான் சுவர்க்கம். "இத்தகையோரின் கூலி, அவர்களுடைய இறைவனிடம் இருந்து கிடைக்கின்ற மன்னிப்பும், கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும் சுவனங்களுமாகும். அவர்கள் அங்கு என்றென்றும் தங்கி வாழ்வார்கள். நற்செயல்கள் புரிவோருக்கான கூலி எத்துணை நன்றாய் இருக்கின்றது"

(அல் குர்ஆன் 3:136).

'நிச்சயமாக அல்லாஹ் பாவங்களை விட்டு மீளுபவர்களை நேசிக்கிறான்'.

(அல் குர்ஆன் 2:222)

'எல்லோரும் பாவம் செய்பவர்கள் தான். அவர்களில் சிறந்தவர் யார் எனில், தனது பாவத்திற்கு பரிகாரம் தேடுபவர்கள்தான்' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஆகவே அல்லாஹ் காட்டிய வழியில், நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்து காட்டிய பாதையில் நமது வாழ்க்கையை அமைத்துக்கொள்வோம். பாவங்களில் இருந்து விலகி நன்மைகளை செய்வோம். அறிந்தும் அறியாமலும் பாவம் செய்துவிட்டால், அதற்காக வருந்தி உடனே இறைவனிடம் பாவ மன்னிப்பு கோருவோம். அதன் ஊடாக சுவர்க்கத்தை பிரதிபலனாக அடைந்து கொள்ளலாம்.

**பிந்த் இஸ்மாயீல்...**

## ஷைத்தானின் சூழ்ச்சி



ஆகுக... என்ற ஓர் சொல்லால் வானம் பூமியிலுள்ள அனைத்து உயிர் உள்ள, உயிர் அற்ற அனைத்தையும் படைத்து பரிபாலிக்கின்ற வல்லமை கொண்ட எல்லாம் வல்ல நாயன் அல்லாஹ்வாவான். ஆதம் (அலை) அவர்களையும் ஹவ்வா (அலை) அவர்களையும் சிருஷ்டித்து சுவர்க்க இல்லத்தில் இணைந்து சில நிபந்தனைகளுடன் அவன் வாழ வைத்தான். இவர்களில் பொறாமை கொண்ட ஷைத்தான் இவர்களை நெருக்கடிக்கு உள்ளாக்க பெரும் முயற்சி எடுத்துக் கொண்டான்.

அதனால் அல்லாஹ்வினால் புசிக்க வேண்டாம் என்று கூறி தடுக்கப்பட்ட கனியை அவர்கள் புசிக்க வைத்தான். அதன் விளைவாக அல்லாஹ்தஆலா ஆதம் (அலை) மற்றும் ஹவ்வா (அலை) ஆகிய இருவரையும் சுவர்க்கத்தை விட்டு வெளியேற்றி உலகிற்கு அனுப்பி வைத்தான்.

அதனால் அவர்கள் பல துன்பங்களுக்கு முகம் கொடுத்தார்கள். ஒருவரை ஒருவர் பிரிந்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. அல்லாஹ்வுக்கு மாறு செய்து நடந்த குற்றத்திற்குப் பாவ மன்னிப்புக் கேட்டு அலைந்து திரிந்தனர். இறுதியில் நபி (ஸல்) அவர்களின் பெயரால் கேட்கப்பட்ட 'துஆ'வை அல்லாஹ் ஏற்று அவர்களுக்கு மன்னிப்பளித்தான். அதன் பின்னர் இருவரும் ஒன்று சேர்ந்து வாழ்ந்தனர். ஆதம் (அலை) ஹவ்வா (அலை) ஆகிய இருவரிலும் அல்லாஹ் பாசத்தையும், நேசத்தையும் உருவாக்கினான். அதன் பயனாக இருவரும் ஒருவருக்கொருவர் பிரியாத அன்பு கொண்ட கணவன், மனைவியாக வாழ்ந்தனர்.

அவர்களது வாழ்வொழுங்கு குறித்து அல் குர்ஆனும் நபிமொழிகளும் தெளிவாக எடுத்தியம்பியுள்ளது. அதனால் இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு அமைய வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும். அதுவே அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்பாகும். அப்போது ஷைத்தானின் சூழ்ச்சிகளும் சதிகளும் ஒரு போதும் எடுபடாது எனலாம்.

**மஸ்ஸல பேருவளை...**

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஒகஸ்ட் 2 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 04.44
லுஹர் - 12.18
அஸர் - 03.39
மஃரிப் - 06.31
இஷா - 07.44

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆடி 17
ராகுகாலம் : காலை : 10.33 - 12.03வரை
சுபநேரம் : காலை : 06.03- 07.39வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# ஜனாதிபதி நிதிய புலமைப்பரிசில் கொடுப்பனவு மாணவர்களின் கணக்குகளில் வைப்பிடப்படும்

## குறுஞ்செய்தி (SMS) ஊடாக விபரங்கள் அறிவிப்பு

ஜனாதிபதி நிதிய புலமைப் பரிசிலின் இம்மாதத்துக்கான கொடுப்பனவுகள் மாணவர்களின் வங்கிக்கணக்குகளில் வைப்பீடு செய்யப்படவுள்ளது.

புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் வங்கிகளில் வைப்பு செய்யப்படும் போது, புலமைப்பரிசில் பெறுபவர்கள் அனைவருக்கும் இது குறித்து குறுஞ்செய்தியில் (SMS) தெரிவிக்கப்படும். 2022/2023 க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி பெற்று, க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 3,000 மாணவர்களுக்கு மாதாந்தம் 6,000 வீதம் வழங்கப்படும் புலமைப்பரிசில் தவணைத் தொகையின் 17 ஆவது தவணையும், 2023/2024 க.பொ. த. சாதாரண தரத்தில் சித்தி பெற்று, க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 6,000 மாணவர்களுக்கு மாதாந்தம் 6,000 ரூபா வீதம் வழங்கப்படும் புலமைப்பரிசில் தவணைத் தொகையின் 06 ஆம் தவணை உரிய கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. அத்துடன், தரம் 01 தொடக்கம் தரம் 11 வரை கல்வி கற்கும் 1,00,000 மாணவர்களுக்கு மாதாந்தம் 3,000 ரூபா வீதம் வழங்கப்படும் புலமைப்பரிசில் தொகையின் 05 ஆவது தவணை, பிரிவெனா மற்றும் பிக்குனிமார்களுக்கும், பிரிவெனா (சாதாரண தரம்)/ க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி பெற்று, "பிராசீன" பரீட்சைகள் அல்லது க.பொ.த உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பிக்கு மாணவர்கள் உட்பட 500 மாணவர்களுக்கும் மாதாந்தம் வழங்கப்படும் 08

# புத்தாக்குநர் விருது விழாவில் பிரதமர் தினேஷ்



20172020 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான சிறந்த புத்தாக்குநர்களுக்கான ஜனாதிபதி விருது வழங்கும் நிகழ்வு நேற்று (01) கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வு இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 08

# சொத்துக்களை பகிரங்கப்படுத்தல் இணையங்களில் விபரங்கள்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரதமர் உட்பட 100 க்கும் மேற்பட்ட உயர் அதிகாரிகளின் சொத்து விபரங்கள் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளன.

இதுதொடர்பான விபரங்களை https://ads.ciaboc.lk என்ற இணையதளம் மூலம் அறிந்துகொள்ள முடியும். வங்கிக் கணக்குகளில் உள்ள நிலுவைகள் 08

# 'காஸா சிறுவர் நிதியம்' பங்களிப்பு காலம் ஜூலை 31இல் முடிந்தது

## வைப்புச் செய்வதை நிறுத்தவும்



பலஸ்தீனத்தின் காஸா பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் இராணுவ நிலைமை காரணமாக இடம்பெயர்ந்த சிறுவர்களுக்கு அடிப்படைத் தேவைகளை வழங்குவதற்காக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவின் படி ஸ்தாபிக்கப்பட்ட 'காஸா 08

# தேர்தல் சட்டத்தை மீறியதாக 125 முறைப்பாடுகள் பதிவு

தேர்தல் சட்டத்தை மீறியமை உள்ளிட்ட 125க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நியமனம் வழங்குதல், இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு வழங்குதல் ஆகியன இதற்குள் அடங்குவதாக ஆணைக்குழுவின் முறைப்பாட்டு பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தேர்தல் காலப்பகுதியில் இதுவரை கிடைத்துள்ள முறைப்பாடுகளில் பெரும்பாலானவை, அரச சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துகின்றமை தொடர்பிலேயே கிடைத்துள்ளதாக பெஃப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

# சுற்றுலாத்துறை வருமானம் 06 மாதங்களில் 1,557 மில். டொலர்களாக அதிகரிப்பு

## மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பு 5.7 பில். டொலர்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

சுற்றுலாத்துறை மூலமான வருமானம் கடந்த ஆறு மாதங்களில் வெகுவாக அதிகரித்து வருவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அந்த வகையில் இந்த வருடத்தின் முதல் 6 மாதங்களில் சுற்றுலாத்துறை மூலமான வருமானம் 1,557 மில்லியன் அமெரிக்கன் டொலர்களாக




அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. 08

# உணவுகளால் நோய்கள் குணமாவதாக சமூக ஊடகங்களில் போலி விளம்பரங்கள்

சில நோய்களை உணவின் மூலம் குணப்படுத்த முடியுமென சமூக வலைதளங்களில் வெளியாகும் விளம்பரங்களை நம்பி ஏமாற வேண்டாமென, சுகாதார அமைச்சு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பிட்ட நிறுவனங்களின் பெயர்களைப் பயன்படுத்தி விளம்பரங்கள் செய்யப்படுவதாக, சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஆனந்த ஜெயலால் தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "பொதுவாக ஒரு உணவில் எதிர்பார்ப்பது சத்தும் மற்றும் நோய்களைத் தாங்கும் ஆற்றலும் தான். நோய்களைக் குணப்படுத்துவதை மருந்து 08

# மஞ்சள் மூடைகளுடன் கற்பிட்டியில் இருவர் கைது

## 749 கிலோ மஞ்சள் மூடைகளும் மீட்பு

(கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்)

கற்பிட்டி , உச்சமுனை தீவுப் பகுதியில் டிங்கி இயந்திர படகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 749 கிலோ மஞ்சள், கடற்படையினரால் நேற்று (31) மீட்கப்பட்டுள்ளது.

வடமேற்கு கடற்படை கட்டளையின் கற்பிட்டி கடற்படையினர் உச்சமுனை பகுதியில் மேற்கொண்ட விஷேட தேடுதல் நடவடிக்கையின் போது இந்த இயந்திரப் படகு சோதனைக்குட்படுத்தப்பட்டது.

அங்கு சந்தேகத்திற்கு இடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிங்கி இயந்திர படகை படையினர் சோதனை செய்தனர்.

இதன்போது இயந்திர 08



தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆடி மாதம் 17ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 முஹர்ரம் பிறை 26

**குறள் தரும் சிந்தனை**

கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து

கற்பவை கற்றுச், சினம் காத்து, அடக்கமெனும் பண்பு கொண்டவரை அடைந்திட அறமானது வழிபார்த்துக் காத்திருக்கும்.

# நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி விஷேட குழுக்கள்

ஹமாஸின் அரசியல் பிரிவுத் தலைவரும் பலஸ்தீனின் முன்னாள் பிரதமருமான இஸ்மாயீல் ஹனிய்யா ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் வைத்து தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளமை மத்திய கிழக்கில் உச்சபட்ச யுத்த பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஈரான் இஸ்லாமியக் குடியரசின் புதிய ஜனாதிபதி மசூட் பெசஸ்கியானின் பதவியேற்பு வைபவத்தில் விஷேட விருந்தாளிகளில் ஒருவராகக் கலந்து கொள்ள தெஹ்ரான் சென்றிருந்த சமயமே இஸ்மாயீல் ஹனிய்யா இலக்கு வைத்து தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார். அதனையடுத்தே இந்த உச்சபட்ச பரபரப்பு உருவாகியுள்ளது.

இஸ்மாயீல் ஹனிய்யா மீதான தாக்குதலுக்கும் அவரது படுகொலைக்கும் காரணகர்த்தா இஸ்ரேல் எனக் குற்றம் சாட்டியுள்ள ஈரான், இத்தாக்குதலுக்கு கடும் பதிலடி கொடுக்கப்படும் என்றுள்ளது.

இதனைத் தொடர்ந்து மத்திய கிழக்கில் போர்ப்பதற்றம் தீவிரமடைந்துள்ளது. காஸா மீதான யுத்தம், பெய்ரூட் மீதான தாக்குதல், யெமன் ஹூதைதா துறைமுகத்தின் மீதான தாக்குதல்கள் என்பன இதற்கு வலு சேர்ப்பதாகவும் அமைந்துள்ளன. அதிலும் ஈரானின் அரச விழாவான அந்நாட்டின் புதிய ஜனாதிபதியின் பதவி ஏற்பு வைபவத்தில் விஷேட விருந்தாளியாகக் கலந்து கொண்டிருந்த ஹனிய்யா இலக்கு வைத்து கொல்லப்பட்டிருப்பது இந்த கொதிநிலையை தீவிரப்படுத்தியுள்ளது. இந்த உச்சபட்ச பரபரப்பை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. இதன் விளைவாக ஈரானிலும் உலகிலும் பாதுகாப்பு மற்றும் பொருளாதார ரீதியில் தாக்கங்களும் பாதிப்புக்களும் ஏற்படலாம். அதன் விளைவாக இலங்கைக்கும் பாதிப்புகளும் தாக்கங்களும் ஏற்படவே செய்யும்.

இந்த யுத்த பதற்றம் ஏற்பட்டுள்ள பிராந்தியம் இலங்கையில் இருந்து பல ஆயிரம் கிலோ மீற்றர்களுக்கு அப்பால் காணப்படுகின்ற போதிலும் நெருக்கடியான நிலை ஏற்படுமாயின் அதன் விளைவான தாக்கங்களுக்கும் பாதிப்புகளுக்கும் இந்நாட்டு மக்களும் முகம் கொடுக்கவே நேரிடும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஏனெனில் உலகில் எல்லா நாடுகளும் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டதாகவும் தொடர்பு கொண்டவையாகவும் உள்ளன. நாடுகளுக்கு இடையில் சமூக, பொருளாதார ரீதியிலான தொடர்பாடல்கள் பெரிதும் அதிகரித்து காணப்படுகின்றன. அதனால் ஒரு நாட்டில் அல்லது ஒரு பிராந்தியத்தில் பாதிப்புக்கள், தாக்கங்கள் ஏற்பட்டால் அதன் தாக்கங்களும் பாதிப்புக்களும் ஒவ்வொரு நாட்டிலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ பிரதிபலிக்கவே செய்யும்.

அதனால் இந்நாட்டு மக்கள் சமூக, பொருளாதார ரீதியிலான தாக்கங்களுக்கும் பாதிப்புகளுக்கு முகம் கொடுக்க இடமளிக்கலாகாது. நாட்டினதும் மக்களினதும் தேவைகளுக்கு ஏற்ப அனைத்து வசதிகளையும் மக்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும். அதற்கு ஏற்ப முன்கூட்டியே திட்டங்களை வகுத்து வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவது மிகவும் அவசியம்.

அந்த வகையில் நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட்டுவரும் அரசின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஹமாஸ் தலைவரின் படுகொலையைத் தொடர்ந்து உருவாகிவரும் நிலைமை குறித்து விஷேட கவனம் செலுத்தியுள்ளார்.

இவ்வாறான பின்புலத்தில் மூன்று விஷேட குழுக்களை அவர் நியமித்திருக்கிறார். தேசிய பாதுகாப்பு தொடர்பில் ஒரு குழுவும் பொருளாதார ரீதியில் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்து ஆராயவென மற்றொரு குழுவும் நியமிக்கப்பட்டிருப்பதோடு இந்த இரு குழுக்களது செயற்பாடுகளைக் கண்காணிக்கவென ஜனாதிபதி, பிரதமரை உள்ளடக்கிய உயர்மட்ட குழுவொன்றும் அமைக்கப்பட்டு இருக்கிறது. இக்குழுக்கள் சம்பந்தப்பட்ட அமைச்சர்களையும் உயரதிகாரிகளையும் உள்ளடக்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.

உண்மையில் இது காலத்திற்கு அவசியமான நடவடிக்கையாகும். அதுவே சமூக நல ஆர்வலர்களின் கருத்தும் கூட.

இலங்கை மக்கள், மத்திய கிழக்கு நாடுகளில் பெருமளவில் தொழில் புரிகின்றனர். அதேநேரம் எரிபொருள் மற்றும் எரிவாயுவை மத்திய கிழக்கில் இருந்தே இந்நாடு பெற்றுக் கொள்கின்றது. அதனால் நாடு என்ற வகையில் மத்திய கிழக்கில் ஏற்பட்டு வரும் பதற்ற நிலை குறித்து கூடுதல் கவனம் செலுத்துவது இன்றியமையாத விடயமாகும். அதற்கு ஏற்பவே ஜனாதிபதி இந்நடவடிக்கையை மேற்கொண்டிருக்கின்றார். இதனை மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர்.

நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட்டு வருவதை இந்நடவடிக்கையின் ஊடாகவும் ஜனாதிபதி மீண்டுமொரு தடவை உறுதிப்படுத்தியுள்ளார். நாட்டினதும் மக்களினதும் மேம்பாட்டுக்காக ஜனாதிபதி தலைமையில் அர்ப்பணிப்புக்களுடன் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். மக்கள் நெருக்கடிகள் அற்ற வாழ்வைப் பெற்றுக்கொள்ள அவை வழிவகுக்கும். மக்களின் எதிர்பார்ப்பும் அதுவேயாகும்.

editor.tkn@lakehouse.lk

# ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நூல் வெளியீடு, இலக்கிய அரங்கு

## பிரிஸ்பேர்ன் மாநகரில் ஞாயிறன்று வைபவம்

அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் அனுசரணையில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடும் இலக்கிய அரங்கும் பிரிஸ்பேர்ன் (Brisbane) மாநகரில் எதிர்வரும் ஞாயிறு நான்காம் திகதி நடைபெற உள்ளன.

பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடு பிரிஸ்பேர்னில் உள்ள மவுண்ட் ஒமாணி நூலக மண்டபத்தில் நடைபெற உள்ளது. *(Mt Ommaney Library, Mt Ommaney Shopping Centre, 171 Dandenong Road, Mt Ommaney, Brisbane, Queensland)*

எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 15.30 முதல் 17.30 மணி வரை இவ் வெளியீட்டு நிகழ்வு நடைபெற உள்ளது.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையை ஈழத்தின் மூத்த பெண் எழுத்தாளர் 'தாமரைச் செல்வி' திருமதி. ரதிதேவி கந்தசாமி வழங்குவார். அத்துடன் தமிழ் வாழ்த்துப் பாடலை பிரிஸ்பேர்ன் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் பாடவுள்ளனர்.











இந்நிகழ்வின் தலைமையுரையை அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் மூத்த செயற்பாட்டாளர் செந்தில் குமரன் ஆற்றுவார். 'பாலஸ்தீனம் எரியும் தேசம்' நூல் அறிமுகவுரையை சிவா கைலாசம் நிகழ்த்துவார்.

அதன்பின் 'ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்' நூலின் அறிமுகவுரையை டொக்டர் துஷ்யந்தன் திசைநாயகம் ஆற்றுவார்.

'இல ங்கை இதழியலில் சிவகுருநாதன்' நூலின் அறிமுகவுரையை ரஜினி காந்த் ஜெயராமன் ஆற்றுவார்.

அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் அனுசரணையில் நடைபெறும் நூல் வெளியீடு மற்றும் இலக்கிய அரங்கின் ஏற்புரையை ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்துவார்.

# ஊவா மாகாண பொது நிவாரண நடமாடும்சேவை மஹியங்கணையில்

ஊவா மாகாண சபை மக்கள் பிரச்சினைகளை தீர்க்கும் நோக்கில் கிராமம் தோறும் சென்று 'ஊவா வெல்லஸ்ஸ ஜன சஹன' எனும் நடமாடும் சேவையை நடத்தி வருகின்றது.மூன்றாவது நடமாடும் சேவை மஹியங்கணையில் அண்மையில் இடம்பெற்றது.

ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மிலின் பணிப்புரையின் ஆரம்பிக்கப்பட்ட 'ஜன சஹன' நடமாடும் சேவை மஹியங்கனை உள்ளூராட்சி மன்ற வளாகத்தில் இடம்பெற்றதுடன், மக்களின் பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகளும் உடனுக்குடன் வழங்கப்பட்டன.



இதன் போது பாடசாலை மாணவர்களுக்கு கல்வி கற்பதற்கான உதவித் தொகை, காணி உறுதிப்பத்திரம், சுய தொழில் உதவி, மாற்றுத்திறனாளிகளுக்கு உபகரணங்கள் போன்றவையும் வழங்கப்பட்டன.

ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில், இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் அனுர விதானகமகே, ஊவா மாகாண பிரதம செயலாளர் தமயந்தி பரணகம உள்ளிட்டோரால் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

ஊவாவின் பின்தங்கிய பிரதேசமான மஹியங்கணை ஆதிவாசிகளின் தலைவைர் உள்ளிட்ட ஆதிவாசிகளும் கலந்து கொண்டதோடு, அவர்களது பிரச்சனைகள் தீர்த்து வைக்கப்பட்டன. பிரதேசவாசிகளின் நன்மை கருதி பல வேலைத் திடடங்களும் இடம் பெற்றன.

**எம்.ஏ.எம்.ஹசனார்...**
*(ஊவா சுழற்சி நிருபர்)*

# ஊடகப்பயிற்சி நெறியின் மூன்றாம் குழு இறுதி அமர்வு

ஆர்.ஜே.மீடியா ஊடக வலையமைப்பு மற்றும் எழுத்துச்சரம் சஞ்சிகை நாடளாவிய ரீதியில் வழங்கும் இரண்டு மாதகால ஊடகப் பயிற்சி நெறியானது பத்து அமர்வுகளாக சிறந்த வளவாளர்களைக் கொண்டு நடத்தப்பட்டு வந்தது.

இக்கற்கை நெறியின் இறுதியில் வழங்கப்படும் வானொலி நேரடிப் பயிற்சி மற்றும் கலை நிகழ்ச்சி இரண்டாம் மற்றும் மூன்றாம் குழுவை மையப்படுத்தி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கொத்மலை ஊடகப் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

இதில் செய்தி வாசிப்பு, வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பு, சமூக ஊடகங்களை உருவாக்குதலும் கையாளும் முறையும், புகைப்படம் மற்றும் காணொளி செம்மையாக்கம், மேடை அறிவிப்பு மற்றும் ஏனைய ஊடகங்களை உள்ளடக்கிய கற்றல் பயிற்சி போன்றன கற்பிக்கப்பட்டதோடு இதில் நாடளாவிய ரீதியில் பலரும் கலந்து கொண்டனர்.

இதில் மாணவர்களுக்கு வானொலி நேரடிப் பயிற்சி வழங்கப்பட்டது. அத்தோடு இரண்டு பகுதிகளைக் கொண்ட இந்த அமர்வில் கலை நிகழ்ச்சியும் மாணவர்களின் அனுபவப் பகிர்வும் இரண்டாம் மற்றும் மூன்றாம் குழு மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்றது.



இந்நிகழ்வில் ஆர்.ஜே.மீடியா வலையமைப்பின் பணிப்பாளரும், வானொலி அறிவிப்பாளரும், ஊடக பயிற்றுவிப்பாளருமான ஏ.எம் இன்ஷாப், தேசிய கல்வி நிறுவகத்தின் 'அல்பா யூ' இணைய வானொலி தொகுப்பாளரும், ஊடக கற்கைகளுக்கான வளவாளருமான கே.எம். எம்.சர்ஜதீன், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன கொத்மலை ஊடகக் கற்கைகள் நிலையத்தின் இணைப்பாளர் கபில குமார அரத்தன, ஆர்.ஜே.மீடியா வலையமைப்பின் பிரதிப் பணிப்பாளரும், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவியுமான பாத்திமா அஸ்கியா முபாறக், ஆர்.ஜே மீடியாவின் கண்டி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சுமையா சுஹைப் உட்பட பலரும் கலந்து கொண்டார்கள்.

**றிஸ்வான் சாலிஹூ...**
*(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)*

# மக்காவில் 9ஆவது சர்வதேச இஸ்லாமிய மாநாடு



இஸ்லாமிய நாடுகளின், அறக்கட்டளை மற்றும் இஸ்லாமிய விவகாரங்களுக்கான அமைச்சர்கள் மற்றும் அதன் நிர்வாகிகளுக்கான ஒன்பதாவது மாநாடு மக்காவில் இடம்பெற உள்ளது. சவூதி அரேபிய மன்னர், இரண்டு புனித பள்ளிவாசல்களின் சேவகர் ஸல்மான் அவர்களின் பணிப்புரைக்கு அமைவாக இஸ்லாமிய விவகாரங்கள், அழைப்பு மற்றும் வழிகாட்டல் அமைச்சு இதை ஏற்பாடு செய்துள்ளது.



குறித்த இம்மாநாடு ஹிஜ்ரி 1444, முஹர்ரம் 28 தொடக்கம் ஸபர் 1 வரை 'மிதமான கொள்கைகளை ஊக்குவித்தல், அதன் முக்கியத்துவத்தை வேரூன்றச் செய்வதில் இஸ்லாமிய விவகார அமைச்சகங்களின் வகிபாகம்' எனும் தொனிப்பொருளில் இடம்பெறவுள்ளது.

பத்து அமர்வுகளாக இடம்பெறவுள்ள இந்த மாநாட்டில், 60 நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள், முப்திகள், இஸ்லாமிய நிறுவனங்களின் தலைவர்கள் கலந்துகொண்டு ஆய்வுகளையும் கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவுள்ளனர்.

இஸ்லாமிய விவகாரங்கள், அழைப்பு மற்றும் வழிகாட்டல் அமைச்சர் மற்றும் மாநாட்டின் பொதுமேற்பார்வையாளர் கலாநிதி அஷ்ஷேஹ் அப்துல் லத்தீப், மன்னர் ஸல்மான், பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் ஸல்மான் ஆகியோருக்கும், அவர்கள் இருவரும் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்கள் மீது கொண்டுள்ள கரிசனைக்காக தனது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொண்டார்.

உரிய இலக்குகளை அடையவும், பயன்மிக்க ஒத்துழைப்புகளை வளர்க்கவும், இஸ்லாமிய உலகில் இஸ்லாமிய விவகாரங்கள் மற்றும் அறநிலை துறை அமைச்சர்கள் மிதமான, நடுநிலையான கொள்கைகளை கடைப்பிடிப்பதற்கும், முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை அதன் அடிப்படையில் கையாள்வதற்கும் இந்த மாநாடு வழிகோலும் என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மாநாட்டில் மிதமான கொள்கைகள் மற்றும் விழுமியங்களை ஊக்குவித்தல், பொதுவான இஸ்லாமிய விழுமியங்களை பலப்படுத்தல், சகிப்புத்தன்மை, சகவாழ்வு மற்றும் தீவிரவாத வளர்ச்சிகளை எதிர்கொள்வதில் இஸ்லாத்தின் வகிபாகம், மதவெறி, பயங்கரவாதம் போன்றவற்றை எதிர்கொள்வதற்கான செயற்திட்டம், வெறுப்புப் பேச்சுகள் மற்றும் தீவிரவாதக் கருத்துகளிலிருந்து மிம்பர் மேடைகளை பாதுகாப்பதன் முக்கியத்துவம், மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதில் அறநிலைக்கட்டலையின் பங்களிப்பு, பள்ளிகளை கட்டுதல், அதை நிர்வகித்தல், இமாம்கள், ஹதீப்கள், முஅத்தின்கள் மற்றும் தாயிகளை நியமித்தல், அவர்களுக்கு வழங்கப்படும் நிகழ்ச்சி நிரல்கள் போன்றவற்றில் இஸ்லாமிய விவகாரங்கள் மற்றும் அறக்கட்டளைகள் அமைச்சகங்களின் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளல் போன்ற விடயங்கள் விவாதிக்கப்படவுள்ளன.

அதுபோல் தகுதியின்றி வழங்கப்படும் பத்வாக்களின் விபரீதங்கள், உலக இஸ்லாமிய நாடுகளில் குடியுரிமையை வலுப்படுத்தல், நவீன தகவல் தொடர்பு சாதனங்களின் ஊடாக குறித்த அமைச்சகம் அடையும் பயன் மற்றும் அதன் ஆபத்துகளிலிருந்து எவ்வாறு தவிர்ந்து கொள்ளல் போன்ற விடயங்களும் விவாதிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாநாட்டின் பிரதானமான நோக்கம் சர்வதேச இஸ்லாமிய நாடுகளுக்கு மத்தியில் ஒற்றுமையை வலுப்படுத்துவதோடு இஸ்லாமிய விவகாரங்கள், அழைப்பு மற்றும் அறக்கட்டளைகள் விவகாரத்தில் அங்கத்துவ நாடுகளுக்கிடையே ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்துவதாகும்.



ஏனைய நாடுகளில் சிறுபான்மையினராக இருப்போர், தாம் வாழும் சமூகங்களுக்கு மத்தியில் தமது கொள்கை, கலாசாரம், பொழுதுபோக்கு அமசங்கள் என்பவற்றை பாதுகாத்துக் கொள்வதற்கான விடயங்களை ஆராய்தலும் இம்மாநாட்டின் நோக்களில் ஒன்றாக உள்ளது.

**முஜாஹித் சுபைர்...**
(விரிவுரையாளர்)
நத்வதுல் உலமா அரபுக் கல்லூரி, மூதூர்

# ஜனாதிபதி வேட்பாளர்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வுகளை முன்வைக்கவேண்டும்

## வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு கோரிக்கை

(யாழ்.விசேட நிருபர்)



ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போகும் வேட்பாளர்கள் தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டுமென வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போகும் வேட்பாளர்கள் தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு நிலையான, கௌரவமான, உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு கோரி 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதலாம் திகதி சுழற்சி முறையிலான 100 நாட்கள் செயல்முனைவினை ஆரம்பித்து, 2022 நவம்பர் மாதமளவில் சமஷ்டி தீர்வுக்கான மக்கள் பிரகடனத்தை வெளியிட்டோம்.

இன்று வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களான நாம் எதிர்கொண்டுவரும் அரச இனவாத அடக்குமுறையில் இருந்து மீண்டு கௌரவமான, உரிமைகளை அனுபவிக்கும் பிரஜைகளாக வாழவேண்டுமாயின் நிலையான அரசியல் தீர்வே அவசியம்.

எமது தலைமுறையுடன் துன்பங்களை முடிவுக்குக் கொண்டுவர ஒரு மக்கள் சமூகமாக ஒருங்கிணைந்து செயற்படுவோம். இதற்கு அனைவரும் ஜனநாயக வழிநின்று செயற்படும் ஒரு சமூக இயக்கமாக பரிணமிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# தென்னிந்திய பிரபல நடிகை ரம்பா மீண்டும் யாழ்ப்பாணம் விஜயம்



(யாழ். விசேட நிருபர்)

தென்னிந்திய பிரபல நடிகை ரம்பா மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் புதன்கிழமை வருகை தந்துள்ளார்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக தனியார் விமானமொன்றில் நேற்று முன்தினம் மதியம் தனது குடும்பத்தினருடன் வருகை தந்துள்ளார். ரம்பா குடும்பத்தினரால் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட தனியார் பல்கலைக் கழகத்தின் ஓராண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்வதற்காகவும் ரம்பாவின் கணவரின் பிறந்தநாளை யாழ்ப்பாணத்தில் குடும்பத்தினருடன் இணைந்து கொண்டாடுவதற்காகவும் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

# அராலி களவத்துறை விளையாட்டு கழகத்தின் 77 ஆவது ஆடிப்பிறப்பு விழா

(சாவகச்சேரி விசேட நிருபர்)

அராலி களவத்துறை விளையாட்டு கழகத்தின் 77 ஆவது ஆடிப்பிறப்பு விழா அண்மையில் களவத்துறை மைதானத்தில் நடைபெற்றது.



இதன்போது பாரம்பரிய விளையாட்டுகளைத் தொடர்ந்து ஆடிப்பிறப்பு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட மென்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் கலந்து சிறப்பித்திருந்தார்.

மேலும் சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# எருவிட்டான் கிராமத்தில் பெண்களுக்கான விசேட விழிப்புணர்வு செயலமர்வு



(சாவகச்சேரி விசேட நிருபர்)

லைக்கா ஞானம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை மன்னார் எருவிட்டான் கிராமத்தில் பெண்களுக்கான உளவளம் மற்றும் மனநலம் சார்ந்த செயலமர்வு முன்னெடுக்கப்பட்டது.

காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை நடைபெற்ற மேற்படி செயலமர்வில் கிராமத்திலுள்ள பெண்கள் கலந்துகொண்டிருந்தனர்.

# சட்டவிரோத மணல் அகழ்வு

கொடிகாமம் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட கெற்பேலிப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 4 டிப்பர் வாகனங்கள் கொடிகாமப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விடத்தற்பளை கெற்பேலிப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் விரைந்து செயற்பட்ட பொலிஸார் அப்பகுதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதன்போது சந்தேகநபர் ஒருவர் தப்பித்துள்ள நிலையில் மற்றைய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட டிப்பர் வாகனங்களும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இளைஞன் மீது வாள்வெட்டு தாக்குதல்

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு தனது காதலியை சந்திக்க சென்ற இளைஞன் மீது வன்முறை கும்பல் தாக்குதல் நடாத்தி அவரிடமிருந்து நகை, பணம் என்பவற்றை கொள்ளையடித்து சென்றுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த இளைஞன் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் சென்று அங்கிருந்து உரும்பிராய்க்கு முச்சக்கரவண்டியில் பயணித்துக்கொண்டிருந்த போதே வழியில் மற்றொரு முச்சக்கரவண்டியில் வந்த கும்பல் வழி மறித்து வாளால் தாக்கி கொள்ளையடித்து தப்பிச் சென்றுள்ளார்.

வாள்வெட்டு தாக்குதலின் பின்னர் தாம் மயங்கி விழுந்ததாக தெரியவருகின்றது. காயமடைந்த இளைஞன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் .

# விழிப்புணர்வு செயலமர்வு

(சாவகச்சேரி விசேட நிருபர்)

மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை மாணவர்களுக்கு அண்மையில் வீதிப்போக்குவரத்து தொடர்பில் விழிப்புணர்வு செயலமர்வொன்று நடைபெற்றது.

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகமும் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையின் இடைவினைக் கழகமும் இணைந்து மேற்படி வீதிப் போக்குவரத்துத் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கை பாடசாலையில் முன்னெடுத்திருந்தனர்.

# யுவதி திடீர் மரணம்

திருமணமான 18 வயது யுவதியொருவர் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த சம்பவம் பண்டுவஸ்நுவர பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கணவனால் தாக்கப்பட்டே யுவதி உயிரிழந்துள்ளதாகவும் சந்தேகநபரான கணவரை இதுவரை பொலிஸார் கைது செய்யவில்லையெனவும் பிரதேசவாசிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

கிரிமெட்டிய கெலினாவல பிரதேசத்தில் வசித்து வந்த 18 வயதுடைய யுவதியொருவரே கடந்த சில நாட்களுக்கு முன்னர் உயிரிழந்தார்.

கணவரின் தாக்குதலிலேயே அவர் உயிரிழந்துள்ளதாக உறவினர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இதனடிப்படையில், மரணத்தில் சந்தேகம் நிலவுவதாகவும் கணவரை கைது செய்யுமாறு பொலிஸாரை வலியுறுத்தியும் அவரின் உறவினர்கள் மற்றும் பிரதேசவாசிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும், சடலத்தை வீதிக்கு எடுத்துச் சென்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# அட்டாளைச்சேனையின் ஆக்கபூர்வமான ஆளுமை ஈ. எல். எச். சுலைமாலெப்பை

கவியும் கவிதையும் கதிர்விளையும் களர்நிலமும் ஒருங்கிணைந்த கல்விக்களஞ்சியம் அட்டாளைச்சேனை. கவிஞர்களும் கலைஞர்களும் கல்விமான்களும்; இஸ்லாமிய இலக்கிய கவிதைக் கருவூலங்களைக் கருத்தரித்த புலமைவாதிகளும் வாழ்ந்து வரலாறு கண்ட ஊர். நமக்கு முன்னே வாழ்ந்தவர்களின் சுவாசமெல்லாம் இந்த பிரதேசக் காற்று மண்டலத்தில் இன்னும் கலந்திருக்கின்றது.

அந்த இலக்கண, இலக்கிய மரபு சார்ந்த புலமைவாதிகளின் பரம்பரைப் புலவர்தான் ஈ. எல். எச். ஹாஜியார். 1960க்குப் பின் அட்டாளைச்சேனையின் இரண்டாம் தலைமுறைக்கு அவர்தான் செய்யுளை உரைநடைபோல் எழுதி வாசித்த புலவர் கூட்டத்தில் அவர் பாட்டுப்போல் படித்துக் காட்டியவர். அட்டாளைச்சேனையில் வாழ்ந்த ஆன்றோர் சான்றோர் பட்டியலில் அடுத்த தலைமுறை மரபுக் கவிஞராக அவர் மதிக்கப்பட்டார்.

இலங்கையில் வெண்பா எழுதும் பாவலர் என்பதைக் கடந்தபோது அவர் படைத்துக்காட்டிய பள்ளிநாடகங்களின் பாத்திரங்கள் வியக்க வைத்திருக்கின்றன. அப்படி ஓர் அதிசயிக்கத்தக்க அபூர்வ கலைஞர். அருமையான மனிதர். தங்கநிறத் தேகம்: மென்மையான மனசு. உற்சாகத் தென்றல். அட்டாளைச்சேனையின் ஆக்கபூர்வமான ஆளுமையின் அடையாளம் அவர்.

அறிவு ஆற்றல் நிறைந்த பேச்சாளர். கலை இலக்கியம் சமூகம் ஆன்மிகம் என பலபரிமாண இஸ்லாமியப் பிரசாரகர். முன்னாள் தமிழக முதலமைச்சர் எம். ஜி. ஆர் மாதிரி மிடுக்கான தோற்றமுடையவர். அவர் தன் மெல்லிய நகைச்சுவைப் பேச்சாலும் எழுத்தாலும் மக்கள் மதிப்பைப் பெற்றவர். கண்ணுக்கு அவர் எப்படி அழகானவரோ அப்படி காதுக்கும்; அழகானவர். சின்னச் சின்ன சிலேடைகளால் சிரிக்க வைக்கும் பேச்சாளர்.

அட்டாளைச்சேனையில் நடந்த ஒரு கவியரங்கில் 'ஈ. எல். எச்' ரகுமானியாபாத் கவிஞர் எம். எச். முஹம்மத்தை இப்படி விழித்தார்.

**'ஏ! அக்கரையூர் எம். எச். முஹம்மதே!**
**உன் பக்கறைக்குள் பாவதுவோ?**
**இக்கரையில் அமர்ந்திருப்போர் மகிழ**
**இனிக்கின்ற பாவை நீ பாடு!'** என்றார்.

அவர் சொன்ன விதமும் அவர் கையாண்ட உத்தியும் எப்போது நினைத்தாலும் சிரிப்பையே சிந்த வைக்கின்றது. அவரின் நகைச்சுவை ஓர் அருமருந்தாய் இதயங்களைத் துலக்கி விட்டது.

ஈஸாலெப்பை சுலைமாலெப்பை என்ற இயற்பெயருடைய அவர் ஆரம்பத்தில் ஆசிரியப் பணியை ஆரம்பித்து தலைமை ஆசிரியராய் பிரதிக் கல்விப் பணிப்பாளராய் சமாதான நீதிவானாய் இலங்கை மக்களுக்கு சேவகம் செய்தார். முதல்மரியாதைக்குரிய முதியோர் கல்வி அதிகாரியாக ஓய்வு பெற்ற 'ஈ. எல். எச். ஹாஜியார் பல ஆசிரியர்களையும் மாணவர்களையும் உயர் அரசாங்கபதவி வரை உயர்த்தி விட்டார். அப்படி அவரிடம் படித்த பழைய மாணவர்கள் பலர் அரச பணியிலிருந்து ஓய்வும் பெற்றுவிட்டார்கள்.

நல்ல செல்வாக்குடைய குடும்பத்தின் ஆன்மிகத் தலைவரான ஈஸாலெப்பையின் மூத்த புதல்வராக 20. 05. 1936இல் அட்டாளைச்சேனையில் பிறந்த 'ஈ.எல்.எச்' ஹாஜியார் 31. 03. 1993 அன்று மறைந்தார். வாழ்நாளில் சிறுவர் முதல் முதியோர் வரை அவர் தன் சமுதாயத்துக்குச் செய்த கல்விச்சேவை காலமெல்லாம் பெருமை பட்டுக் கொள்ளக் காரணமாயிருப்பது போல் அவரது எழுத்தும் தாய்மொழிக்கீந்த இரத்ததானமாய் இருக்கிறது.

'ஈ. எல். எச்' ஹாஜியார் தனி மனிதர்தான்; ஆனால் அவர் ஒரு சமூக நிறுவனம். எல்லாக் காலங்களிலும் மாணவர்களுக்குத் தமிழ் போதிப்பது மட்டுமல்லாமல் அறவியல் தெளிவும் அரசியல் அறிவும் பொதுஅறிவும் தமிழுணர்வும் ஊட்டுபவர்கள் ஆசிரியர்கள் என்ற கல்விக்கோப்புக்குள் வாழ்ந்தவர். அவரது கடப்பாடு அறிவியலுக்கும் அரசியலுக்கும் அறவியலுக்கும் இலக்கியத்துக்கும் கலைக்கும் பத்திரிகைக்கும் இனம் மொழி சமயம் எல்லாவற்றுக்கும் சரிநிகரானது.

அரசியல்மேடை – இலக்கிய மேடை – கவியரங்கம் பாராட்டு விழா தமிழ்த் தினவிழா – மீலாதுந்நபி தினவிழா – இஸ்லாமிய விசேட நிகழ்வுகள் முதியோர் மாணவர் கலை கலாசாரப் போட்டி நிகழ்ச்சிகள் பேராளர் பிரியாவிடை எல்லாம் அவர் தலைமையில் நிகழ்ந்த மகத்தான மக்கள் விழாக்கள்.

கோட்டக்கல்வி கொத்தணி முறைக்குட்பட்ட அட்டாளைச்சேனையில் அவர் கல்வி அதிகாரியாக செயற்பட்டபோது மாணவர்களுக்கு 'முருங்கை இலைக்கஞ்சி' கொடுக்கும் ஒரு உணவுத்திட்டத்தைக் கொணர்ந்தார். அவரது 'அந்த' சுய உணவுத் திட்டத்தை கோணாவத்தைக் கிராமியப் பாடசாலை ஆசிரியர்கள் யாவரும் ஆதரித்து அமுல்படுத்தினர்.

புல்லும் புதரும் மரங்களும் வளர்ந்த ஆற்றங்கரைக்கும் கடற்கரைக்கும் இடைப்பட்ட மணற்பரப்புக் கரையோரத்தை 'அக்கரை' என்றே அழைப்பது வழக்கமாயிருந்த அக்காலத்தில் அதை 'ரகுமானியாபாத்' என்றும் வயலும் வரப்பும் நெற்பயிரும் வளர்ந்த 'வில்லுவட்டை' என்னும் விசாய நிலத்தில் மக்கள் குடியேற்றம் நிகழ்ந்தபோது அக்கிராமத்திற்கு 'ரஹ்மத்நகர்' என்றும் 'ஈ. எல். எச்' ஹாஜியார் புதுப்பெயர் சூட்டினார்.

'ஈ. எல். எச். ஹாஜியார்' ஓர் உடற்கட்டுள்ள குத்துச்சண்டை வீரர். உடற்பயிற்சி, மல்யுத்தம் போன்ற விளையாட்டுக்களிலும் ஈடுபட்டவர். அவர் போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி கொண்டு தேசிய வீரராகப் பல விருதுகளையும் பரிசில்களையும் பெற்றிருக்கிறார். அட்டாளைச்சேனை கோணாவத்தைப் பாலத்துக் கரையோர வெள்ளை மணற்பரப்பில் நிகழ்த்தப்பட்ட மேடை நிகழ்வுகளில் 'ஈ. எல். எச்' ஹாஜியாரும் பி. எம். இஸ்மாயில் மாஸ்டரும் அடிக்கடி மல்யுத்தத்தையும் குத்துச் சண்டையையும் விளையாட்டு நிகழ்ச்சிகளாக விளையாடிக் காட்டினார்கள். பழங்காலத்து ராஜகுமாரர்களது வில்யுத்தம் போல அமைந்த இந்த மல்யுத்தம் உள்ளூர் மக்களும் வெளியூர் மக்களும் ஒன்றுகூடிப் பார்க்கும் பெரும் போட்டி நிகழ்ச்சியாகப் பேர் பெற்றது.

1983இல் முன்னாள் தினகரன் பிரதம ஆசிரியர் ஆர். சிவகுருநாதன் ஐயாவின் அனுசரணையில் வாசகர்களை வளர்த்து விடவேண்டுமென்று அட்டாளைச்சேனை பொதுநூலகத்தில் ஆரம்பிக்கப்பட்ட தினகரன் வாசகர் வட்ட(ம்) முன்னாள் வெளிநாட்டு இலங்கைத் தூதரக சிரேஷ்ட உத்தியோகத்தர் எம். சிறாஜ் அஹமத் தலைமையில் ஓர் இயக்கமானது. அது பின் வளரும் பயிர்களுக்கு இலக்கிய வளம் கொடுத்த மரமாக விருட்சமிட்டது. அந்த கலை இலக்கிய வட்டத்திற்கு ஆணிவேராய் நின்ற ஆசுகவி அன்புடீன் பிரதான ஆலோசனைகளை வழங்கி வழிநடத்தினார். நான் செயலாளராக இயங்கிய அந்த வட்டத்தில்; பாவேந்தல் பாலமுனை பாறுக், வங்கி முகாமையாளர் எம். ஐ. நௌபல், முன்னாள் ஆசிரியர் பி. எம். கமால்தீன், ஏ.பி. கபூர், எம். எஸ். ஹமீத் ஆகியோருடன் இன்னும் பல ஆர்வலர்களும் நண்பர்களும் இணைந்து நடத்தினர்.



மாதாந்த பௌர்ணமி 'நிலவிலே பேசுவோம்' இலக்கிய நிகழ்வுகள் தினகரன் பத்திரிகையில் தொடர்ந்து வெளிவந்தபோது அது மக்களிடம் பிரபல்யமானது. எங்களை ஊக்குவித்த தினகரன் ஆசிரியர் ஆர். சிவகுருநாதன் ஐயா லேக்ஹவுஸ் உத்தியோகத்தர்கள் ஐ. எல். எம். தாஹிர், வி. ஜெகதீஸன் மற்றும் அச்சக ஊழியர்கள் யாவரும் என்றும் எங்கள் நன்றிக்குரியவர்கள். அத்தோடு அன்புக்குரிய 'ஈ. எல். எச்' ஹாஜியார் பங்குகொண்ட இலக்கிய ஆர்வலர்களை வளர்த்து விடவும் 'தினகரன் வாசகர் வட்டத்தின்' மேடை நிகழ்வுகளை மேம்பட நிகழ்த்தவும் அட்டாளைச்சேனை பொதுநூலகம் ஆர்வலர்களுக்கு வாய்த்த வரம் மட்டுமல்ல ஒரு பெரும்களம்.

புத்தக வாசிப்பும் நண்பர்கள் நேசிப்பும் இளைய தலைமுறையின் இலக்கிய தாகத்தைத் தீர்க்கும் அமுதசுரபியாகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தபோது 1982இல் பொதுநூலக ஆலோசனைக் குழுவால் நடத்தப்பட்ட அட்டாளைச்சேனை 'இலக்கிய விழாவும் புத்தகக் கண்காட்சியும் பிரமாண்டமாக நிகழ்த்தப்பட்டது.

கவியரங்கு விவாத அரங்கு என்ற பல்வேறு அங்கங்களில் நிகழ்ந்த பெருவிழாக் கருத்தரங்கில் ஆன்மிகத் தலைவர் அப்துல் ரகுமான் ஆலிம் புலவர் எழுதிய 'மணமங்கல மாலை' என்கிற இஸ்லாமிய இலக்கிய வெண்பாநூலை அறிமுகம் செய்து 'ஈ. எல். எச்' ஹாஜியார் தன் கருத்துக்களால் மக்களை ஆற்றுப்படுத்தினார்.

'ஈ. எல். எச்' ஹாஜியார் இலக்கண மரபு சார்ந்த வெண்பாக்களையும் சந்தக் கவிதைகளையும் எழுதிப் புகழ் பெற்றவர். பண்டிதர்கள் மட்டுமே எழுதிப் படித்த இலக்கண வெண்பாவை பாமரர்களும் படிக்கும்படி எளிமையாய் எழுதினார். தன் பாக்களை கல்யாண வீடுகள் மீலாதுன் நபி விழாக்கள் போன்ற பொதுச்சபைகளில் வாழ்த்துப் பிரசுரங்களாக அச்சிட்டு வெளியிட்டார்.

**'இருமணம் இணைந்த திருமண மாம்**
**இத்தினம் இன்ப இரத்தினமாம்**
**நறுமணம் கமழும் நல்வேளை**
**நலம்பெற நாயன் நலன்நாடி**
**கணவான் கரம்பிடித்த**
**கண்மணி மனம் பிடித்து**
**மணாளன் உறவால் மணவாழ்வு**
**மலர்ந்து இலங்க வாழ்த்துகின்றோம்'**

ஈ. எல். எச் ஹாஜியார் கவியரங்கங்களாலும் பேச்சுப் போட்டிகளாலும் கருத்தரங்குகளாலும் கலைவிழாக்களாலும் பிறரைத் தட்டிக் கொடுத்து வளர்த்தவர். கடுகளவும் கர்வமில்லாத பேச்சு எல்லோரையும் மனதார மதிக்கும் நல்ல குணம். இந்த பண்புகளெல்லாம் சேர்ந்து வெள்ளை உடை அணிந்துகொண்டால் எப்படி இருக்குமோ அப்படி அவர் வெள்ளை மனதோடு இருந்தார்.

அவரைப் பற்றி என் இதயத்தின் அடியாழத்தில் நான் சேமித்து வைத்திருக்கும் சேதிகள் சுவாரஸ்யமானவை.

தனிச் சமயச்சார்புள்ளதாய் எழுதிய இஸ்லாமியப் பாக்களை தன் சமூகச்சார்புள்ள இலக்கியப் பாவாக மாற்றி எழுதினார். தனித்துவமான கற்பனைகளாலும் அழகிய உவமை உருவக அணிகளாலும் கவிதைகளை இலக்கிய நிலைக்கு உயர்த்திக் காட்டினார்.

'முதுமைக்கொரு தூது' எனும் அவரது செய்யுள் முதிர்ச்சியுடன் இப்படிப் பேசுகிறது.

**'கண்ணாடி முன்னாடி (யென்) கருந்தாடி தடவிடவே**
**மின்னோடி வெட்டியதோர் மினுமினுப்பு – கண்தேடி**
**பின்னாடி ஒதுக்கி பிரித்தாங்கே பார்க்கவது**
**வெண்தாடி யாக்க வந்த நரை**
**நரை திரை மூப்பு நானிலப்பிரிவு சாவு**
**நிரையதிலே முதலாகி – மறை கூறும்**
**சிறப்புக்கும் வேராகி சீர் ஆன்ம நிறைவுக்கும்**
**இறப்புக்கும் அறைகூவும் தூது'**

கிழக்கின் முதலாவது தேசிய கல்லூரியாகத் திகழும் அட்டாளைச்சேனை முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் பாடசாலைக் கீதத்தை 'ஈ. எல். எச்' ஹாஜியார் எழுதினார். இன்றுவரை பள்ளி மாணவர்களால் பாடப்படும் அக்கீதம் பக்கத்து வீட்டார் செவிகளிலும் கூட தினந்தோறும் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது.

**'ஓதுகவென்று மறையளித்தோனே**
**ஓம்பிடும் பொருளாய் கல்வியதை**
**இறைவா அறிவை எமக்கருள்வாயே**
**பணிந்தே நிறைவாய்க் கூறுகிறோம்**
**(அருளின் மிகைத்தோன்)**
**ஒழுக்கமும் கல்வியும் உயர் தகுதி**
**உண்மையும் நெறியும் ஓங்கிடவே**
**எழுகவவென உயர் சமுதாயத்தில்**
**ஏற்றிடுவோமொரு தீபமதை (அருளின் மிகைத்தோன்)**
**அட்டாளைச்சேனை மத்திய கல்லூரி**
**மாண்புறு நல்ல மாணவர்நாம்**
**வித்தைகள் எல்லாம் கற்றிடவே – என்றும்**
**விரும்பி வந்தனம் அருள்புரிவாய்' (அருளின் மிகைத்தோன்)**

இது அருளாகி – பொருளாகி – அறிவாகி அடுத்த தலைமுறைக்குப் பிரார்த்தனையாகி இதயமெல்லாம் ஒலிக்கிறது.

அரபு, சிங்களம், ஆங்கிலம் போன்ற மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தபோதும் தித்திக்கும் தமிழ்ப் பா எழுதிக் களித்த ஈ. எல். எச் ஹாஜியார் ஒரு தமிழ்ச் சொற்கலை வல்லுனர், சிறந்த நாவன்மை மிக்கவர்.

தேர்ந்த சிந்தனையும் கூர்ந்த செவிமடுப்பும் கொண்டவர். அவர் இஸ்லாமியர் என்றாலும் பிற சமயங்களையும் அறிந்தவர்.

இஸ்லாம், பௌத்தம், இந்துத்துவம், கிறிஸ்தவம் என எல்லாம் அவருக்கு அத்துப்படி இவற்றில் எதை வேண்டினும் உடனே மழை மாதிரி பொழிவார். அந்தக் காலத்தில் தென்கிழக்கில் தீந்தமிழ்ப் பேச்சாளர்கள் என்றால் இருவர்தான். அதில் முதல்வர் முன்னாள் இந்து சமய கலாசார பண்பாட்டு அலுவல்கள் அமைச்சர் சொல்லின் செல்வர் செல்லையா ராசதுரை மற்றவர் ஈ.எல். எச். சுலைமாலெப்பை ஹாஜியார், முதலாமவர் அழகியல் கலந்த அரசியல்வாதி. இரண்டாமவர் அறவியலும் அழகியலும் கலந்த அறிவியல்வாதி.

எழுதும் கலை போலவே பேசுவதும் அவருக்கோர் கொடை. எக்கலையிலும் சிரித்து மகிழும் சிந்தனையையும் கருத்து உமிழும் கவனத்தையும் அடிக்கடி கலப்பார். ஈ. எல். எச் ஹாஜியாரின் 'வெண்பாக்களை நூலாக்க வேண்டும்' என்ற என்னுடைய ஆவலை அவரோடு இருந்த காலத்தில் நான் வேண்டிக்கொண்டேன்.

அவர் அப்போது ஆமோதித்தாலும் அவரது மரணம் அதைத் தடுத்துவிட்டது. நான் வெளிநாட்டில் இருக்கும்போதே 'ஈ. எல். எச் ஹாஜியார் மறைந்துவிட்டார்' என்ற செய்தி எனக்கு மட்டுமல்ல என்போன்ற பலருக்கும் அன்று இதயம் பொறுக்காத இழப்பாக இருந்தது அது காலம் கடந்தும் வலிக்கிற சோகம்.

ஆனாலும் அவர் உதவி வந்த சமூகத்தையும் உலவி வந்த இலக்கியத் தளத்தையும், நிலவி வந்த சமூக உறவையும் எண்ணும் போது அவர் இன்று நமக்குள் இல்லையே என்ற பிரிவுத்துயரம் ஏற்படுகின்றது.



கனடாவிலிருந்து
இனியவன் இசாறுதீன்



# புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
உதவி அதிபர், கொ/ புனித அன்னம்மாள் மகளீர் மகாவித்தியாலயம், கொழும்பு 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**I.** **பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகளை பந்தியில் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

நீரானது, நெற்செய்கையைத் தமது சீவனோபாயமாகக் கொண்ட எமது மூதாதையரின் பெருஞ் செல்வமாக விளங்கியது. ஆற்றோரச் சமவெளிகளில் வசித்த அவர்கள் ஆறுகளை மறித்துச் சமுத்திரம் போன்ற பெருங் குளங்களைக் கட்டினார்கள். வரண்ட வலயம் முழுவதும் அவர்கள் கட்டிய பெரியனவும் சிறியனவுமான குளங்களை இலங்கைப் படத்தில் குறித்துக் காட்டினால் அவை வரண்ட வலயம் முழுவதும் புள்ளிகளால் மூடப்பட்ட அளவினதாக இருக்கும். அன்று எல்லாக் கிராமங்களிலும் இரண்டு மூன்று குளங்களாவது இருந்தது என்பதற்கு இன்றும் அங்குள்ள வழிபாடுகள் சான்று பகிர்கின்றன. இதனாலேயே பண்டைய நாளில் வரண்ட வலயம், 'குளங்களைக் கொண்ட இராச்சியம்' என்ற பெயரினைப் பெற்றுக் கொண்டது.

01. இப்பந்தி எதன் முக்கியத்துவத்தை விளக்குகின்றது? ..................................

02. 'சமுத்திரம்' என்ற சொல்லுக்கு ஒத்த கருத்துச் சொல் தருக. .........................

03. இங்கு வந்துள்ள உவமைத் தொடர் ஒன்றை எழுதுக. ................................

04. இங்கு வந்துள்ள பெயர் அடைமொழிகள் இரண்டு தருக. .............................

05. 'கட்டினார்கள்' என்பதன் எதிர்கால வடிவத்தை தருக. ................................

06. பந்தியில் வந்துள்ள அ.்.றிணைப் பன்மைச் சொல் ஒன்று தருக. .....................

07. இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை **அடைப்புக்குள்ளிருந்து** தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
i. தம்பி இனிமையாகப் ........................................ (பாடுவார் / பாடுவான்)
ii. கூடையிலிருந்த ஒவ்வொரு பூவும் ............................ (வாசனையுடையன / வாசனையுடையது)
iii. மாமா நேற்றுக் கண்டியிலிருந்து ............................ (வருவார் / வந்தார்)
iv. கணினி மனிதனது தேவைகளை நிறைவு ...................... (செய்கின்றன / செய்கின்றது)

08. பின்வரும் சொற்களை சரியான வடிவில் எழுதுக.
i. இளனி - ...................................... ii. வேர்வை - ..................................
iii. வைக்கல் - .......................... iv. கத்திரிக்கோல் - ...........................

09. பின்வரும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச் சொற்கள் உயர்திணைச் சொற்களா? அ.்.றிணைச் சொற்களா? என எழுதுக.
i. யானை பெரியது - ..............................................................
ii. குமரன் படிக்கிறான் - ..............................................................
iii. வீடு அழகானது - ..............................................................

**II.**

10. எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் எழுதுக.
i. மனைரகு மள்கக் கபுழ்ந்து பேனர்சி - ................................................
ii. தம்சுத் கசும் ருதம் - ..............................................................

11. பின்வரும் ஒருமைச் சொற்களுக்குப் பொருத்தமான பன்மைச் சொற்களையும், பன்மைச் சொற்களுக்குப் பொருத்தமான ஒருமைச் சொற்களையும் எழுதுங்கள்.
i. காலம் - .............................. ii. தோட்டம் - ...............................
iii. நூல்கள் - .......................... iv. அரசன் - ...............................

12. சேர்த்தெழுதுக.
i. தொழில் + சாலை - .................... ii. முதுகு + எலும்பு - ....................
iii. கருமை + மேகம் - .................... iv. காடு + கோழி - ........................

13. தரப்பட்ட கருத்துக்களுக்குப் பொருத்தமான பழமொழியை எழுதுக.
i. ஒற்றுமையே பலம் - ..............................................................
ii. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தல் - ................................................

14. பின்வரும் மரபுத் தொடர்கள் உணர்த்தும் பொருளை எழுதுங்கள்.
i. புண்படுத்தல் - ..............................ii. பூசி மெழுகுதல் - ......................

15. பின்வரும் பிராணிகளின் இளமைப் பெயர்களை எழுதுக.
i. அணில் - .......................... ii. எருமை - ................................
iii. கீரி - .............................. iv. குரங்கு - ................................

16. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்தி எழுதுக.
i. அறுபதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படுவது - ..............................

17. பின்வரும் பிராணிகளின் தொனிகளை எழுதுக
i. ஆடு - .............................. ii. கழுதை - ................................
iii. நரி - .............................. iv. பசு - ....................................

18. பொருத்தமான நிறுத்தற் குறியீடுகளை இடுக.
i. ஐயோ எனது கால்கள் வலிக்கின்றன - ..............................................

19. கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களுக்குரிய தமிழ்க் கருத்தை எழுதுக.
i. Please do your home work - ............................................................
ii. Can I help you - ..........................................................................

**III.**

20. பின்வரும் ஒவ்வொரு சிங்கள வாக்கியத்தினதும் கருத்தை தமிழில் எழுதுக.
i. கிரவா அம்ப கனவா - ..............................................................
ii. அபி பாசலட யனவா - ..............................................................

21. பின்வரும் விலைப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

| பொருள் | அளவு | விலை |
|---|---|---|
| மா | 2Kg | 160.00 |
| தேயிலை | 150g | 72.00 |
| பருப்பு | 250g | 85.00 |
| சீனி | 1Kg | 96.00 |
| தேங்காயெண்ணெய் | 500ml | 85.00 |

i. 250g தேயிலையின் விலை யாது? ..................................................
ii. 750g சீனியின் விலை யாது? ..................................................
iii. 1kg 500g மாவின் விலை யாது? ..................................................

22. பின்வரும் நேரங்களை நியம நேரத்தில் எழுதுக.
i. முற்பகல் 12.35 - ......................... ii. பிற்பகல் 1.20 - ................

23. i. ஒரு வரிசையில் 7 கதிரைகள் வீதம் 450 கதிரைகளை எத்தனை வரிசைகளில் வைக்கலாம்? ..................................................................
ii. கடைசி வரிசையில் வைப்பதற்காக மீதியாக இருக்கும் கதிரைகள் எத்தனை?
..............................................................................................

24. சதுரமுகி ஒன்றில் விளிம்புகளின் மொத்த நீளம் 96cm எனின் அதன் ஒரு விளிம்பின் நீளம் யாது? ..................................................................

25. உருவில் காட்டப்பட்டுள்ள நாட்காட்டியில் குறிக்கப்பட்டுள்ள எண்ணை உரோமன் இலக்கத்தில் எழுதுங்கள்.




..................................................................

26. இந்த பூசணிக்காயின் நிறை எவ்வளவு?
கிலோகிராம் ............ கிராம் ............




27. சிற்றூர்தி ஒன்றில் 18 ஆசனங்கள் உள்ளன. பேருந்து ஒன்றில் இதனைப் போல நான்கு மடங்கு ஆசனங்கள் உள்ளன. பேருந்தில் உள்ள ஆசனங்களின் எண்ணிக்கை யாது?
..............................................................................................

28. ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் தை மாதம் 2678 ஆடைகளும், மாசி மாதம் 1580 ஆடைகளும், பங்குனி மாதம் 2185 ஆடைகளும் தயாரிக்கப்பட்டன. மூன்று மாதங்களிலும் தயாரிக்கப்பட்ட ஆடைகளின் மொத்த எண்ணிக்கை யாது?
..............................................................................................

29. இவ்வுருவிலுள்ள முக்கோணங்களின் எண்ணிக்கை யாது?



..................................................................

**IV. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

30. ஒரு தடவை மட்டும் காய்க்கும் தாவரம்
i. மரமுந்திரிகை ii. வாழை iii. ரம்புட்டான்

31. 

இவ்வுரு காட்டும் கைக்குட்டையின் விளிம்பு அலங்காரப்படுத்தப்பட்டுள்ள தையல் முறை,
i. சங்கிலித் தையல்
ii. வெட்டுக்குத்துத் தையல்
iii. கம்பளித் தையல்

32. வாகனமொன்றுக்கு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நாம் செல்ல வேண்டியது
i. தபாற் கந்தோருக்கு ii. பிரதேச செயலகத்திற்கு iii. பொலிஸிற்கு

33. மரங்களின் தண்டுகளை தனது அலகால் துளையிட்டு வீட்டை அமைத்துக் கொள்ளும் பறவை
i. மரங்கொத்தி ii. தூக்கணாங்குருவி iii. குயில்

34. கத்தரிக்கோல் ஒன்றை ஒருவருக்கு கொடுக்க வேண்டிய மிக உகந்த முறை,
i. கத்தரிக்கோலின் பிடியைப் பிடித்து ii. கத்தரிக்கோலின் நுனியைப் பிடித்து
iii. கத்தரிக்கோலின் நடுவால் பிடித்து

35. சீமெந்துத் தரையின் மேல் விழுந்தவுடன் மிக வேகமாக ஆவியாவது,
i. மண்ணெண்ணெய் ii. நீர் iii. பெற்றோல்

36. இலங்கையின் முதல் பிரதம மந்திரி,
i. திரு. டீ.எஸ்.சேனாநாயக்க ii. திரு. எஸ்.டபிள்யூ ஆர். டீ. பண்டாரநாயக்க
iii. திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்க

(07ஆம் பக்கம் பார்க்க)

(06 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

37. இலங்கையில் மிக உயர்ந்த இடத்தில் அமைந்துள்ள புகையிரத நிலையம்
i. பதுளை ii. ஹட்டன் iii. பட்டிபொல

38. வெள்ளை நிற இரத்தத்தைக் கொண்டுள்ள பிராணி,
i. கரப்பான் பூச்சி ii. எலி iii. அணில்

39. பேராதெனிய, ஹக்கல, கம்பஹா போன்ற நகரங்கள் மிகவும் பிரசித்தமானது,
i. சுதந்திர வர்த்தக வலயங்கள் அமைந்துள்ளதால்
ii. சரணாலயங்கள் அமைந்துள்ளதால்
iii. தாவரவியற் பூங்காக்கள் அமைந்துள்ளதால்

40. முதன் முதலில் சந்திரனில் காலடி எடுத்து வைத்தவர்,
i. நீல் ஆம்ஸ்ட்ரோங் ii. எட்வின் எல்ட்ரின் iii. மைக்கல் கொலின்

41. திரையறி கருவி அதிகமாக தேவைப்படுவது,
i. தொடருந்து சாரதிகளுக்கு ii. வைத்தியர்களுக்கு
iii. கப்பல் ஓட்டிகளுக்கு

42. உட்கொள்ளும் உணவு வேளையொன்றில் கட்டாயம் இருக்க வேண்டியது,
i. போசணைப் பதார்த்தங்கள் ii. தூய்மைத் தன்மை iii. சுவைத் தன்மை

43. 
காந்தக் கோல் ஒன்றை பிள்ளை உரு காட்டும் முறையில் சரி நடுவில் நூலால் கட்டி தொங்கவிட்டது. இப்பரிசோதனையில் கண்டறியக் கூடியது,
i. திசையை
ii. கந்தக்கோலின் கவர்ச்சித் தன்மை அதிகமாகவுள்ள இடங்களை
iii. காந்தத்திற்கு கவரும் விடயங்களை

44. அபயவாவியைக் கட்டுவித்த மன்னன்
i. தாதுசேனன் ii. மகாசேனன் iii. பண்டுகாபயன்

45. நீல நிறத்தையும் சிவப்பு நிறத்தையும் சேர்க்கும் போது கிடைப்பது,
i. சிவப்பு ii. கபிலம் iii. ஊதா

46. வெள்ளைப் பிரம்பு இதனைப் பயன்படுத்தும் மாற்றுத்திறனாளிகள்
i. கால் ஊனமுற்றோர் ii. காது கேளாதவர்கள்
iii. பார்வை குறைபாடுடையோர்

47. இயற்கையாக அமையப்பெற்ற தரையானது
i. வனம் ii. விளையாட்டுத்திடல் iii. வாவி

48. வெயிலில் உலர வைத்து நீண்ட காலம் பேணும் தானிய வகை
i. மிளகாய் ii. காளான் iii. நெல்

49. உணவு தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் பயன்படுத்த தேவையற்ற பொருள் ஒன்று
i. ஏப்ரன் ii. தலைக்கவசம் iii. சீப்பு

50. மனித செயற்பாடுகளால் ஏற்படக்கூடிய அனர்த்தம்
i. வெள்ளப்பெருக்கு ii. சுனாமி iii. பூமியதிர்ச்சி

51. நுளம்பினால் பரவும் நோய்,
i. நீரிழிவு நோய் ii. வாந்திபேதி iii. யானைக்கால்

52. பனிக்கட்டி ஒன்றை கையில் எடுத்ததும் உணரக்கூடியது?
i. குளிரை ii. வெப்பத்தை iii. உலர்ந்த தன்மை

53. வீதி சமிக்ஞை விளக்கில் சிவப்பு நிற விளக்கு ஒளிரும் போது சாரதிகளுக்கு பெற்றுக் கொடுக்கும் செய்தி
i. ஆயத்தம் ஆகுக ii. நிறுத்துக iii. செல்க

54. பேருந்து ஒன்றில் ஏற வேண்டியது
i. முன் கதவினால் ii. சாரதியின் இருக்கையின் பக்கத்தில்
iii. பின் கதவினால்

55. வாகனத்தில் வலது புறம் திரும்புவதற்கான சமிக்ஞையை போட்டவுடன் வாகன விளக்கில் ஒளிரும் வர்ணம்
i. மஞ்சள் ii. செம்மஞ்சள் iii. சிவப்பு

56. வீட்டில் பயன்படுத்தும் பொதுவான உபகரணம்
i. பற்றூரிகை ii. கால்மிதி iii. சீப்பு

57. நேரசூசி ஒன்றினால் பெறப்படும் பயன்,
i. ஒரு விடயத்தை குறித்த காலத்தில் வெற்றிகரமாக செய்து முடித்தல்
ii. தனது விடயத்தை மட்டும் செய்து கொள்ளல்
iii. இரவு நித்திரைக்கு செல்வது இலகுவாகும்.

58. கிறிஸ்தவர்கள் கொண்டாடும் பண்டிகை
i. வெசக் ii. பெரிய வெள்ளி iii. தைப்பொங்கல்

59. இயற்கை ஒளி பெறப்படுவது
i. மொழுகுவர்த்தியினால் ii. எண்ணெய் விளக்கினால்
iii. சூரியனால்

60. "நாம் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதாரப் பழக்க வழக்கங்கள்" என்ற தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலை தொடர்புகளும், எழுத்துக் கூட்டலும் இருக்க வேண்டும்.

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

## கடந்த வார (26.07.2024) வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01. 2 | 11. 3 | 21. 2 | 31. 2 |
| 02. 2 | 12. 3 | 22. 3 | 32. 3 |
| 03. 3 | 13. 2 | 23. 3 | 33. 3 |
| 04. 2 | 14. 1 | 24. 3 | 34. 3 |
| 05. 2 | 15. 1 | 25. 3 | 35. 2 |
| 06. 2 | 16. 1 | 26. 2 | 36. 3 |
| 07. 3 | 17. 3 | 27. 3 | 37. 3 |
| 08. 3 | 18. 1 | 28. 1 | 38. 3 |
| 09. 2 | 19. 2 | 29. 2 | 39. 1 |
| 10. 1 | 20. 2 | 30. 1 | 40. 1 |

அந்நியச் செலாவணி வருமானம்

# ஜூன் மாதம் 586 மில்லியன் டொலர்களால் அதிகரிப்பு

புலம்பெயர்ந்தோர் நாட்டுக்கு பணம் அனுப்புதல், ஏற்றுமதி, மற்றும் மொத்த சேவைகள் மூலம் இலங்கையின் தற்போதைய அந்நியச் செலாவணி வருமானம், இந்த வருடம் ஜூன் மாதத்தில் மொத்தம் (2,033 மில்லியன்) 203 கோடியே 30 இலட்சம் டொலர்கள் என்றும் , இந்த தொகை இறக்குமதியை விட 586 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்றும் உத்தியோகபூர்வ தகவல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஜூன் மாதத்தில் ஏற்றுமதி மூலம் 1,077 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறப்பட்டுள்ளன. புலம்பெயர்ந்தோர் 519.6 மில்லியன் டொலர்களை நாட்டுக்கு அனுப்பியுள்ளனர். இவை அடங்கலாக சுற்றுலா உட்பட மொத்த சேவைகள் மூலம் 436.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமாக பெறப்பட்டுள்ளன.

ஜூன் மாதத்தில் இறக்குமதி 1,446 மில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்துள்ளது. இறக்குமதிகள் பொதுவாக காப்பீடு மற்றும் சரக்குகளை உள்ளடக்கியதாக கணக்கிடப்படுகிறது




# தாய், சேய் நேய மருத்துவமனைகளை மேம்படுத்துவதற்கான பயிற்சி

காரைதீவு குறூப் நிருபர்




தாய், சேய் நேய மருத்துவமனைகளை உருவாக்க மற்றும் மேம்படுத்துவதற்கான பயிற்சி திட்டம், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கேட்போர் கூடத்தில் சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதாரப் பணியகத்தின் அனுசரணை மற்றும் வழிகாட்டலின் கீழ் நேற்று நடைபெற்றது. மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர். முரளீஸ்வரன் தலைமையில் இப்பயிற்சி நடைபெற்றது.

இதில் டாக்டர் கே.கிரிசுதன், தாய், சேய் நல வைத்திய அதிகாரி மற்றும் வைத்தியசாலை பணிப்பாளர்கள், அத்தியட்சகர்கள், வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மாகாண மட்டத்தில் முதலாமிடம்

கல்நேவ தினகரன் விசேட நிருபர்



வடமத்திய மாகாண மட்டத்தில் நடைபெற்ற கணித அறிவு விருத்தி வினா விடைப் போட்டி நிகழ்ச்சியில் அநுராதபுரம் மாவட்டம் கெகிராவ கல்வி வலயத்தைச் சேர்ந்த நேகம முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 07 ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவி எம்.எஸ்.எப்.சுக்ரியா சிங்கள, தமிழ் மொழி பாடசாலை மாணவர்களுடன் போட்டியிட்டு மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

அத்தோடு இவர், அகில இலங்கை ரீதியில் நடைபெறும் கணித விருத்தி வினா விடைப் போட்டியில் கலந்து கொள்ளவும் தகுதி பெற்றுள்ளார்.

இவர் கடந்த 2024 ஆம் வருடம் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற சமூக விஞ்ஞானப் போட்டியிலும் அகில இலங்கை ரீதியில் முதல் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை பெற்றுக் கொண்டார்.

அத்தோடு கடந்த வருடம் நடைபெற்ற கணித விருத்தி வினா விடைப் போட்டி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் நேகமயைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் ஜே.ஹபுல் ஹஸன் அவர்களின் பேத்தியும், எச்.எச்.சுஹத் ஏ.எப்.அஸ்னா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியுமாவார்.

# மரக்கறி செய்கையாளருக்கு இலவசமாக மரக்கறி விதைகள்

## மரக்கறிக் கன்றுகளும் ஏற்பாட்டாளர்களினால் வழங்கி வைப்பு

மூதூர் தினகரன் நிருபர்

தோட்டச் செய்கையாளர்களுக்கு தேவையான மரக்கறிக் கன்றுகள் மற்றும் மரக்கறி விதைகளை இலவசமாக வழங்க மூதூர் மேற்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட உப்புக்காச்சிமடு மீள்குடியேற்ற அபிவிருத்தி சங்கத்தினர் முன்வந்துள்ளனர்.

உப்புக்காச்சிமடு பிரதேசத்தில் பல்லின மரக்கறிச் செய்கையில் ஈடுபட்டு வரும் தோட்டச் செய்கையாளர்களுக்கே இவை வழங்கப்படவுள்ளன.

தற்போது பெருமளவான தோட்டச் செய்கையாளர்கள் பருவகால மரக்கறிச் செய்கைக்கான பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் நிலத்தை பண்படுத்தல், துப்புரவு செய்தல், வேலி அடைத்தல் உள்ளிட்ட பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

தமது சொந்த தோட்டக் காணிகளில் பயிரிடக்கூடிய மரக்கறிக் கன்றுகள் மற்றும் மரக்கறி விதைகளை தோட்டச் செய்கையாளர்களுக்கு வழங்கவுள்ளதாக, மூதூர் உப்புக்காச்சிமடு மீள்குடியேற்ற அபிவிருத்திச் சங்க செயலாளர் எம்.ஏ.அன்வர் சதாத் தெரிவித்தார்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
NLB
புதன் 2024.07.31
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5551
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.45,353,496.00
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 4 8 4 7 4 9

அத சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 126
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 4 7 4 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3793 சீட்டிழுப்பு திகதி 2024.07.31
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.68,158,821.12
ஆங்கில எழுத்து T வெற்றி இலக்கங்கள் 02 23 59 64 விசேட எழுத்து T
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 08981

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1899 2024.07.31
88280
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.440,557,954.00
ஆங்கில எழுத்து J சுப்பர் இலக்கம் 23 வெற்றி இலக்கங்கள் 20 35 68 72
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP
திகதி 2024.07.31 சீட்டிழுப்பு இலக்கம் 377
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 3 4 0 1 7 3
L7 எழுத்து K
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 33,652,854.48

ராசி சுப பலன்
திகதி 2024.07.31 சீட்டிழுப்பு இலக்கம் 860
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.3,226,702.00
வெற்றி இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 01 08 13 25
தனயோக இலக்கம் 07476
நாளுக்கான விதி எண் 14

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1581 2024.07.31
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.104,109,597.92
ஆங்கில எழுத்து V வெற்றி இலக்கங்கள் 22 27 36 59 விசேட எழுத்து V
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 01353

# தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை இன்னும் தேடிக்கொண்டிருக்கிறோம்

## இந்த வாரத்துக்குள் அறிவிக்கலாம்



தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை இரவு, பகலாக தேடி வருகிறோம். இந்த வரத்துக்குள் அந்த வேட்பாளரை தெரிவு செய்து விடுவோமென தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். நகரில் (31) நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர், மேற்கண்டாவாறு தெரிவித்தார். இதுபற்றி மேலும். தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் நிறுத்தபடுவது ரணிலுக்கோ, சஜித்துக்கோ அல்லது வேறு எவருக்குமோ ஆதரவை வழங்வதற்காக அல்ல.மாறாக ரணிலுக்காக என்று கூறுவதும் முற்றிலும் தவறானது.

தமிழ் மக்களின் எதிர்காலத்துக்காகவே இந்த முயற்சி முன்னெடுக்கப்படுகிறது.

பொது வேட்பாளர் தேர்வில் பலரது பெயர்கள் இருக்கின்றன. அதில் ஒருவரை தேர்வு செய்வதென்றால் மாறி, மாறி குற்றசாட்டுச் சுமத்தும் நிலைமையே ஏற்படுகிறது.ஏதாவது ஒரு விதத்தில் தாமே,பொது வேட்பாளராக வர வேண்டுமென சிந்திப்பவர்களும் இருக்கின்றனர். இவர்கள் மிடுக்கோடு பேசுபவர்களாக உள்ள நிலைமையில் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதில் தாமதம் ஏற்படுகிறது.எனினும்,இந்த வாரத்துக்குள் பொது வேட்பாளர் ஒருவரை தேர்ந்தெடுத்து விடுவோம்.

இந்த பொது வேட்பாளர் விவகாரத்தை கைவிடச் சொல்லி தூதரகங்களின் அழுத்தம் ஏதும் இல்லை. இந்திய தரப்பின் அழுத்தங்கள் இருப்பதாக எனக்கு தெரியாது. தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டாமென வேறு அழுத்தங்களும் வரவில்லை. ஆனால் சிங்கள வேட்பாளர்களிடைய ஒருவிதமான அச்சமும், பயமும், அருவருப்பும் வந்திருப்பதாக தெரிகிறது என்றார்.

# நீதிமன்றில் CID யினர் முன்வைத்த குற்றங்களை மறுத்தார் டயானா



குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் கீழ் குற்றப் புலனாய்வு திணைக்களம் தாக்கல் செய்த குற்றச்சாட்டுகளுக்கு தாம், குற்றவாளியல்ல என்று, முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் தமக்கு எதிராக நீதிமன்றத்தில் முன்வைத்த ஏழு குற்றப்பத்திரிகைகளை வாசித்த பின்னர், அவர் இதனைத் தெரிவித்தார்.

இதையடுத்து எதிர்வரும் ஒக்டோபர் 24 க்கு இந்த விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

## ஜனாதிபதியின் வெற்றிக்காக...

வரவேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இவ்வாறான கூட்டணியின் மூலமே நாட்டை முன்னேற்றிச் செல்ல முடியுமென்று தெரிவித்தார்.

மற்றையவர்கள் சம்பிரதாய அரசியலை பின்பற்றும்போது, அனைவரையும் ஒன்றிணைத்து நாட்டை முன்னோக்கிக் கொண்டுச் செல்வதே தனது எதிர்பார்ப்பாகும் என்று தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, டீ.எஸ்.சேனநாயக்க பண்டாரநாயக்க ஆகியோர் 1946 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியை உருவாக்கிய பின்னர் இவ்வாறானதொரு கூட்டிணைவு அமைவது இதுவே முதல் தடவையாகும் என்பதையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லும்போது, அரசியல் கட்சிகளின் நோக்கங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும் என்பதே தனது நிலைப்பாடாகும். தற்போது எட்டப்படும் இந்த உடன்பாடுகள் வாயிலாக எதிர்காலத்தில் நாட்டின் முன்னேற்றத்துக்கான தேசிய வரைவொன்றைத் தயாரிப்பதாகவும் தெரிவித்தார்.

## நாட்டில் முதலிட முன்வருமாறு...

ஒரு சக்தி பிறக்கிது மூச்சினிலே" என்ற மகாகவி பாரதியாரின் பாடலையும் சுட்டிக்காட்டினார். சுவிஸ்லாந்தில் வாழும் இளையோருக்கும் இலங்கைக்கும் இடையிலான உணர்வு ரீதியான பிணைப்பினையும் தனது அழைப்பில் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

புலம்பெயர் இளையோர் தமக்கு கிடைத்த வாய்ப்புக்களை சரியான முறையில் பயன்படுத்தி, பல்வேறு துறைகளிலும் தம்மை தகவமைத்துள்ளதாக பெருமையுடன் சுட்டிக்காட்டிய அமைச்சர், பொருளாதார முதலீடுகளை மாத்திரமன்றி நவீன தொழில்நுட்ப அறிவுசார் முதலீடுகளையும் புலம்பெயர் இளையோரிடம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சுவிஸ்லாந்து தூதரகத்தினால் நேற்று முன்தினம் (31) ஏற்பாடு செய்யப்பட்ட சுவிஸ்லாந்தின் 733 ஆவது சுதந்திர தின நிகழ்வில், இலங்கை அரசின் சார்பாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

"சுவிஸ்லாந்தின் சுதந்திர தின நிகழ்வில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சார்பாகவும், எமது அரசாங்கத்தின் சாரபாகவும் இலங்கை மக்கள் சார்பாகவும் கலந்து கொள்ள கிடைத்த பெருமைமிகு தருணத்தில், சுவிஸ்லாந்தின் அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது இரண்டு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவு என்பது, நீண்ட வரலாற்றைக் கொண்டது. இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தபோது அதனை உடனடியாக அங்கீகரித்த நாடுகளுள் சுவிஸ்லாந்தும் ஒன்று இதை இத்தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

தற்போது சுவிஸ்லாந்தை சேர்ந்த பல நிறுவனங்கள் தமது முதலீடுகளை இலங்கையில் மேற்கொண்டுள்ளன. குறிப்பாக சுற்றுலாத் துறை, கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், அதேபோன்று வர்த்த ரீதியான முதலீடுகள் என பலவேறு துறைசார் முதலீடுகளாக அவை அமைந்துள்ளன. இவை இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பதுடன் வேலை வாய்ப்புக்களையும் வழங்குகின்றன.

இலங்கையின் நிலையான பொருளாதார அபிவிருத்திக்கு தேவையான விடயங்கள் தொடர்பாக இருநாடுகளுக்கும் இடையில் காணப்படும் புரிந்துணர்வையிட்டு பெருமையடைகின்றோம்.

இலங்கையின் பிரதான வருமான மார்க்கங்களில் ஒன்றான சுற்றுலாத் துறையை விருத்தி செய்வதற்கு சுவிஸ்லாந்து தொடர்ந்து ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

சுவிஸ்லாந்தின் ஒத்துழைப்பானது, பொருளாதார அபிவிருத்தி என்பதற்கு அப்பால், இலங்கை மக்களின் வாழ்கைத்தரம், வாழ்வாதாரம், நிலையான சமாதானத்தினை உறுதிப்படுத்தல் போன்றவற்றிலும் அவதானம் செலுத்த வேண்டும் என்றார்.

## சகல மாணவர்களுக்கும்...

பயிலும் மாணவர்களுக்கு மூன்று வருட காலத்துக்கான சுரக்ஷா மாணவர் காப்புறுதியை நேற்று முதல் வழங்குவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

சுரக்ஷா காப்புறுதியை மாணவர்களுக்கு வழங்குவதற்காக (7,212 மில்லியன்) 711 கோடியே 20 இலட்சம் ரூபாவை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். அது தொடர்பான உடன்படிக்கைக் கைச்சாத்து நேற்று நடைபெற்றதுடன் அந்த வைபவத்தில் கலந்து கொண்ட போதே கல்வி அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் இணைந்து சுரக்ஷா மாணவர் காப்புறுதித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதுடன் கல்வி அமைச்சின் சார்பில் அமைச்சின் செயலாளர் திலக்கா ஜயசுந்தரவும் காப்புறுதிக் கூட்டத்தாபனத்தில் சார்பில் அதன் பிரதான நிறைவேற்றதிகாரி ப்ரியந்த பெரேராவும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

இக் காப்புறுதியின் மூலம் அரச அல்லது தனியார் மருத்துவமனைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான கொடுப்பனவாக 03 இலட்சம் ரூபாவும் வெளி நோயாளர் பிரிவு சிகிச்சைக்கான கொடுப்பனவாக 20,000 ரூபாவும் பாரதூரமான நோய்களுக்கான சிகிச்சைகளுக்காக 15,00,000 ரூபாவும் வழங்கப்படுமென அமைச்சர் தெரிவித்துள்ளார்.

விபத்து காப்புறுதி மூலம் முழுமையான அங்கவீனமுற்றிருந்தால் 2,00, 000 ரூபாவும் நிரந்தரமான பகுதியளவில் அங்கவீன முற்றிருந்தால் 1,50,000 ரூபாவும் தற்காலிக பாதிப்புகளுக்காக 25,000 ரூபா முதல் ஒரு இலட்சம் ரூபா வரை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஆயுள் காப்பறுதியின் கீழ் வருடாந்த வருமானம் 1,80,000 ரூபாவை விட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு மேலதிகமாக 'அஸ்வெசும' வேலைத் திட்டத்தில் இடம்பெறும் குடும்பங்களின் பெற்றோர், நிரந்தர பாதுகாவலருடன் காணப்படும் பிள்ளைகளுக்கு 75 ஆயிரம் ரூபாவும் ஒரு மரணத்துக்காக வழங்கப்படும் அதிகபட்ச தொகை 2,25,000 ரூபாவுமாகமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

குடும்பத்திலுள்ள அனைத்து பிள்ளைகளுக்கும் இந்த நிதி சமமாக ஒதுக்கப்படுமெனவும் பெற்றோர்கள் இருவரும் அல்லது பாதுகாவலரின் மரணத்துக்காக தனித்தனியாக இந்த காப்புறுதி உரித்துடையதாகுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களுக்கு இந்த காப்புறுதிக்காக இலவசமாக அட்டைகள் வழங்கப்படுவதுடன் காப்புறுதி டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டுள்ளமையும் விசேட அம்சமாகும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## தற்காலிகமாக நிறுத்தப்பட்ட...

அமைச்சர் தெரிவித்தார். இந்த 08 திட்டங்களும் உள்ளடங்கலாக நிதி அமைச்சின் அறிக்கைகளின்படி அடுத்த வருடத்தில் 113 திட்டங்கள் நிறைவேற்றப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கொவிட் 19 தொற்று நிலைமை மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக ,இலங்கையில் பல பாரிய அளவிலான திட்டங்கள் பாதியில் நிறுத்தப்பட்டன. அவற்றுள் வெளிநாட்டு உதவி மற்றும் கடனில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களும் இருந்தன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டதன் பின்னர் இந்த வேலைத் திட்டங்களை மீள ஆரம்பிப்பதற்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு அவர் தலையிட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

இந்த ஆண்டுக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் நிறைவேற்றுவதே அரசாங்கத்தின் இலக்காகும். இது எதிர்வரும் ஆண்டுகளில் முன்மொழியப்பட்ட புதிய திட்டங்களை ஆரம்பிக்க அனுமதிக்குமென்று அமைச்சர் கருதுகிறார்.

## மக்கள் ஐக்கிய முன்னணி...

பொதுத் தேர்தலில் போட்டியிட்ட யதாமினி குணவர்தன தேசிய பட்டியலில் தெரிவாகினர். நேற்று நடைபெற்ற கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் தினேஷ் குணவர்தன, கட்சியின் மத்திய குழு கூடி பல தீர்மானங்களை மேற்கொண்டது. நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடந்த இரண்டு வருடங்களாக நாம் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கி வந்துள்ளோம்.

அரச நிர்வாகத்தை ஸ்திர நிலைக்கு கொண்டு வருவதற்கும் பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்த நாட்டை, மீள கட்டியெழுப்புவதற்கும் சர்வதேச நம்பிக்கையை மீண்டும் உருவாக்குவதற்கும் நாம் இணைந்து செயற்பட்டோம்.

அந்த வகையில் பிரதமர் என்ற வகையில் நானும் தேசிய சுகாதார அமைச்சர் என்ற வகையில் சிசிர ஜயக்கொடியும் பாராளுமன்ற உறுப்பினராக யதாமினி குணவர்தனவும் இக்காலங்களில், அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கியதுடன் வாக்குகளையும் உபயோகித்தோம்.

பொதுஜன பெருமுன உள்ளிட்ட மேலும் பல அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்த அரசாங்கத்தையே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிங்கர் கட்டியெழுப்பியுள்ளார்.

அந்த அரசாங்கம் நாட்டு மக்களின் எதிர்பார்ப்பையும் வீழ்ச்சியடைந்த நாட்டையும் மீண்டும் கட்டி எழுப்புவதற்கும் பாரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தது. தேசிய நலன்களுக்கு முக்கியத்துவமளித்து நாம் அனைவரும் முழுமையான ஒத்துழைப்புடன் செயற்பட்டோம். இதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு புத்துயிரளிக்க முடிந்தது என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

## நிரந்தர காணி உறுதிகள்...

இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.இருநூறு வருட கால வரலாற்றைக் கொண்ட பெருந்தோட்ட மக்களே,காணி உரிமைகளின்றி பாதிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தோட்ட மக்கள் வசிக்கும் வீடுகளுக்கு முழு உரிமை வழங்குவது தொடர்பாக (31) கேகாலை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில், நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சியம்பலாபிட்டிய மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுபற்றித் தெரிவித்த அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவின் பிரகாரம் பெருந்தோட்ட மக்களுக்காக புதிய கிராமங்களை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## தடையின்றி எரிபொருள்...

களஞ்சிசாலைகளிலும் கையிருப்பை பராமரிப்பதில் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதனால், தடையில்லா எரிபொருள் விநியோகம் இடம்பெற்று வருவதாகவும் தனது சமூக வலைத்தளத்தில் அமைச்சர் குறிப்பட்டுள்ளார்.

சுத்திகரிப்பு நிலையங்களில் ஆகஸ்ட் நடுப்பகுதியில் செயல்பாடுகள் மீண்டும் தொடங்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.

ஆறு மாதங்களுக்கான எரிபொருள் கையிருப்புக்கான திட்டம், சேமிப்புத்திறன், விநியோகத் திட்டம், கேள்விகளுக்கான விநியோகம் மற்றும் சுத்திகரிப்புச் செயல்பாடுகள் தொடர்பான முகாமைத்துவம் குறித்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரிகளுடன் இதன் போது விரிவாக அமைச்சர் ஆராய்ந்தார்.

லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம் (LIOC), China Petroleum & Chemical Corporation (Sinopec), (சினோபெக்) மற்றும் அமெரிக்காவை தளமாகக் கொண்ட RM Parks Inc ஆகியவற்றின் பங்குகள் மற்றும் திட்டங்களும் மதிப்பாய்வு செய்யப்பட்டதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர சமூக வலைத்தளத்தில் குறிப்பட்டுள்ளார்.

## தங்கம் விலை...

24 கரட் தங்கம் கிராம் (24 கெரட் ஒரு கிராம்) 26,190 ரூபாவாக பதிவாகியிருந்தது. 24 கரட் தங்கப் பவுண் 2,09,550 ரூபாவாகவும் 22 கரட் தங்கம் கிராம் (22 கெரட் ஒரு கிராம்) 24,010 ரூபாவாக பதிவாகியிருந்தது.

22 கரட் தங்கப் பவுண் (22 கெரட் 8 கிராம்)1,92,100 ரூபாவாக பதிவாகியது.

21 கரட் தங்கம் ஒரு கிராமின் விலை (21 கெரட் ஒரு கிராம்) 22,920 ரூபாவாக பதிவாகியது. 21 கரட் தங்கப் பவுண் (21 கெரட் எட்டு கிராம் ) நேற்று 1,83,350 ரூபாவாக பதிவாகியிருந்தது.

## தமிழ் பொது வேட்பாளரை...

வடக்கு, கிழக்குக்குள் தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பவர்களின் இரண்வது விருப்பு வாக்கை கோரி நான் பிரசாரம் செய்வேன்.

அதேவேளை, தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிக்காதோர், இன்ன பிற காரணங்களுக்காக தமது வாக்கை எமது வேட்பாளருக்கு வழங்க வேண்டுமெனவும் நான் நேரடியாக பிரசாரம் செய்வேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் பொது வேட்பாளர் கொள்கையை முரண்பாடுடன் அணுக நான் தயார் இல்லை. இதனை கண்ணியமாகவே அணுக வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கட்டுப்பணம் செலுத்தினார்...

செலுத்தினார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவர் மைத்திரிபால சிறிசேன தரப்பின் ஒத்துழைப்புடன் அவர் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக நீதி,அரசியலமைப்பு அமைச்சராக பதவி வகித்த விஜேயதாச ராஜபக்ச சில தினங்களுக்கு பதவியை இராஜினாமாச் செய்தார்.

# இன்றைய பலன்கள்

## (02.08.2024)



**கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)**



**மேஷம்:**
பெண்களுக்கு வருமானம் உயரும். மங்கல நிகழ்ச்சியில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும். உத்தியோகத்தர்கள் சிலருக்கு இடமாற்றமும் பதவி உயர்வும் ஏற்படக்கூடும்.



**ரிஷபம் :**
கலைஞர்கள் புதிய பணிகளில் உற்சாகமாக செயல்படுவார்கள். பங்கு சந்தை வியாபாரம் சுமாராக நடைபெற்றாலும் பாதிப்பை தராது.



**மிதுனம்:**
கலைஞர்கள் பல காலமாக எதிர்பார்த்த நிறுவனங்களில் இருந்து புதிய ஒப்புதல் பெற்று மகிழ்வர்.



**கடகம்:**
கலைஞர்கள் புதிய வாய்ப்புகளை பெற முயற்சிகளை மேற்கொள்ளுவர். பங்குச்சந்தையில் லாபம் பெற பொறுமை தேவை.



**சிம்மம்:**
கலைஞர்கள் பழைய ஒப்பந்தங்களிலே போதுமான வருமானத்தை பெறுவர். பங்குச்சந்தை சுமாரான லாபம் தரும்.



**கன்னி:**
கலைஞர்கள் தங்கள் பணிகளில் உற்சாகமாக இருப்பார்கள். பங்குச்சந்தை வியாபாரத்தில் முன்னேற்றமான போக்கு நிலவும்.



**துலாம்:**
கலைஞர்கள் வெளியூர் பயணங்களில் பாதுகாப்பாக இருப்பது அவசியம். பங்குச்சந்தை லாபம் ஈட்டும்.



**விருச்சிகம்:**
கலைஞர்கள் தொழில் நிமித்தமாக கலந்து கொள்ளும் போது கவனமாக இருங்கள். பங்குச்சந்தை வியாபாரத்தில் லாபம் காணப்படும்.



**தனுசு:**
உறவினர்களின் இல்லத்து நிகழ்வில் மகிழ்ச்சியுடன் பங்கேற்ப்பீர்கள். கலைஞர்கள் பிரபல நிறுவனங்களில் இருந்து புதிய ஒப்பந்தங்களை பெறுவர்.



**மகரம்:**
கலைஞர்கள் பிரபல நிறுவனத்தில் இருந்து புதிய ஒப்பந்தங்களை பெறுவர். பங்குச்சந்தை லாபம் ஈட்டும்.



**கும்பம்:**
கலைகலைஞர்கள் தங்கள் பணிகளில் சுறுசுறுப்பு காட்டுவர். பங்குச்சந்தை நிலவரங்களை கண்காணியங்கள்.



**மீனம்:**
கலைஞர்கள் புதிய வாய்ப்புகளை பெற தீவிரமாக முயற்சி செய்வார்கள். பங்குச்சந்தையில் லாபம் பெற பொறுமை அவசியம்.

## ஜனாதிபதி நிதி... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

6,000 ரூபா புலமைப்பரிசில் தவணைத் தொகையின் 04 தவணைத் தொகையும் இன்று உரியவர்களின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வைப்புச் செய்யப்பட்டுள்ளது. அத்துடன், பிரிவெனா கல்வி நிறுவனங்களில் கல்வி கற்போர் மற்றும் பிக்குனிமார்கள் உட்பட தரம் 01 முதல் தரம் 11 வரையான 3000 மாணவர்களுக்கு மாதாந்தம் 3000 ரூபா வீதம் வழங்கப்படும் புலமைப்பரிசில் தவணைத் தொகையின் 04 தவணைத் தொகையும் இன்று உரியவர்களின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

## சொத்துக்களை... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி போன்ற பல முக்கிய தகவல்களை Head of the Governance & AntiCorruption Unit at Sri Lanka thinktank, Verit Research Sankhitha Gunaratne, தெரிவித்துள்ளார்.

## உணவுகளால் நோய்கள்... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்கிறோம். உணவால் நோய்களைக் குணப்படுத்த முடியாது. குறிப்பாக சமூக ஊடகங்கள் மூலம் சில நோய்களை 2 மூலம் குணப்படுத்த முடியுமென விளம்பரம் செய்வது சட்டவிரோதமானதென அவர் தெரிவித்துள்ளார்.

## மஞ்சள் மூடைகளுடன்... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

படகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 17 உர மூடைகளில் அடைக்கப்பட்ட 749 கிலோ கிராம் மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகத்தின் பெயரில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டதாகவும் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

## 'காஸா சிறுவர் நிதியம்'... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறுவர் நிதியத்துக்கு (Children of Gaza Fund) பங்களிப்பதற்கான கால அவகாசம் நேற்று முன்தினம் ஜூலை 31ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது. கடந்த ரமழான் மாதத்தில் இந்த நிதிக்கு பங்களிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்தார். இதற்கிணங்க நாடளாவிய ரீதியில் பெருந்தொகையான மக்கள் இன, மத பேதமின்றி இந்நிதியத்துடன் கைகோர்த்தனர்.

இந்த நிதியத்திற்குப் பங்களிக்க சந்தர்ப்பம் வழங்குமாறு மக்களிடம் இருந்து முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, 2024 மே மாதம் 31 ஆம் திகதி வரை கால அவகாசம் நீடிக்கப்பட்டது.

நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்வதற்கான அவகாசம் மே 31 ஆம் திகதியுடன் முடிவடைந்தாலும், நன்கொடையாளர்கள் இந்த நிதியத்திற்கு தொடர்ந்து பணம் வைப்புச் செய்வது அவதானிக்கப்பட்டது. இந்த நிதியத்திற்கு தொடந்தும் பணம் வைப்புச் செய்ய வேண்டாம் என ஜனாதிபதி அலுவலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## சுற்றுலாத்துறை... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களுடன் ஒப்பிடுகையில், இந்த வருமானமானது இரண்டு மடங்கு வளர்ச்சியைக் காட்டுவதாகவும் மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

அதே வேளை, இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் சுற்றுலாத் துறை வருமானம் தவிர்ந்த சேவைகள் துறை வருமானமாக 1,762 மில்லியன் அமெரிக்கன் டொலர்கள் கிடைத்துள்ளதாகவும் அந்த வங்கி தெரிவித்துள்ளது. இந்த வருடத்தின் முதல் 06 மாதங்களில் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளோரிடமிருந்து நாட்டுக்கு கிடைத்துள்ள வருமானம் 3,144 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதாகவும் வங்கி தெரிவித்துள்ளது.

## புத்தாக்குநர் விருது... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராஜாங்க அமைச்சர்களான அரவிந்தகுமார் மற்றும் விஜித பேருகொட, இலங்கை புத்தாகுநர் நிறுனத்தின் ஆணையாளர் சிறில் சுதுவெல்ல ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## மருத்துவ பட்டப்படிப்புக்கு...

சட்ட மாஅதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்த்தன முன்வைத்த ஆரம்பக்கட்ட ஆட்சேபனைகளை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றம் இதற்கான உத்தரவு பிறப்பித்தது.

மன்றில் முன்வைக்கப்பட்ட அனைத்து விடயங்களையும் கவனத்தில் கொண்ட நீதியரசர் குழாம், மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமல்தள்ளுபடி செய்யமுடிவு செய்தது.

## தீவிரவாதம் பயங்கரவாதத்தை ஒழித்து சகிப்புத்தன்மை, சகவாழ்வை நிலைநாட்டிட

# மக்காவில் சர்வதேச மாநாடு நாளை ஆரம்பம்

இன்றைய நவீன உலகில் தீவிரவாதமும் பயங்கரவாதமும் மனித சமூகத்திற்கே பெரும் அச்சுறுத்தலாகவும் சவாலாகவும் விளங்குகிறது. இது உலகின் பல மட்டத்தினரதும் அவதானத்தைப் பெற்றதாக உள்ளது. அதனால் இச்சவாலை முறியடித்து விடுவதிலும் சகிப்புத்தன்மையையும் சகவாழ்வையும் கட்டியெழுப்புவதிலும் உலகளாவிய ரீதியில் அதிகூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளன. அதற்கான நடவடிக்கைகளும் வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் தீவிரவாதம், பயங்கரவாதத்திற்கு எதிராக அன்று தொட்டு இன்று வரை மிகக் கடுமையாக உழைத்து வரும் நாடாக சவுதி அரேபியா விளங்குகிறது. அதன் பயனாக மனித சமூகத்திற்கு எதிரான தீவிரவாதத்தையும் பயங்கரவாதத்தையும் அனைத்து வழிகளிலும் கட்டுப்படுத்தி ஒழித்த நாடாகத் திகழுகிறது சவுதி அரேபியா.

என்றாலும் உலகில் ஏனைய நாடுகளையும் பிராந்தியங்களையும் போன்று சவுதியிலும் அவ்வப்போது சிறு சிறு தீவிரவாத குழுக்கள் உருவான போதிலும் அவற்றை முளையிலேயே கிள்ளியெறிந்த தேசமாகவும் சவுதி விளங்குகிறது. தீவிரவாத செயற்பாடுகளிலும் பயங்கரவாத நடவடிக்கைகளிலும் ஈடுபட்டவர்களுக்கு எதிராக ஆயுள் தண்டனை, மரண தண்டனை என கடும் தண்டனைகள் விதிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.

பயங்கரவாதத்திற்கும் தீவிரவாதத்திற்கும் எதிராக கடும் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதன் பிரதிபலனாக தீவிரவாத, பயங்கரவாத வன்முறைகள் அற்ற தேசமாக விளங்கும் சவுதி, சகிப்புத்தன்மையும் சகவாழ்வும் தலைத்தோங்கிய நாடாகவும் திகழுகிறது. அத்தோடு அமைதி நிறைந்த பூமியாகவும் கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது.

சவுதி அரேபியாவின் சகல ஆட்சியாளர்களும் தீவிரவாத்தை ஒழித்து சகிப்புத்தன்மையையும் சகவாழ்வையும் நிலைநாட்டுவதற்காக ஆரம்ப காலம் முதல் முழு மூச்சாகச் செயற்பட்டுள்ளனர். அந்த வகையில் இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலரான மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் சவுத், பட்டத்து இளவரசரான பிரதமர் முஹம்மத் பின் சல்மான் மற்றும் இஸ்லாமிய மத விவகார அமைச்சர் கலாநிதி அப்துல் லதீப் ஆல் ஷைக் ஆகியோர் தீவிரவாதம் மீளெழ முடியாதபடி கட்டுப்படுத்துவதிலும், சகிப்புத்தன்மை சகவாழ்வை மென்மேலும் வலுவுடன் வளர்த்தெடுப்பதிலும் அயராது உழைத்து வருகின்றனர். இதன் நிமித்தம் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் சவுத் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது முதல் தீவிரவாதத்தை ஒழித்து சகிப்புத்தன்மை சகவாழ்வை நிலைநாட்டிடவும் அதனைத் தொடர்ந்தும் பேணிடவும் என விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்காக சர்வதேச ரீதியிலும் பிராந்திய மட்டத்திலும் மாத்திரமல்லாமல் உள்நாட்டிலும் வருடா வருடம் மாநாடுகளையும் கருத்தரங்குகளையும் செயலமர்வுகளையும் சவுதி நடாத்தி வருகின்றது. இதன் பயனாக தீவிரவாதத்திற்கும் பயங்கரவாதத்திற்கும் எதிரான விழிப்புணர்வு பரவலாக ஏற்பட்ட வண்ணமுள்ளது.

இப்பின்புலத்தில் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸின் விஷேட வேண்டுகோளுக்கு அமைய நாளை 03 ஆம் திகதி முதல் 05 ஆம் திகதி வரை தீவிரவாத்தை ஒழித்து சகிப்புத்தன்மை சகவாழ்வை நிலைநாட்டுவதற்கான மூன்று நாட்கள் சர்வதேச மாநாடு மக்காவில் நடாத்தப்படுகிறது.

இம்மாநாட்டில் 60 க்கும் மேற்பட்ட நாடுகளது இஸ்லாமிய விவகார அமைச்சர்கள், இஸ்லாமிய நிறுவனங்களின் தலைவர்கள், துறைசார் புத்திஜீவிகள், கல்விமான்கள், முப்திகள், உலமாக்கள் என பல தரப்பினரும் கலந்து கொள்கின்றனர்.

இம்மாநாட்டின் நிமித்தம் மக்கா அல்முகர்ரமா விழாக்கோலம் பூண்டுள்ளது. இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலரான மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் சவுத், பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான் மற்றும் இஸ்லாமிய மத விவகார அமைச்சர் அப்துல் லதீப் ஆல் ஷைக் ஆகியோரின் வர்ணப் படங்களைத் தாங்கிய பெனர்கள் பிரதான வீதிகளிலும் கட்டிடங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அமைச்சர் அப்துல் லதீப் ஆல் ஷெய்க்கின் நேரடி கண்காணிப்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம்மாநாடு, "தீவிரவாதம், பயங்கரவாதம், மதவெறி, வெறுப்புப் பேச்சு மற்றும் தீவிரவாதத்தின் ஆபத்துகளை எவ்வாறு எதிர்கொள்வது?, இஸ்லாமோஃபோபியாவை எவ்வாறு எதிர்த்துப் போராடுவது? சகிப்புத்தன்மை சகவாழ்வை சமூகங்களுக்கு மத்தியில் எவ்வாறு நிலைநாட்டுவது" ஆகிய தலைப்புக்களில் 10 அமர்வுகளாக நடைபெறுகிறது.

> "உலகில் எந்த நாடாக இருந்தாலும் தங்களது நாடுகளில் பயங்கரவாதம் தீவிரவாத ஒழிப்பு, போதை ஒழிப்பு, ஊழல் ஒழிப்பு வெறுப்பு பேச்சுகள் போன்றவற்றைத் தவிர்த்து சகிப்புத்தன்மை, சகவாழ்வு போன்ற நற்பண்புகளுடன் தங்கள் நாட்டுப் பிரஜைகளை வாழ வைத்திடவும் சுபீட்சம் மிக்க அமைதியான ஆட்சியை நடாத்த வேண்டும் என விரும்பினால் அதற்கான முன்மாதிரியாக சவுதி அரேபியாவை கொள்ளலாம். சிறந்த முன்மாதிரிமிக்க தலைவர்களாக சவுதி ஆட்சியாளர்கள் விளங்குகின்றனர். அப்போது தங்களது நாடுகள் சுபீட்சம் அடையும். பிரஜைகளும் சுபீட்சமான நிம்மதியான வாழ்க்கை வாழ முடியும்"

The Ninth Conference of Ministers of Awqaf and Islamic Affairs in the Countries of Islamic World

1446 AH - 2024

இம்மாநாட்டின் ஊடாக அன்று தொட்டு இன்று வரை தீவிரவாதத்தை ஒழித்து சகிப்புத்தன்மை சகவாழ்வை கட்டியெழுப்பவென சவுதி அரும்பாடுபட்டு உழைத்து வருவது உலகிற்கு தெளிவுபடுத்தப்பட எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அத்தோடு இஸ்லாமிய உலகில் மத விவகார தொடர்பு மற்றும் ஒருங்கிணைப்பு, சகிப்புத்தன்மை மற்றும் மிதமான உறவுகளை வலுப்படுத்துவதும் நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் சவுதியின் இஸ்லாமிய விவகாரங்கள், அழைப்பு மற்றும் வழிகாட்டுதல் அமைச்சுக்கும் உலகின் பல்வேறு மத நிர்வாகங்கள் ஆகியவற்றுக்



கும் இடையிலான தகவல் தொடர்புகளை மேம்படுத்தவும், அதற்கான வழிமுறைகளைக் கண்டறிவதற்கான வழிகளைப் பகிர்ந்து கொள்ளவும், இஸ்லாத்தை தெளிவாக எடுத்தியம்பிடவும், பயங்கரவாதம், வெறுப்பு பேச்சு போன்றவற்றைத் தவிர்த்து சகிப்புத்தன்மை சகவாழ்வு போன்ற நற்பண்புகளுடன் தத்தமது நாடுகளில் வாழ ஏற்பாடுகள் செய்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அதேநேரம் தத்தம் நாடுகளில் பள்ளிவாசல்களை எவ்வாறு அமைக்க வேண்டும், அவற்றை எவ்வாறு பராமரிக்க வேண்டும், பள்ளிவாசல்களுக்கு நியமிக்கப்படும் இமாம்கள் எவ்வாறான தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். அவர்களது பிரசாரங்களில் வெறுப்புத்தன்மை நிந்தனைகள் இல்லாமல் எவ்வாறு அமைத்துக்கொள்ள வேண்டும், அவர்கள் தகுந்த அறிவு அல்லது நிபுணத்துவம் இல்லாமல் நடுநிலை பேணாமல் மார்க்கத் தீர்ப்புகள் (பத்வா) வழங்கும் விடயத்தில் உள்ள ஆபத்துகள் போன்ற விடயங்களை ஆராயவும், இவ்விடயங்கள் குறித்து சவுதி அரேபிய இஸ்லாமிய விவகாரங்கள் அமைச்சிடமுள்ள அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதும் இம்மாநாட்டின் நோக்கமாக உள்ளது.

மேலும் முஸ்லிம் நாடுகள் மத்தியில் ஒற்றுமையை வலுப்படுத்துதல், இஸ்லாமிய மத விவகாரங்களில் பரஸ்பர ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல், மார்க்க விடயங்களை அல் குர்ஆன் மற்றும் ஸுன்னா அடிப்படையிலும் மார்க்கத்தை நன்கு விளங்கிய ஸலபுஸ் ஸாலிஹீன்களின் விளக்கங்களில் இருந்தும் பெற்றுக்கொள்ளல், மேலும் தத்தமது நாடுகளில் உள்ள பள்ளிவாசல்களின் புனிதத்துவங்களைப் பாதுகாத்தல், வெளிநாடுகளில் உள்ள இஸ்லாமிய நலன்புரி அமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் மையங்களுடனான உறவுகளை வலுப்படுத்துதல், இஸ்லாமியப் பணிகள் தொடர்பான தகவல்களையும் அனுபவங்களையும் பரிமாறிக் கொள்ளல் போன்றவையும் இம்மாநாட்டின் ஊடாக இடம்பெறுகின்றன.

அத்தோடு இம்மாநாட்டின் நிமித்தம் வருகைதரும் இஸ்லாமிய விவகார அமைச்சர்கள், இஸ்லாமிய நிறுவனங்களின் தலைவர்கள், புத்திஜீவிகள், முப்திகள், உலமாக்கள் ஆகியோருக்கு அவர்களது சேவைகளைப் பாராட்டி கௌரவிப்பதும் அவர்கள் இலவசமாக உம்ரா செய்யவும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பரந்துபட்ட நோக்கங்களையும் எதிர்பார்ப்புக்களையும் உள்ளடக்கியுள்ள இம்மாநாட்டை ஏற்பாடு செய்துள்ள சவுதி அரேபியாவானது, உலக முஸ்லிம்களின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடாகும். கஃபதுல்லாஹ்வும் மஸ்ஜிதுன் நபவியும் அமைந்துள்ள பூமி இது. அவற்றை ஆல் ஸஊத் பரம்பரையினர் சிறப்பாகப் பராமரித்து நிர்வகித்து வருதோடு யாத்திரிகளுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்து வருகின்றனர்.



அதேநேரம் உலக முஸ்லிம்களுக்கு தலைமைத்துவம் வழங்கி அவர்களின் அனைத்து விடயங்களிலும் மிக அக்கறையோடு செயற்பட்டு வரும் சவுதி, முஸ்லிம்களை சரியான பாதையில் வழிநடாத்துவதும் தம் பொறுப்பு என்பதை நன்குணர்ந்துள்ளது. அதனால் தீவிரவாதம், பயங்கரவாதத்தை ஒழிக்கவும், சகிப்புத்தன்மை சகவாழ்வை நிலைநாட்டிடவும் அதைப் பற்றிய தெளிவுகளை முஸ்லிம்கள் மத்தியில் கொண்டு செல்லவும் சவுதி தொடர்ந்தும் உழைத்து வருகின்றது. இப்பின்னணியில் தான் உலகின் அனைத்து நாடுகளில் இருந்தும் முக்கிய பிரமுகர்களை சவுதிக்கு அழைத்து சர்வதேச மாநாடுகளை அடிக்கடி நடாத்தி வருகிறது. இவ்வாறான மாநாடுகளை உலகின் ஏனைய நாடுகளிலும் ஏற்பாடு செய்து நடாத்தவும் சவுதி தவறுவதில்லை.

> "தீவிரவாதம் பயங்கரவாதத்தை வேரோடு பிடுங்கியெறிந்து சகிப்புத்தன்மை சகவாழ்வை உலகில் நிலைநாட்டிய நாடாக சவுதி அரேபியா திகழ்கிறது"

அந்த வகையில் கடந்த ஒரு வருட காலப்பகுதிக்குள் மொரோக்கோ, இந்தியா, பங்களாதேசம், நேபாளம், மாலைத்தீவு, இந்தோனேசியா தாய்லாந்து, வடக்கு மசடோனியா உள்ளிட்ட பல நாடுகளிலும் இவ்வாறான மாநாடுகள் நடாத்தப்பட்டுள்ளன.

சவுதி அரசு எப்போதுமே தனித்துவம் வாய்ந்ததாகும். இஸ்லாம் மற்றும் முஸ்லிம்கள் விவகாரங்களிலும் முஸ்லிம் அல்லாதவர்களுடனான சகிப்புத்தன்மை, சகவாழ்வு விடயங்களிலும் சிறப்பான முறையில் செயற்பட்டு வருகிறது. அன்று தொட்டு இன்று வரை பயங்கரவாதத்தை ஒழிக்கவும் மாற்று மதத்தவர்களுடன் உறவுகளோடும் சகவாழ்வோடும் வாழ வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி இஸ்லாம், இஸ்லாம் அல்லாத தலைவர்களுடனும் உலகில் உள்ள உலமாக்கள், முப்திகள் புத்திஜீவிகளுடன் சேர்ந்தும் தொடர்ந்தும் உழைத்து வருகின்றது சவுதி.

அந்தடிப்படையில் இவ்வாறான மாநாடொன்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக்காலத்தில் கொழும்பில் சவுதியின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்டது. அத்தோடு இலங்கையில் பயங்கரவாதத்தை ஒழிக்கவென இந்நாட்டு புலனாய்வுத் துறைக்கும் சவுதி பாரிய ஒத்துழைப்புக்களை நல்கியுள்ளது.

இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களுக்கு சேவை செய்யவும் தீவிரவாத கருத்துக்களையும் செயற்பாடுளையும் எதிர்த்தும் இஸ்லாமிய நாடுகளிடையே ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் வலுப்படுத்துவதிலும் மக்களிடையே சகிப்புத்தன்மை மற்றும் சகவாழ்வின் விழுமியங்களை மேம்படுத்துவதிலும் சவுதி அளப்பரிய பங்களிப்பை நல்கிவருவது குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் அப்துல் லதீப் ஆல் ஷைக், இஸ்லாமிய விவகார அமைச்சைப் பொறுப்பெடுத்ததில் இருந்து பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கும், சகிப்புத்தன்மை மற்றும் சகவாழ்வைப் பரப்புவதற்கும் எடுத்துவரும் முயற்சிகள் தேசிய, சர்வதேச அளவில் வலுவான பாராட்டுதல்களைப் பெற்றுள்ளன.

இஸ்லாமிய நாடுகளிலும் உலக நாடுகளிலும் பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை, பயங்கரவாத ஒழிப்பு, மத நல்லிணக்கம் மற்றும் அமைதியானதும் அனைவரும் விரும்பக்கூடியதுமான சகவாழ்வு ஆகியவற்றை கட்டியெழுப்பவென சவுதி பல நூற்றாண்டுகளாக முக்கிய பங்காற்றி வருகிறது. தீவிரவாதம், பயங்கரவாதத்தை எதிர்த்து மன்றங்கள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தும் சவுதி, அதன் ஆபத்துகள் பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் காணொளிகளையும் புத்தகங்களையும் வெளியீடுகளையும் வெளியிடுவது போன்ற விடயங்களையும் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகிறது.



பயங்கரவாதம், தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியுதவியளித்தலை எதிர்த்துப் போராடும் முன்னணி நாடான சவுதி பயங்கரவாதம், தீவிரவாதத்தை எதிர்க்கும் அதன் நட்பு நாடுகளுடன் மிக நெருக்கமாக செயல்படுகிறது.

அதனால் உலகில் எந்த நாடாக இருந்தாலும் அந்நாடுகள், தங்கள் நாடுகளில் பயங்கரவாதம் தீவிரவாத ஒழிப்பு, போதைப் பொருள் ஒழிப்பு, ஊழல் ஒழிப்பு, வெறுப்பு பேச்சுகள் போன்றவற்றைத் தவிர்த்து சகிப்புத்தன்மை, சகவாழ்வு போன்ற நற்பண்புகளுடன் தங்களது நாட்டுப் பிரஜைகள் வாழ்ந்திடவும் சுபீட்சம் மிக்க நிம்மதியான ஆட்சியை நடாத்திடவும் விரும்பினால் அதற்கான முன்மாதிரி நாடாக சவுதி அரேபியாவைக் கொள்ளலாம். முன்மாதிரி மிக்க சிறந்த தலைவர்களாக சவுதி அரேபிய ஆட்சியாளர்கள் விளங்குகின்றனர்.

உலகில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும், சமாதானம் மலர வேண்டும் என்பதே அனைத்து மக்களினதும் விருப்பமாகும். இவ்வாறான சூழலில் உலகிலுள்ள 60 க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்குபற்றியுள்ள இந்த மக்கா சர்வதேச மாநாடு மன்னர், இளவரசர் மற்றும் இஸ்லாமிய விவகார அமைச்சர் ஆகியோரின் தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டலில் ஆரம்பமாகின்றது. அதனால் இது காலத்திற்கு அவசியமான சூழலில் நடாத்தப்படும் மாநாடாகும்.

ஆகவே இம்மாநாடு வெற்றி பெற்றிட முழு மூச்சாக உழைத்துவரும் மன்னருக்கும், இளவரசருக்கும் இஸ்லாமிய விவகார அமைச்சருக்கும் எமது மனம் நிறைந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, மாநாடு சிறப்பாக நடைபெற்றிடவும் உயர்ந்த இலட்சியங்களையும் இலக்குகளையும் அடைந்திடவும் எல்லாம் வல்ல அல்லாஹு தஆலாவைப் பிரார்த்தனை செய்கின்றேன்.

மௌலவி எம்.எச். ஷேஹுத்தீன் மதனி, BA (Hons),
பணிப்பாளர்,
அல் ஹிக்மா நிறுவனம்,
கொழும்பு.



# கிழக்கின் குரல்



தென்கிழக்கு பல்கலையில்

## திண்மக்கழிவு சுத்திகரிப்பு மீள்சுழற்சி நிலையம் திறப்பு

ஒலுவில் விசேட நிருபர்



தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சம்மாந்துறை வளாக பிரயோக விஞ்ஞான பீடத்தில் திண்மக் கழிவு சுத்திகரிப்பு மீள்சுழற்சி நிலையம் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்நிலையில் திண்மக் கழிவு சுத்திகரிப்பு மீள்சுழற்சி நிலையத்தை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் திறந்து வைத்தார்.

திண்மக் கழிவு முகாமைத்துவ பொறிமுறையின் கீழ் கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்தி பூச்செடிகள் மற்றும் தாவரங்களுக்கு பயன்படுத்துவதற்கான பொறிமுறை வகுக்கப்பட்டுள்ளதாக இதன்போது தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பதில் பதிவாளர் எம்.ஐ.எம்.நௌபர் தெரிவித்தார். தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஒலுவில் வளாகத்தில் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகளை உக்கக்கூடிய கழிவுகள் மற்றும் உக்காத கழிவுகளாக அவற்றை இரு வகைகளாக தரம் பிரித்து மீள்சுழற்சி பொறிமுறைக்கு உட்படுத்தும் வேலைத்திட்டமே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

## காரைதீவில் ஸ்ரீசித்தானைக்குட்டி சுவாமியின் குருபூஜை வழிபாடு

காரைதீவு குறூப் நிருபர்

காரைதீவு ஸ்ரீசித்தானைக்குட்டி ஆலயத்தில் சித்தருள்சித்தர் ஸ்ரீசித்தானைக்குட்டி சுவாமியின் 73ஆவது குருபூஜை வழிபாடு எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

மேற்படி ஆலய பரிபாலன சபையின் தலைவர் சி.நந்தேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்பூஜை வழிபாட்டுக்கு முன்னோடியாக எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை குருபூஜை தொடர்பான சித்தர் பட்டய அறிவிப்பு நடைபெறவுள்ளது. இந்நிலையில் எதிர்வரும் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை சுவாமிகள் முத்துச் சப்பரத்தில் வீதி வலம் வரவுள்ளார்.

மறுநாள் 10ஆம் திகதி சனிக்கிழமை சித்தர் ஆலயத்தில் கோமாதா பூஜை, 210 சித்தர்களுக்கான வேள்வி, அன்னதானம் வழங்கல், திருவிளக்கு பூஜை ஆகியன நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 11ஆம் திகதி அடியார்கள் மத்தியில் 73ஆவது குருபூஜை வழிபாடும் அதனைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கலும் நடைபெறவுள்ளதுடன், 12ஆம் திகதி இடும்பன் பூஜை வழிபாடுகளுடன் குருபூஜை இனிதே நிறைவடையவுள்ளதாக, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## நெற்பயிரில் அறக்கொட்டி தாக்கம் அதிகரிப்பு

கிண்ணியா மத்திய நிருபர்

திருகோணமலையின் பல்வேறு இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கையில் அறக்கொட்டி தாக்கம் அதிகரித்து காணப்படுவதாக, விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மூதூரின் ஒட்டுப்புல்வெளி (கல்மலையடி) கந்தளாயின் வான்எல, பேராற்றுவெளி, அக்போபுர, வட்டுகச்சி, சூரியவெவ, தம்பலகாமம், கிண்ணியா, ஆயிலியடி உள்ளிட்ட பிரதேசங்களிலேயே சிறுபோக நெற்செய்கையில் அறக்கொட்டி தாக்கம் அதிகரித்து காணப்படுகின்றது. அறுவடைக்கு இன்னும் இரண்டே வாரங்கள் உள்ள நிலையில் நெற்செய்கையில் அறக்கொட்டி தாக்கம் மிக வேகமாக பரவி வருவதாகவும், விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கிருமிநாசினி தெளித்தும் எந்தவித சாதகமான முன்னேற்றமும் இல்லை. நாளுக்குநாள் இந்நோய் தாக்கம் அதிகரித்து வருவதாகவும், விவசாயிகள் கவலை வெளியிட்டனர். கபிலநிறத் தத்தி பூச்சிகளானவை நன்கு முற்றிப்பழுத்த நெற்கதிர்களின் சாற்றை உறிஞ்சிக் குடிப்பதால் நெற்கதிர்கள் சக்தி அற்றவையாக மாறுவதும் நெற்பயிர்கள் வைக்கோல் நிலைக்கு மாறுவதும் இந்நோயின் அறிகுறியாகுமெனவும் இதனை கட்டுப்படுத்துவதில் பாரிய சவாலை தாம் எதிர்நோக்கி வருவதாகவும், விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

சிறுவர் உரிமைகள்;

## ஊடகவியலாளர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறை செயலமர்வு



அக்கரைப்பற்று விசேட நிருபர்

சிறுவர் பிரச்சினைகளை அறிக்கையிடும் போது ஊடகவியலாளர்கள் பின்பற்ற வேண்டிய நன்நெறிமுறை எனும் தலைப்பில் கிழக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான மூன்று நாள் வதிவிட செயலமர்வு, மட்டக்களப்பின் கல்லடியிலுள்ள தனியார் விடுதியில் கடந்த மூன்று நாட்களாக நடைபெற்றது.

கடந்த 29ஆம், 30ஆம், 31ஆம் திகதிகளில் யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் 'எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும் பாதுகாத்தல் அமைப்பு' இந்தச் செயலமர்வை நடத்த ஏற்பாடு செய்தது.

இதன்போது சிறுவர் உரிமை சமவாயம், சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் வன்முறைக்கு எதிராக புகார் அளித்தலிலுள்ள சட்டம் மற்றும் நெறிமுறைகள், சிறுவர் வன்முறைக்கு எதிரான செய்தி அறிக்கையிடல், உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

இதன் வளவாளர்களாக மேற்படி அமைப்பின் நிறைவேற்று இயக்குநர் எம்.மஹ்ரூப், கலாநிதி எம்.சி.ரஸ்மின், டாக்டர் சஹறா தர்ஷினி ஜெயக்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## உலக தமிழ் கலை இலக்கிய மாநாடும் திருவள்ளுவர் சிலை திறப்பும் இன்று

மட்டக்களப்பு விசேட நிருபர்

உலக தமிழ் கலை இலக்கிய மாநாடு மற்றும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலை திரைநீக்க விழாவும் இருநாள் நிகழ்வாக இன்று வெள்ளிக்கிழமை (02), நாளை சனிக்கிழமையும் (03) கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் நடைபெறும்.

கிழக்கு மாகாண கல்வி திணைக்களம், பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் மட்டக்களப்பு மாநகர சபை இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு எதிரே அமைந்துள்ள அரசடி சுற்றுவட்டத்தில் 6 அடி உயரமான பீடமும் 5 அடி உயரமான திருவள்ளுவர் சிலையும் 6 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு இன்றையதினம் காலை திரைநீக்கம் செய்யப்படுமென, நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இந்த திருவள்ளுவர் சிலையானது அன்பளிப்பாகும்.

அதற்கான பீடத்தை மாநகர சபையின் நிதியில் நிர்மாணித்துள்ளதாக, மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் என்.சிவலிங்கம் தெரிவித்தார்.



சிலை திறப்பு விழாவை தொடர்ந்து தமிழரின் கலை, கலாசார விழுமியங்களை மேம்படுத்தும் வகையில் அலங்கரிக்கப்பட்ட ஊர்தி பவனி மற்றும் கலைஞர்கள் கலந்துகொள்ளும் ஊர்வலம் மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தை சென்றடைந்து, கலை நிகழ்வுகள் ஆரம்பமாகும். பிற்பகல் 2.00 மணி முதல் இரு ஆய்வரங்கங்கள் முறையே மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர் தேசிய பாடசாலையிலும் வில்லியம் ஓல்ட் மண்டபத்திலும் நடைபெறும். இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள இந்துமத பெரியார்கள் மற்றும் தமிழ் அறிஞர்கள் கலந்துகொள்ளும் முழுநாள் ஆய்வரங்கம் கிழக்கு பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் தமிழ்நாடு அமைச்சர் செஞ்சி மஸ்தான் மற்றும் சத்து சரவணன் உள்ளிட்ட பல அறிஞர்கள் கலந்துகொள்ளவுள்ளதாகவும், அவர் கூறினார்.

## மட்டக்களப்பில் தொழுநோய் விழிப்புணர்வு கூட்டம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



தொழுநோய் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் கூட்டம், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆர்.முரளீஸ்வரன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழுநோய் தாக்கத்தின் தற்போதைய நிலை தொடர்பாகவும் இந்த நோயை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் தொடர்பாகவும் இதன்போது தெளிவூட்டப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு காவேரி கலாமன்றத்தினர் சேவை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நாடளாவிய ரீதியில் ஒப்பிடுகையில் தொழுநோய் தாக்கத்தில் மட்டக்களப்பு மாவட்டம் மூன்றாம் இடத்தில் உள்ளமை தொடர்பாகவும் இந்த நோயால் சிறார்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளமை தொடர்பாகவும் தரவுகளின் அடிப்படையில் இந்த விழிப்புணர்வு கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

தற்போது தொழுநோயை குணப்படுத்துவதற்கு மருத்துவ வசதிகள் உள்ள போதும், மக்கள் மத்தியில் இந்த நோய் தொடர்பாக நிலவும் விழிப்புணர்வின்மையே இந்த நோய் பரவுவதற்கு பிரதான காரணமாக உள்ளதாகவும் இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் தொழுநோய் வைத்திய நிபுணர் திலினி விஜேயசேகர, பிரதி பிராந்திய சுகாதார பணிப்பாளர் சரவணபவன், பிராந்திய தொற்றுநோய் வைத்தியர் கார்த்திகா, பிரதி திட்டமிடல் பணிப்பாளர்கள், கல்வி பணிப்பாளர்கள், உயர் அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், இளைஞர் கழகத்தினராகிய பலர் கலந்துகொண்டனர்.

## மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரி மைதானம் புனரமைப்பு

அக்கரைப்பற்று விசேட நிருபர்

கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரியின் மைதான புனரமைப்பும் உள்ளக வீதி நிர்மாணப் பணியும் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.முகம்மட் ஹரீஸின் முயற்சியின் பலனாக ஜனாதிபதியின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஐந்து மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரி அதிபர் எம்.எஸ்.எம்.பைசால் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முகம்மட் ஹரீஸ் எம்.பி. பிரதம அதிதியாக கலந்துகொண்டு மைதான புனரமைப்பு பணியை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் வலய கல்வி அலுவலக நிர்வாக பிரதி கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபீர் கௌரவ அதிதியாகவும் கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர்களான ஏ.ஆர்.அமீர், எம்.எஸ்.எம்.உமர் அலி, எம்.எஸ்.எம்.நவாஸ், பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் நௌபர் ஏ.பாவா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இதேவேளை கல்லூரியின் தளபாட கொள்வனவுக்கு பாராளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ஒலிபெருக்கி சாதன கொள்வனவுக்கு உதவி

புல்மோட்டை தினகரன் நிருபர்

புல்மோட்டை தி/தி சதாம் முஸ்லிம் வித்தியாலயத்துக்கு ஒலிபெருக்கி சாதன கொள்வனவுக்காக நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலையில் நீண்டகால தேவையாக இருந்த ஒலிபெருக்கி சாதன குறைபாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லா இதற்கான நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில் ஒலிபெருக்கி சாதன கொள்வனவுக்காக ஒரு இலசட்சம் ரூபா நிதியை அவர் ஒதுக்கீடு செய்து கொடுத்துள்ளார்.

இந்த உதவியை வழங்கிய அதாஉல்லா எம்.பி.க்கு பாடசாலை சமூகத்தினர் சார்பாகவும் பாடசாலை அபிவிருத்தி குழுவினர் சார்பாகவும் அப்பாடசாலை அதிபர் எம்.பி.சஹ்றா பானு நன்றி தெரிவித்துள்ளார்.

கிழக்கில்

## செயற்கைக்கால்கள் வழங்கிவைப்பு

மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்



கிழக்கு மாகாணத்தில் இலங்கை இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் மனிதாபிமான செயற்பாடுகளில் ஒன்றாக செயற்கைக்கால் வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் ஷெவாந்த் குலதுங்க தலைமையில் வெலிகந்தை கலாசார மத்திய நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கால்களை இழந்த 40 க்கும் மேற்பட்டவர்களினது கால்களின் அளவு பெறப்பட்டு அவர்களுக்காக செயற்கைக்கால்கள் புதிதாக தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டது. கொழும்பு நட்புறவு சங்கத்தின் அனுசரணையில் ரொட்டரி கொழும்பு கெபிட்டல் சிற்றி சிறிலங்கா நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பில் பயனாளிகளுக்கு இந்த உதவி வழங்கி வைக்கப்பட்டது.

## போதைப்பொருள் வியாபாரி கைது

அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் அக்கரைப்பற்று பிரதேசத்தில் 22 வயதுடைய இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை அக்கரைப்பற்று பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் பொலிஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹெரோயின் போதைப்பொருளை பல மாதங்களாக இப்பிரதேச இளைஞர்களுக்கு இச்சந்தேக நபர் மறைமுகமாக விற்பனை செய்து வந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து இக்கைது இடம்பெற்றதாக, பொலிஸார் தெரிவித்தனர்.



இவரது வீட்டை சோதனையிட்ட போது சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின், அதற்கான கண்ணாடிக் குவளை, டிஜிட்டல் தராசு, வெளிநாட்டு ஹெரோயின் ஆகியவற்றையும் கைப்பற்றியுள்ளதாகவும், பொலிஸார் கூறினர்.




# 25ஆவது வருடத்தை நிறைவு செய்துள்ள காலி, இப்னு அப்பாஸ் அரபுக் கல்லூரி

## 06ஆவது பட்டமளிப்பு விழா நாளை 03ஆம் திகதி

அல்லாஹ்வின் பேரருளால் தென்னிலங்கையின் காலி, ஹிரிம்புரையில் அமைந்துள்ள 'கன்ஸுல் கைராத்' எனும் பள்ளிவாசலில் ஹிஜ்ரி 1419 ரஜப் 11 (1998 நவம்பர் 01)ஆம் திகதி இக்கல்லூரி உதயமானது. அல்குர்ஆன், அஸ்ஸுன்னாவின் அடிப்படையில் பக்கச்சார்பற்ற சுதந்திரமாக இயங்கும் அரபுக் கல்லூரிகளின் வரிசையில் இக்கலாநிலையத்தின் தோற்றம் ஒரு முக்கிய நிகழ்வாகும்.

இந்த உம்மத்தின் பேரறிஞராகப் போற்றப்படும், ஷரீஆக் கல்விக்கு பாரிய சேவையாற்றிய நபிகளாரின் சிறிய தந்தையின் மகனான அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களது பெயரை பொருத்தமானதாகக் கருதி இக்கல்லூரிக்கு 'இப்னு அப்பாஸ் அரபுக் கல்லூரி' என பெயர் சூட்டப்பட்டது.

**நிர்வாகக் கட்டமைப்பும் ஒழுங்கு விதிகளும்:**

நாடறிந்த அறிஞரும் மார்க்கக் கல்வியைப் போதிப்பதிலும் நிர்வாகத் துறையிலும் ஆழமான அனுபவத்தைக் கொண்ட அல் உஸ்தாத் எம்.ஓ. பத்ஹுர் றஹ்மான் (பஹ்ஜி) அவர்களது தலைமையின் கீழ் 06 பேர்களைக் கொண்ட ஒரு நிர்வாகக் குழு இக்கல்லூரியைச் சிறப்பாக நடாத்தி வருகின்றது.

இதன் அதிபராக அல்உஸ்தாத டபிள்யூ. தீனுல் ஹஸன் அவர்களும் உப அதிபராக அல் உஸ்தாத் எம்.ஓ. பௌதுர் றஹ்மான் அவர்களும் இக்கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது முதலே சேவை புரிகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.


வகுப்பறை

**இலக்கும் அதற்கான செயற்திட்டங்களும்:**

இஸ்லாத்தை அதன் தூய வடிவில் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா ஆகியவற்றின் அடிப்படையில் நல்வழி நடந்த ஆரம்பகால நல்லோர்கள் விளங்கிய வழியில் போதிப்பதே இக்கல்லூரியின் பிரதான குறிக்கோளாகும். கல்வி கற்றல் அதன்படி ஒழுகுதல், அதன் மூலம் மற்றோரை வழி நடாத்தல் ஆகிய மூன்று விழுமியங்கள் இணைந்த இலட்சியம் கல்லூரியின் இலச்சினையில் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இங்கு மார்க்கக் கல்வியைக் கற்கும் இன்றைய மாணவர்கள் சீரிய ஒழுக்கமும் நன்னடத்தையும் கொண்ட உலமாக்களாக நாளை உருவாக வேண்டும் என்பதில் கூடிய கவனம் செலுத்தப்படுகிறது என்றால் மிகையாகாது.

**புதிய மாணவர் அனுமதிக்கான ஒழுங்கு விதிகள்:**

அரசாங்கப் பாடசாலையின் 8ஆம் ஆண்டின் பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்த, அல்குர்ஆனை சரளமாக ஓத முடியுமான 15 வயதுக்குட்பட்டோர் ஷரீஆப் பிரிவுக்கும், 11-13 வயதிற்கிடைப்பட்ட அல்குர்ஆனைச் சரளமாக ஓத முடியுமானோர் அல்குர்ஆன் மனனப் பிரிவுக்கும் கல்லூரியினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர்.

2025ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சை இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் நவம்பர் மாத பிற்பகுதியில் நடைபெறவுள்ளது. அதற்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்படுகின்றன.


கல்லூரியின் கணினி மையம்

**பிரிவுகளும் பாடத்திட்டமும்;**

இங்கு ஷரீஆ (மௌலவி, ஆலிம்), அல்குர்ஆன் மனனம் ஆகிய இரு பிரிவுகள் காணப்படுகின்றன. அவ்விரு பிரிவுகளின் உஸ்தாத்மார்களாக 12 பேரும் GCE (O/L), (A/L ), IT ஆகியவற்றுக்கான பாடங்களைப் போதிக்கும் பகுதி நேர ஆசிரியர்களாக 08 பேரும் கடமை புரிகின்றனர்.

7 வருட கால எல்லையைக் கொண்ட ஷரீஆப் பிரிவின் பாடத் திட்டம் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவினால் தயாரிக்கப்பட்ட பாடத் திட்டத்தைத் தழுவியதாகும். மேலும், அதில் GCE (O/L), (A/L) பரீட்சைகளுக்கான பாடங்களும், உயர் வகுப்பு மாணவர்களுக்கு (IT) தகவல் தொழில்நுட்பப் பாட நெறிகளும் போதிக்கப்படுகின்றன. 2014ஆம் ஆண்டு முதல் 'அல் ஆலிம்' மற்றும் 'தர்மாச்சாரய' அரசாங்கப் பொதுப் பரீட்சைகளுக்கும் மாணவர்கள் தோற்றுகின்றனர்.

**கல்விசார் ஒழுங்கு முறைகள்:**

எமது கல்வியாண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான இரண்டு தவணைகளைக் கொண்டதாகும். முதலாம், இரண்டாம் தவணை என இரு பரீட்சைகளும், இரண்டு இடைக்காலப் பரீட்சைகளும் வருடாந்தம் நடாத்தப்படும். முதலாம், இரண்டாம் தவணைகளில் எமது ஷரீஆப் பிரிவின் சகல வகுப்புகளுக்கும் பொது அறிவுப் பாடமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதேவேளை, இறுதியாண்டுப் பரீட்சைக்குத்தோற்றும் ஒவ்வொரு மாணவரும் அரபு மொழியில் ஆய்வொன்றை சமர்ப்பிப்பதும் அவசியமாகும். இதுவரை 160 க்கும் மேற்பட்ட ஆய்வுகள் எழுதப்பட்டுள்ளன.


வாசிகசாலை

மேலும், நாட்டின் பல பாகங்களிலும் வெளிநாட்டு நிறுவனங்களால் நடாத்தப்படும் கல்விக்கருத்தரங்குகளில் பங்குபற்றவும் மாணவர்களுக்கு சந்தர்ப்பமளிக்கப்படுகின்றது.

2012ஆம் ஆண்டு 70க்கும் மேற்பட்ட அரபுக்கல்லூரிகள் பங்குபற்றிய அகில இலங்கை அரபுக் கல்லூரிகள் ஒன்றியத்தினால் தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் மாணவர் மட்டம், கல்லூரிகள் மட்டம் ஆகிய இரண்டிலுமே எமது கல்லூரி முதலிடம் பெற்றது சிறப்பம்சமாகும்.


1998 ல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட கன்ஸுல் கைராத் பள்ளிவாசல்

**மாணவர்களின் ஆளுமை விருத்திச் செயற்பாடு–கள்:**

- வாராந்தம் நடாத்தப்படும் அரபு, தமிழ், சிங்கள மொழிகளிலான வெவ்வேறு மாணவர் மன்றங்கள்.
- வெள்ளி மேடை குத்பாக்கள், நாளாந்த இஷாத் தொழுகையைத் தொடர்ந்து சொற்பொழிவுகள்.
- மாதமிருமுறை நடத்தப்படும் அறிவுக் களஞ்சிய போட்டி நிகழ்ச்சி.
- பிரதான தலைப்புகளில் நடாத்தப்படும் விவாத அரங்குகள்.
- 'திக்ரா' சுவர் சஞ்சிகை.
- விளையாட்டு வேளை.
- கல்விச் சுற்றுலாக்கள், வெளிக்களப் பயிற்சி முகாம்கள்.
- கணினிப் பயிற்சி மையம்.
- நூலக வசதி

**கல்லூரி கண்ட முன்னேற்றங்களும் அடைவுக–ளும்:**

- அரபுக் கல்லூரிகளின் அதிபர்களாக, விரிவுரையாளர்களாக, அரசாங்கப் பாடசாலைகளின் ஆசிரியர்களாகவும், அழைப்புப் பணியிலும் அப்பாஸிகளில் பலர் சேவை புரிகின்றனர்.
- 27 பேர் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியையும் நால்வர் Phd பட்டப்படிப்பையும் மேற்கொண்டு வருகின்றனர். இருவர் MA மேற்படிப்பை நிறைவு செய்துள்ளனர்.
- உள்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் இதுவரை 40 க்கும் அதிகமான அப்பாஸிகள் உயர் கல்வியைத தொடரும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.
- அப்பாஸிகளில் ஒருவர் IDM Law College இல் சட்டத்துறையில் அதிஉயர் தரத்தில் சிறப்புப் பட்டதாரியாக பட்டம் பெற்றுள்ளதோடு மேலும் இருவர் உள்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் சட்டக் கல்லூரியில் தற்போது கல்வியைத் தொடர்கின்றனர்.
- இதுவரை இக்கல்லூரியிலிருந்து GCE (A/L) பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 85% பல்கலைக்கழகத்திற்கும், GCE (O/L பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 80% GCE (A/L) க்கும் தகுதிபெற்றுள்ளனர்.
- இக்கல்லூரிக்கென தனியான ஓர் இணையதளம் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றது.
- சில நலன்புரி நிறுவனங்களின் அனுசரணையுடன் தென் மாகாணத்தின் பல பிரதேசங்களில் பல்வேறு சமூக சேவைகளைப் பொறுப்பேற்று நடாத்தியுள்ளது.
- இலங்கைத் தாய் நாட்டின் தேசிய நலனையும் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையையும் கட்டிக்காப்பதில் கல்லூரியும் அதன் மாணவர்களும் பங்களிப்புச் செய்து வருகின்றனர்.


அல்குர்ஆன் மனனப் பகுதி

**பொருளாதார நிலை:**

தற்சமயம் மாதாந்தச் செலவினம் 1.8 மில்லியன் ரூபாவைத் தாண்டி நிற்கின்றது. கல்லூரிக்குச் சொந்தமான பேக்கரியிலிருந்து கிடைக்கும் வருமானம், மாணவர்களிடமிருந்து அறவிடப்படும்.


கல்லூரி பள்ளிவாசல்

விடுதிக் கட்டணங்கள், தனிப்பட்டவர்களின் மூலம் கிடைக்கும் நன்கொடைகள் ஆகியன செலவினங்களின் ஒரு பகுதியை ஈடு செய்தாலும் சில மாதங்களில் நிதிப் பற்றாக் குறை ஏற்படாமலில்லை.

செலவுகளை ஈடுசெய்வதற்காக 'ஒரு நாள் செலவைப் பொறுப்பேற்றல் என்ற திட்டத்தின் கீழ், ஒரு நாளைக்கான முழுச் செலவான சுமார் 60,000.00 ரூபா, உணவிற்கான செலவான 35,000.00 ஆகியவற்றை சிலர் போறுப்பேற்றுள்ளனர். இத் திட்டத்தில் பங்குகொள்ள மேலும் பலருக்கு வாய்ப்புள்ளது.

எமது அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதிலும் பொருளாதார நிலையை மேம்படுத்துவதிலும் ஒத்துழைக்கும் கல்லூரியின் அபிவிருத்திச் சங்கத்தின் பணிகள் மறக்கமுடியாதவை.

**எமது எதிர்காலத் திட்டங்களில் சில:**

- இக்கல்லூரியை அரபு நாட்டு இஸ்லாமியப் பல்கலைக் கழகம் ஒன்றுடன் இணைத்து, உயர்கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்தல்.
- பட்டப்பின் படிப்பு நிலையம் ஒன்றை அமைத்தல்.
- உலமாக்களுக்கான தொழில் பயிற்சி நிலையம் ஒன்றை உருவாக்குதல்.
- 'இப்னு அப்பாஸ் கணினி பயிற்சி மையம்' தரமுயர்த்தப்படுதல்.

**கல்லூரியின் அவசரமான முக்கிய சில தேவைகள்:**

1. மாதாந்த செலவில் துண்டுவிழும் தொகையைக் குறைப்பதற்காக பணமாகவோ பொருளாகவோ தேவைப்படும் நன்கொடைகள்.
2. மாணவர் விடுதியின் ஒருபகுதி, கேட்போர் கூடம் ஆகியவற்றை கட்டி முடிப்பதற்குத் தேவையான பண உதவிகள்.
3. கல்லூரியின் நூல் நிலையத்தை மேம்படுத்துவதற்காக முக்கிய பல நூற்களும், தளபாடங்களும்.
4. உஸ்தாதுமார்களுக்கான குடும்ப விடுதிகளை அமைத்தல்.

**தற்போது கல்லூரியில் கடமை புரியும் ஆசிரியர் குழாம்:**

அதிபர்: அல் உஸ்தாத் W. தீனுல் ஹஸன் (பஹ்ஜி)

உப அதிபர்: அல் உஸ்தாத் M.O. பௌதுர் ரஹ்மான் (பஹ்ஜி)

**ஆசிரியர்கள் (ஷரீஆப் பிரிவு):**


இறுதியாண்டு மாணவர்களின் ஆய்வு நூல்கள்

1. அல் உஸ்தாத் M.A.A.M ஸபர் (பஹ்ஜி, BA, மதீனா)
2. அல் உஸ்தாத் M.J.M. அதாஉல்லாஹ் (பஹ்ஜி)
3. அல் உஸ்தாத் M. T. M. ரிபாக் (அப்பாஸி)
4. அல் உஸ்தாத் B. H. M. பர்னாஸ் (அப்பாஸி)
5. அல் உஸ்தாத் M. S. M. யுஸ்ரி (அப்பாஸி)
6. அல் உஸ்தாத் M. A. யூஸுப் ஹுஸைன் (அப்பாஸி)
7. அல் உஸ்தாத் M. S. M. முஆஸ் (பஹ்ஜி)

**ஆசிரியர்கள் (அல்குர்ஆன் மனனப் பிரிவு):**

1. அல் உஸ்தாத் M. W. M உமர் (பஹ்ஜி)
2. அல் உஸ்தாத் M. F. M. இம்ரான் (அப்பாஸி)
3. அல் உஸ்தாத் M. N. M. மபாஸ் (இர்சாதி)

நாளை 03ஆம் திகதி நடைபெறவுள்ள 06வது பட்டமளிப்பு விழாவில் 61 பேர் மௌலவிப் பட்டம் பெறுவதுடன் 29 பேர் ஹாபிழ் பட்டம் பெறுகின்றனர். இத்துடன் இங்கு பட்டம் பெற்ற மௌலவிகளின் தொகை 171 ஆகவும், ஹாபிழ்களின் தொகை 89 ஆகவும் உயர்ந்துள்ளது.

பண்புள்ள தரமான பல உலமாக்களையும் ஹாபிழ்களையும் உருவாக்கி சமூகத்திற்கு தொடர்ந்தும் நற்பணி செய்யும் பாக்கியத்தை வல்ல அல்லாஹ் இக்கல்லூரிக்கு வழங்குவானாக.

தூய எண்ணத்துடன் இத்துறையில் சேவையாற்ற எம்மனைவருக்கும் அருள்புரிவானாக.


மாணவர் விடுதி

# நகர்வலம்






## வாக்காளர்கள் போலி பிரசாரங்களுக்கு ஒருபோதும் அகப்பட வேண்டாம்

### தபால் மூல வாக்காளர்களுக்கு தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்து

**லோரன்ஸ் செல்வநாயகம்**




2024 ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிப்போர் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு நேற்று முன்தினம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி போலி பிரசாரங்களுக்கு அகப்படாமல் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணைய தளத்தில் உள்ள பதிவுகளுக்கமைய தகவல்களைப் பெற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அந்த ஆணைக்குழு வாக்காளர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

பல்வேறு விதமாக சமூக வலைத் தளங்கள் மூலம் வெளியிடப்படும் விளம்பரங்கள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு எத்தகைய பொறுப்பையும் ஏற்காது என்றும் அதில் குறிப்பிடப்படும் தகவல்கள் பொய்யானவை மற்றும் மக்களை தவறாக வழி நடத்துபவை என்றும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதே வேளை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு ஆகஸ்ட் 5ஆம் திகதி நிறைவு பெறவுள்ளதாகவும் அந்த ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

## ஆகஸ்ட் மாதத்தில் எரிபொருள் விலைகளில் மாற்றமில்லை

### லிற்றோ கேஸ் நிறுவனத் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஆகஸ்ட் மாதத்தில் சமையல் எரிவாயு விலைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படமாட்டாது என லிற்றோ கேஸ் நிறுவனத்தின் தலைவர் உதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தற்போது சந்தையில் நடைமுறையில் உள்ள விலைகளுக்கே இந்த மாதத்திலும் லிற்றோ சமையல் எரிவாயுவை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கடந்த ஜூலை மாதம் 2ஆம் திகதி நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் லிற்றோ கேஸ் விலைகள் குறைக்கப்பட்டன.

அந்த வகையில் 12.5 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயு ஒன்றின் விலை 100 ரூபாவினால் குறைக்கப்பட்டதுடன் 3790 ரூபாவாக காணப்பட்ட அதன் விலை 3690 ரூபாவாகக் குறைக்கப்பட்டது.

அத்துடன் 5 கிலோகிராம் எடை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 40 ரூபாவால் குறைக்கப்பட்டு முன்பிருந்த 1522 ரூபா விலை 1482 ரூபாவாக குறைக்கப்பட்டது.

2.3 கிலோகிராம் எடை கொண்ட சமையல் எரிவாயு ஒன்றின் விலை 18 ரூபாவால் குறைக்கப்பட்டு 712 ரூபாவாக இருந்த அதன் விலை 694 ரூபாவாக குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நாளாந்தம் சுமார் 1000 சட்டவிரோத கருக்கலைப்பு

நாளாந்தம் சுமார் 1000 சட்டவிரோத கருக்கலைப்பு சம்பவங்கள் பதிவாகுவதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான வைத்தியர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு (31) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இனப்பெருக்க ஆரோக்கியம் மற்றும் பாலியல் கல்வி தொடர்பான தெளிவின்மையே சட்டவிரோத கருக்கலைப்பு அதிகரிப்புக்கான காரணம் என மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான வைத்தியர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் விசேட வைத்தியர் சமல் சஞ்ஜீவ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் மூலம் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## டிங்கி இயந்திர படகிலிருந்து 749 கி.கிராம் மஞ்சள் மீட்பு

### கற்பிட்டியில் சம்பவம்

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



கற்பிட்டி , உச்சமுனை தீவுப் பகுதியில் டிங்கி இயந்திர படகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 749 கிலோ கிராம் மஞ்சள் கடற்படையினரால் (31) மீட்கப்பட்டுள்ளது.

வடமேற்கு கடற்படை கட்டளையின் கற்பிட்டி கடற்படையினர் உச்சமுனை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விஷேட தேடுதல் நடவடிக்கையின் போது அங்கு சந்தேகத்திற்கு இடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிங்கி இயந்திர படகினை பரிசோதனை செய்தனர்.

இதன்போது குறித்த இயந்திர படகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 17 உர மூடைகளில் அடைக்கப்பட்ட 749 கிலோ கிராம் மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும் சந்தேகத்தின் பெயரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் கடற்படையினர் குறிப்பிட்டனர். கைது செய்யப்பட்ட இருவரும் 23 மற்றும் 44 வயதுடையவர்கள் எனவும் இவர்கள் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

மேலும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும், கைப்பற்றப்பட்ட 749 கிலோ கிராம் மஞ்சள் மற்றும் டிங்கி இயந்திர படகு என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்க பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

## பேருவளை பாஸியதுல் நஸ்ரியாவில் ஸ்மார்ட் வகுப்பறை திறந்து வைப்பு





**பேருவளை விசேட நிருபர்**

பேருவளை மருதானை அல் பாஸியதுல் நஸ்ரியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலய ஸ்மார்ட் வகுப்பறை திறப்பு விழா, அதிபர் மஸ்னவியா மூசீன் தலைமையில் அண்மையில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

களுத்துறை கல்வி வலய பிரதி கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) எம்.எச்.பி.பீரிஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். முன்னாள் பேருவளை கோட்டக்கல்வி பணிப்பாளர் ஏ.ஜே.யு.சோமரத்ன, முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.எம். இல்யாஸ் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் பங்குபற்றினர். களுத்துறை கல்வி திணைக்களத்தினதும் பாடசாலை பழைய மாணவியர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினதும் பங்களிப்புடன் இந்த ஸ்மார்ட் வகுப்பறை அமைக்கப்பட்டுள்ளது. களுத்துறை கல்வி வலய முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.எம்.இல்யாஸ், முன்னாள் பேருவளை கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.யு.சோமரத்ன ஆகியோரின் சேவைகளை கௌரவித்து நினைவு சின்னமும் வழங்கப்பட்டது. இந்த இரு அதிகாரிகளும் சேவையில் இருந்த சமயம் ஆற்றிய பணிகளை, அதிபர் மஸ்னவியா மூசீன் இங்கு பாராட்டிப் பேசினார். ஸ்மார்ட் வகுப்பறையை பெற்றுக் கொடுத்தமைக்கும் அவர் பழைய மாணவியர் சங்கம் பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் வலயக் கல்வி பணிப்பாளருக்கும் நன்றி கூறினார்.

நிகழ்வில் ஊர் பிரமுகர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவிகள் சங்கம், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் பங்குபற்றினர்.

## போதைப்பொருள் தடுப்பு தொடர்பான பயிற்சிநெறி மிஹிந்தலையில்

**திறப்பனை தினகரன் நிருபர்**



அநுராதபுர மாவட்டத்தில் கடமை புரியும் கள உத்தியோகத்தர்களுக்கு பயனுள்ள போதைப் பொருள் தடுப்புக்கு தேவையான தொழில் நுட்ப பயிற்சி நெறி ஒன்று அண்மையில் மிஹிந்தலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. மிஹிந்தலை பிரதேச செயலகத்தில் அநுராதபுர மாவட்ட மேலதிக செயலாளர் சர்மிளா விக்ரமாராச்சி தலைமையில் இப்ப பயிற்சி நெறி ஆரம்பமானது.

அநுராதபுரம் மாவட்ட செயலகம் மற்றும் மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் ஆகியன இணைந்து இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றது. இதில் அநுராதபுரம் மாவட்ட செயலக அதிகாரிகளும், மிஹிந்தலை, கஹட்டகஸ்திகிலிய, ஹொரவபத்தான, ரம்பாவ, திறப்பனை ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 43 அதிகாரிகளும் இப் பயிற்சி நெறியில் கலந்து கொண்டனர்.

மது மற்றும் போதைப் பொருள் தகவல் மையத்தின் ஊடாக வழங்கப்படும் இப்பாட நெறி மாதத்திற்கு 04 மணிநேர நடைமுறை நடவடிக்கைகள் மூலம் சுமார் 06 மாதங்களுக்கு தொடர்ந்து இடம் பெறும். மிஹிந்தலை பிரதேச செயலாளர் அனுருத்த நாயக்கபண்டார, மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் அநுராதபுரம் மாவட்ட நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் திமந்த அருண மற்றும் மிஹிந்தலை பிரதேச செயலக அதிகாரிகள் குழுவினர் இதில் கலந்து கொண்டனர்.

## சுறுசுறுப்பான தகவலறிந்த பிரஜைகளை உருவாக்குவதற்கான அமைப்பின் செயலமர்வு




Good Citizens இயக்கம் USAID அமைப்பு IRIஐ நிறுவனத்தின் ஊடான நிதி ஒதுக்கீட்டில் தகவலறிந்த மற்றும் சுறுசுறுப்பான குடிமக்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட ஒரு நிகழ்வை கடந்த ஜூலை மாதம் 27ஆம் திகதி சிறப்பாக நடாத்தி முடித்தது.

இந்த முயற்சியானது சட்டம், பொருளாதாரம், சர்வதேச உறவுகள், ஊடகம் மற்றும் அரசியல் போன்ற முக்கியமான தலைப்புகளில் குடிமக்களுக்கான கல்வி அறிவை வழங்குவதில் கவனம் செலுத்தியது. மேலும், ஈடுபாடும் அறிவும் கொண்ட சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கான ஒரு முக்கிய படியாக இது அமைகின்றது.

இந் நிகழ்வில் NSBM பசுமைப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை விரிவுரையாளரும் சட்டத்தரணியுமான திருமதி எரங்க திஸாநாயக்கவினால் 'சட்டத்தை அறிவோம்' என்ற தலைப்பில் இந்த பயிற்சி பட்டறை இடம்பெற்றது. இந் நிகழ்வில் கலந்துகொண்ட 40 க்கும் மேற்பட்ட நபர்களுக்கு அடிப்படை சட்டம் குறித்து வெற்றிகரமாக பயிற்சி அளிக்கப்பட்டதோடு சட்ட கட்டமைப்பை திறம்பட வழிநடத்தி செல்வதற்கு தேவையான திறன்களையும் அவர்களுக்கு விருத்தி செய்ய வழி வகுத்தது.

இந்த பயிற்சியானது குடிமக்களுக்கு அவர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுப்பதற்கும் சமூக மாற்றத்திற்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்குவதற்குமான அறிவை மேம்படுத்துவதை அடிப்படை நோக்கமாகக் கொண்டது. அத்தோடு இந்த பயிற்சிக்கு மேலதிகமாக அதனை தொடர்ந்து Good Citizens அமைப்பானது குடிமக்களுக்கான வழிகாட்டலுக்காக உருவாக்கப்பட்ட ஒன்லைன் மூலமான பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தி வைத்தது. இந்த விரிவான கல்வி தளமானது பல்வேறு அத்தியாவசிய தலைப்புகளில் ஆழமான அறிவை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கலாஓயா ஆற்றுக்கு குளிக்கச் சென்றவர் சடலமாக மீட்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் வில்பத்து தேசிய சரணாலயத்திற்கு முன்னால் உள்ள கலா ஓயா ஆற்றிற்கு குளிக்கச் சென்ற நபர் ஒருவர் கடந்த (30) சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலமாக மீட்கப்பட்டவர் உட்பட நால்வர் குளிப்பதற்கு கலா ஓயா ஆற்றிற்கு சென்றிருந்த நிலையில், அவர்கள் அளவுக்கு அதிகமாக மது அருந்தியிருந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, அங்கு இரண்டு குழுக்களுக்கு இடையே கைகலப்பு ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.இதனையடுத்து, சடலமாக மீட்கப்பட்டவர் தவிர்ந்த ஏனையவர்கள் அவ்விடத்தை விட்டு தப்பிச் சென்ற நிலையில், இரண்டு மணித்தியாலங்களின் பின்னர், தப்பிச் சென்ற குழுவினர், சடலமாக மீட்கப்பட்டவரைத் தேடி மீண்டும் கலா ஓயா ஆற்றிற்கு வருகைத் தந்துள்ளனர். இது தொடர்பில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டிருந்ததாகவும் வண்ணாத்தவில்லு பொலிஸார் தெரிவித்தனர்.

## இக்ரா மாணவர்களின் மாதிரி புத்தகசாலை நிகழ்வு



ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயத்தின் தரம் இரண்டு மாணவர்களின் மாதிரி புத்தகசாலை நிகழ்வு பாடசாலையில் (31) நடைபெற்றபோது, மாணவர்கள் அதில் பங்கேற்றுள்ளதனை படங்களில் காணலாம். **பாடம் ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

## கவிஞர் அஷ்.ஃ.பா அஷ்ரபின் கவிதை நூல் வெளியீடு இன்று

**புத்தளம் தினகரன் நிருபர்**




புத்தளத்தின் கவிஞர் அஷ்ஃபா அஷ்ரஃப் அலியின் முதலாவது கன்னி வெளியீடான முதல் மழைத்துளிகள் மரபு இலக்கண கவிதை நூலின் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை (02) பிற்பகல் 4.30 மணிக்கு புத்தளம் இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரியில் புத்தளம் செய்னப் முஸ்லிம் பெண்கள் ஆரம்ப பாடசாலையின் ஆசிரியர் எச்.எம். மில்ஹான் தலைமையில் நடைபெற உள்ளது.

இந் நிகழ்வின் பிரதம அதிதியாக சிரேஷ்ட வைத்திய ஆலோசகர் எம்.ஐ.எம். றிபாத், கௌரவ அதிதிகளாக புத்தளம் கல்வி வலய ஓய்வு நிலை கல்விப் பணிப்பாளர் கலாபூஷணம் எம்.ஏ.எம்.எம் ஜவாத் மரைக்கார், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் இஸட் ஏ.சன்ஹீர், மற்றும் ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் ஏ.டி.எம்.நிஜாம் ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பரதேசி சித்தன் இலங்கை வருகின்றார்

கோவை செப்பீட்டு கைலாசநாதர் சித்தர் மடத்தின் ஸ்தாபகர் பரதேசி சித்தன் எதிர்வரும் 6 ஆம் திகதி இலங்கைக்கு வருகின்றார். இவர் இலங்கையில் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை தங்கி இருந்து பல்வேறு ஆன்மீக நிகழ்வுகளில் கலந்து கொள்கின்றார்.

பரதேசி சித்தன் வரலாறு

இவர் கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஓர் கூலி தொழிலாளிக்கு மகனாக பிறந்தார். இவர் பிறந்தவுடன் ஜாதகம் பார்த்தவர்கள், இவர் பரமேஸ்வரனுக்கு நிகரான ஜாதகம், குடும்பத்துடன் வசிக்க மாட்டார், காடு, மலை என்று சுற்றி திரியும் ஜாதகம். ஆகவே பார்த்து பத்திரமாக வைத்துக்கொள்ளுங்கள் என்று கூறினார்கள். அதனால் பெற்றோர் வெள்ளியங்கிரி சென்று வெள்ளியங்கிரி ஆண்டவனிடம் முறையிட்டு விட்டு நீயே பார்த்துக்கொள் இறைவா என்று இறைவனிடம் பொறுப்பை ஒப்படைத்தார்கள்.

குழந்தையும் வளர்ந்து பள்ளி வயதை எட்டியது. பள்ளிக்கு பெற்றோர் படிக்க அனுப்பினால் படிக்காமல் அருகில் உள்ள மலை பகுதியில் சென்று விளையாட ஆரம்பித்தான். பெற்றோர் எவ்வளவு சொல்லியும் கேளாமல் படு சுட்டி தனம் செய்து அனைவரையும் கவருவான். ஆனால் படிக்க மாட்டான். அவனை அடிக்க ஆசிரியர் பிரம்புடன் வருவார் கோபமாக, ஆனால் அவரை கண்டவுடன் ஏதோ ஓர் ஈர்ப்பு ஏற்பட்டு எடுத்து கொஞ்சி மகிழ்ந்து சென்றுவிடுவார். குழந்தையும் படிக்காமல் காடுகளில் சுற்றித்திரிந்தான். அப்போது அவனை கண்ட ஓர் பெரியவர் நீ என்னுடன் வருகிறாயா என கேட்டார். அப்போது சிறுவன் எங்கு எதற்கு என கேள்வி கேட்டான். உன் பெற்றோரிடம் என்னை அழைத்து செல், நான் அவர்களிடம் சொல்கிறேன் என கூறினார். சிறுவனும் பெற்றோரிடம் அழைத்து வந்தான். அப்போது அவனுக்கு ஓர் 6 வயது இருக்கும். அந்த பெரியவர் இந்த சிறுவனை என்னுடன் அனுப்புங்கள். நான் இவனை பார்த்துக்கொள்கிறேன். நான்றாக படிக்க வைக்கிறேன் என்று கூறினார். அதற்கு பெற்றோர் இவன் எங்கள் தலைமகன். எங்களுக்கு கொள்ளி போடவேண்டியவனும் இந்த குடும்பத்தை வழி நடத்துபவனும் இவனே ஆவான். இவனை அனுப்ப முடியாது என்று கூறினார்கள். ஆனால் அந்த பெறியவர் சிறுவன் பிறந்ததும் நீங்கள் இவனது ஜாதகம் பார்த்திருப்பீர்கள். அதை பற்றி எனக்கும் தெரியும். இவன் உங்களுக்கு கொள்ளி போடமாட்டான். இவன் குடும்பத்துடன் இருக்க மாட்டன். இவன் ஒரு சுயம்பு. இவனை உங்களால் வளர்க்க முடியாது. நான் வடநாடு செல்கிறேன். என்னுடன் கூட்டி சென்று படிக்க வைத்து விடுகிறேன். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு அவனே உங்களை தேடி வருவான். ஆகவே இப்போதே இவனை என்னுடன் அனுப்பி விடுங்கள் என்று அவர் கூறியதால், வேறுவழி இல்லாமல் சிறுவன் தாங்கி கொண்டு இருக்கும்போதே பெற்றோர் அழுதபடி பெரியவரிடம் தந்தார்கள்,



அதன் பிறகு சிறுவனை அழைத்து சென்ற பெரியவர் வடநாடு சென்று அவரின் ஆசிரமத்தில் படிக்க வைத்து பல கலைகளையும் கற்று தந்தார்.

அங்கேயும் ஆசிரமத்தில் இருக்க மாட்டான். காடு மலை என்று சுற்றி திரிந்தும் நாகா சாதுக்கள், அகோரிகள், பாபாஜி மற்றும் துறவிகளுடன் இருந்து பல கலைகளையும் கற்று தேர்ந்தார், அதற்குள் அந்த பெரியவரின் இறுதி காலம் நெருங்கியவுடன் உன் பெற்றோர் கோயம்புத்தூர் வெள்ளிங்கிரி மலையின் அருகில் உள்ள பகுதியில் வசிக்கிறார். நீ இனி இங்கு இருந்தது போதும் அவர்களுடன் சென்று சாதாரண மனிதன் போலவே இந்த உலக அனுபவங்களை அறிந்து கொள். ஆனால் நீ எங்கு இருந்தாலும் உன் நித்ய பூஜைகளை தினமும் விடாமல் செய்ய வேண்டும். உரிய நாளில் உன்னை வந்து அழைத்து கொள்வோம் என்று கூறி அனுப்பிவைத்தார். சிறுவன் வாலிப பருவத்தில் தாய் தந்தையரை கண்டுபிடித்து கோயம்புத்தூரில் ஒரு சிறிய வீட்டில் வசித்து வந்தான். வாலிப பருவம் அவனை வீட்டில் இருக்க விடவில்லை. வெளியே சென்று சுற்றி திரிந்தான். இவன் செய்யும் சித்து வேலைகளை கண்டு பல நபர்கள் இவனிடம் நண்பரானார்கள் யாருக்கு உடல் நிலை சரி இல்லை என்றாலும் அவர்களுக்கு வைத்தியம் பார்த்தான். பேய்,பிசாசு பில்லி சூனியத்தால் பாதிக்கப்பட்டவர்கள். கைகால் வராமல் இருப்பவர்கள். எந்தவிதமான பிரச்சினைகளாக இருந்தாலும் அதை சரி செய்வார். இப்படி இருக்கும் காலங்களில் நண்பர்களுக்கு ஓர் பிரச்சினை என்றால் முன் நின்று தன் உயிரையும் பணயம் வைத்து காத்து வந்தான். அதனால் தன்னை சுற்றி எப்போதும் ஓர் நண்பர் கூட்டம் இருந்து கொண்டே இருந்தது. தீடீரென ஓர் நாள் அவன் உடல் வலியால் படுத்திருந்தான். அப்போது அவன் மயிர்கால்கள் சிலிர்த்து தலை முதல் பாதம் வரை ஓர் இறை உணர்வு ஏற்பட்டது. அதனால் வெள்ளிங்கிரி ஆண்டவனிடம் ஓடினான். அங்குகாடுகளில் சுற்றி பல சித்த அனுபங்களையும் பெற்றான்.

முருகன் கோவில் கட்டிய கங்காதீஸ்வர சித்தர் இவரை பேரா நீ மாறி விடு உனக்கு இந்த நண்பர் கூட்டம் வேண்டாம். நீ இனி சித்தர் கூட்டத்தில் இணைந்து விடு. உன்னை நான் வழி நடத்துகிறேன் என கூறி வாரி அனைத்து தன் தோளில் சாய்த்துக் கொண்டார்.

அன்று முதல் இவரை இந்த பரத்தையே சிவமாக கொண்டு நீ சிறு வயது முதல் வாழ்ந்ததால் உன்னை இனி பரதேசி சித்தன் என்றே அழைக்கிறோம் என நாமம் சூட்டி வாழ்த்தி ஆசீர்வாதம் செய்து அனுப்பிவைத்தார்கள். பரதேசி சித்தன் என நாம கரணம் சூட்டப்பட்டவுடன் அவரின் உருவம் அப்படியே மாறிவிட்டது. 6 அடி உயரம் பருத்த தோள்கள் ஜடா முடி. அந்த பரவ சிவனை நேரில் கண்டால் எப்படி இருக்குமோ அப்படியே இருந்தார். உடல் முழுவதும் சாம்பல் கண்களில் காந்தம். அவரை கண்டவர்கள் சிலர் பயந்து ஓடினார்கள். சிலர் கை எடுத்து வணங்கினார்கள். அவர் மலையைவிட்டு இறங்கி வந்த அழகை காண கோடி கண்கள் வேண்டும். அந்த பரமசிவனே நடந்து வருவது போன்று ஓர் நடை இறைவா வணங்குகிறேன். இதற்கு மேல் வார்த்தை இல்லை. இது ஒரு ஆனந்த அனுபவம். பரதேசி சித்தன் அதன் பிறகு குமாரபாளையம் பகுதியில் ஒரு சிறிய குடில் அமைத்து அதற்கு சிவசக்தி சிவயோகி சித்தர்கள் அறக்கட்டளை என நாமம் சூடி கைலாச நாதரையும் மானசீக சிவசக்தியும் 18 சித்தர்களையும் பிரதிஷ்டை வழிபட்டு வருகிறார். காவல் தெய்வங்களும் உண்டு. மனிதனின் உடல் பிணியை போக்க மருந்துகள் தயாரித்து விற்பனை செய்து அதன் மூலம் வரும் வருவாயில் தெய்வங்களுக்கு நித்ய பூஜைகளை செய்து வருகிறார்.

இங்கு ஓர் மனிதனின் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வும் உண்டு.

# மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள பதற்றநிலை தொடர்ந்தால் முகம்கொடுக்க அரசு தயார்

தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அலி சப்ரிதெரிவிப்பு

மத்திய கிழக்கில் நிலவும் பதற்ற நிலை பாரதூமானதாக தொடருமாயின் அதனை எதிர்கொள்வது தொடர்பில் முன்கூட்டிய தயார்நிலைக்காக மூன்று விசேட குழுக்களை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்த தீர்மானம், மிகவும் சரியானதாகுமென வெளிநாட்டலுவல்கள் அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி தெரிவித்தார்.

சர்வதேச செயற்பாடுகளை கட்டுப்படுத்த முடியாவிட்டாலும், அதன் காரணமாக நாடு வீழ்ச்சியடையும் வரை பார்த்துக்கொண்டிருக்கத் தேவையில்லை எனத் தெரிவித்த அமைச்சர், ஏற்படக்கூடிய எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (01) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் அலி சப்ரி இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொலைநோக்குப் பார்வையால்தான் இலங்கை இன்னொரு வெனிசுலாவாக மாறாமல் பொருளாதார ரீதியில் ஸ்திரமான நிலைக்கு கொண்டுவர முடிந்தது என்றும், எனவே கட்சி அரசியலை புறந்தள்ளிவிட்டு நாட்டைக் கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் வேலைத்திட்டத்திற்கு ஆதரவளிப்பது அனைவரினதும் பொறுப்பாகும் என அமைச்சர் வலியுறுத்தினார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,



ஒரு நாடு என்ற வகையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் குறிப்பாக சர்வதேச அளவில் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்திற்கு பெரிஸ் கிளப் உட்பட எமக்கு கடன் வழங்கியுள்ள நாடுகளின் ஆதரவைப் பெறுவது முதல் சவாலாக இருந்தது. அதன்போது, பல்வேறு மாற்றுக் கருத்துக்கள் கொண்ட நாடுகளை கையாள்வது மிகவும் கடினமான பணியாக மாறியது.

ஆனால் கடன் மறுசீரமைப்பு பணிகளை வெற்றிகரமாக நிறைவு செய்ய வெளிநாடுகளின் ஆதரவைப் பெற முடிந்தது. அது நமது வெளியுறவுக் கொள்கைக்குக் கிடைத்த பாரிய வெற்றி என்றே கூற வேண்டும். வெளிவிவகாரக் கொள்கை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ள அந்த அறிவைப் பயன்படுத்தி வெளிநாடுகளை சரியான முறையில் முகாமைத்துவம் செய்து எம்மால் முன்னேற முடிந்தது.

கடந்த மாதத்தில் ஜப்பான், சிங்கப்பூர், ருமேனியா, போலந்து ஆகிய நாடுகளுக்கான விஜயங்கள் மிகவும் வெற்றிகரமாக அமைந்திருந்தன. அந்தப் பயணங்கள் நீண்டகால பிரச்சினைகள் பலவற்றை தீர்க்க உதவியது. குறிப்பாக ஜப்பானால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதன்போது, நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 1.1 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான 13 திட்டங்களை மீண்டும் தொடங்க முடிந்தது. சிங்கப்பூருடன் முதலீடுகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. புதிய தொழில் வாய்ப்புகளை அதிகரிப்பது குறித்து ருமேனியாவுடன் கலந்துரையாடப்பட்டது. போலாந்திற்கு இலங்கையில் தூதரகம் ஒன்று இல்லை என்பதால், அது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

# கட்டுப்பணத்தை விரைவாக செலுத்த வேட்பாளர்களுக்கு அறிவுறுத்தல்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் கட்டுப்பணத்தை கூடிய விரைவாக செலுத்துமாறு, தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவிக்கையில், இறுதி நேரத்தில் ஏற்படும் நெருக்கடி நிலையை தவிர்ப்பதற்காக கட்டுப்பணத்தை முன்கூட்டியே செலுத்துமாறு கூறினார். நேற்றுக்காலை (01) வரை ஆறு வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

சுயேட்சை வேட்பாளர்களாக ரணில் விக்கிரமசிங்க மற்றும் சரத் கீர்த்திரத்ன ஆகியோர் கட்டுப்பணம் செலுத்தியதுடன், அபிநவ நிவாஹல் பெரமுனவின் ஓஷல ஹேரத், இலங்கை தொழிலாளர் கட்சியின் ஏ.எஸ்.பி லியனகே, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய ஜனநாயக முன்னணியின் உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ ஆகியோரும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் இம் மாதம் 15 வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஜனாதிபதி தேர்தல் செப்டம்பர் 21இல், நடைபெறும் என தேர்தல் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

# காலணிக்குள் 'ஐஸ்" கடத்திய சிறைச்சாலை அதிகாரி கைது

## உடனடியாக பணிநீக்க உத்தரவு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

போதைப்பொருளை வைத்திருந்தாரென்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வெலிக்கடை சிறைச்சாலை அதிகாரி, சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமான காமினி பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் பணிபுரியும் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். வெலிக்கடை சிறைச்சாலையின் பிரதான நுழைவாயிலில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது சிறைச்சாலை அவசர தந்திரோபாயப் படை அதிகாரிகளே இவரை கைது செய்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட சிறைச்சாலை அதிகாரியை பரிசோதித்த போது, அவரிடம் "ஐஸ்" எனச் சந்தேகிக்கப்படும் போதைப்பொருள் பொதிகள் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அவற்றை அந்த சிறைச்சாலை அதிகாரி தனது காலணிக்குள் சூட்சுமமாக மறைத்து வைத்திருந்ததாகவும் கைது செய்யப்பட்டுள்ளவர் சுமார் 20 வருடங்கள் சிறைச்சாலையில் பணியாற்றி வரும் உத்தியோகத்தர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பொரளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# பேருவளை மாலிகாஹேனை ஸெம் ரிபாய் ஹாஜியார் வித்தியாலய 2004 O/L Batch சம்பியன்








பேருவளை மாலிகாஹேனை ஸெம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலய பழைய மாணவர்களுக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி பாடசாலையின் அதிபர் எஸ் குமார் தலைமையில் இரவு பகல் போட்டியாக வெகுவிமரிசையாக அண்மையில் நடைபெற்றது. இத்தொடரில் 32 அணிகள் பங்குபற்றின. இறுதிப்போட்டியில் 2013 O/L Batch அணியும் 2004 O/L Batch அணியும் மோதின. இதில் 2004 O/L Batch அணி வெற்றி பெற்று சம்பியனானது. 100 வருட வரலாற்றைக் கொண்ட பாடசாலை வரலாற்றில் இது பெரும் சாதனையாக கருதப்படுகின்றது. சமூக சேவையாளர் பாஸி சுபைரும் இதி'ல் கலந்து கொண்டார்.

# இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர் உயிரிழப்பு

நெடுந்தீவு அருகே இலங்கை கடற்பரப்பில் இடம்பெற்ற விபத்தில் இந்திய மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் காணாமல் போயுள்ளார்.சட்டவிரோதமான முறையில் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர் குழுவொன்றை கைது செய்ய சென்ற போது, அவர்கள் பயணித்த படகு கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.இவ்விபத்தில் நான்கு மீனவர்கள் கடலில் விழுந்துள்ளதுடன் மூவர் மீட்கப்பட்டு புங்குடுதீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மற்றைய மீனவரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

# சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம்



கலேவெல தேவஹூவ, புலனவெவ கிராமத்தைச் சேர்ந்த திருமதி நிஸ்வர்தீன் பாத்திமா நிஸ்ரா, இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக, சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். தேவஹூவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைப் பயின்ற இவர், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவப் பீடத்திற்குத் தெரிவாகி, அங்கு ஆங்கில மொழி மூலம் முகாமைத்துவமும் தகவல் தொழிநுட்பப் பிரிவில் "விஞ்ஞானமாணி" பட்டத்தையும் பெற்றார்.

ஆங்கில மொழி ஊடாக சிறப்புச் சித்தி பெற்று "சிறப்புச் சட்டமாணி" என்ற பட்டத்தையும் இவர் பெற்றுக் கொண்டார். சட்டக் கல்லூரியினால் நடாத்தப்படும், சட்டத்தரணிகளுக்கான இறுதிப் பரீட்சையிலும் தோற்றி சித்தியடைந்துள்ள பாத்திமா நிஸ்ரா, தேவஹூவ கிராமத்தின் முதலாவது இளம் சட்டத்தரணியாவார்.

இவர், தேவஹூவவைச் சேர்ந்த நிஸ்வர்தீன் நிஸ்பா தம்பதியினரின் மூன்றாவது புதல்வியுமாவார்.

# யாழில் அதிகரிக்கும் குற்றச்செயல்கள் முகத்தை மறைத்தபடி வருவோர் கைவரிசை!

(பருத்தித்துறை நிருபர்)



யாழ்ப்பாணத்தில் இரவு வேளைகளில் முகங்களை மறைத்து கறுப்பு துணிகளால் கட்டியவாறு துவிச்சக்கர வண்டிகளில் வந்து குற்றச்செயல்களில் ஈடுபடும் நபர்கள் பற்றிய தகவல்களை தருவோருக்கு சன்மானம் வழங்கப்படுமென யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டார தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், கொக்குவில், மானிப்பாய் போன்ற பகுதிகளில் இடம்பெற்ற பல திருட்டு சம்பவங்கள் மற்றும் கொள்ளை சம்பவங்களுடன் குறித்த கும்பல்களுக்கு தொடர்பு இருப்பது பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் குறித்த கும்பல் துவிச்சக்கர வண்டிகளில் வீதிகளில் முகங்களை மறைத்தவாறு திரியும், சி.சி.ரி.வி காட்சிகளை பொலிஸார் வெளியிட்டு , அதிலுள்ள நபர்கள் பற்றிய தகவல்களை அறிந்தால் , அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறும் கோரியுள்ளனர்.

தகவல்கள் தரும் நபர்களின் இரகசியம் பாதுகாக்கப்படுமெனவும் அவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும் எனவும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் பஸ்சில் பயணம் செய்த வெளிநாட்டவர்களின் 11 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன.

வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் பஸ்சில் யாழ்.நகர் பகுதிக்கு வந்து திரும்பிய போதே அவர்களின் நகைகள் களவாடப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## விபத்தில் சிக்கியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(கரவெட்டி தினகரன் நிருபர்)

பருத்தித்துறை புற்றளை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர் உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை புற்றளை பகுதியில் கடந்த மாதமளவில் இவ்விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வடமராட்சி கல்வி வலய ஊழியரான யோகலிங்கம் அருள்காந்தன் (வயது 33) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

கடந்த ஒருமாத காலமாக வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த இவர் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

# வடக்கின் உதயம்

## விசுவமடுவில் இரு குழுக்களுக்கிடையில் மோதல்; நால்வர் வைத்தியசாலையில் அனுமதி

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப்பகுதிகளான கண்ணகிநகர், புன்னைநீராவி,தர்மபுரம் ஆகிய கிராமங்களில் வசிக்கும் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் நால்வர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

விசுவமடு 12 ஆம் கட்டைப்பகுதியை சேர்ந்த நபர்கள் உள்ளிட்ட குழுவினரால் மற்றைய குழுவினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது கண்ணகிநகர், புன்னைநீராவி, தர்மபுரம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 44,26,30,19 ஆகிய வயதுகளையுடைய இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் தர்மபுரம் மருத்துவமனை கொண்டுசெல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மருத்துவமனையில் அவசரசிகிச்சை பிரிவில் இவர்கள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முல்லை கலைஞர்களின் கோவலன் கண்ணகி நாட்டுக்கூத்து





(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவு கலைஞர்கள் முல்லைமோடி நடையில் நடித்து வரும் கோவலன் கண்ணகி நாட்டுக்கூத்து கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் அரங்கேற்றப்படவுள்ளது.

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் பிள்ளையார் ஆலயத்தின் திருவிழாவை முன்னிட்டு கிழக்கு பல்கலைக்கழகம் முன்னெடுக்கும் உள்ளூர் கலைகளுக்கான விழா கடந்த 31ஆம் திகதி மாமாங்கேஸ்வரர் ஆலய முன்றலில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழகத்தினால் 'பாரம்பரிய அரங்காற்றுகைகளும்,காட்சிப்பொருளும்' என்ற தொனிப்பொருளில் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைப்பீட தலைவர் துஸ்ஸந்தி சபயசிப் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் வ.கனகசிங்கம் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார்.

## ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் நினைவேந்தல் நிகழ்வுகள்



(யாழ். விசேட நிருபர்)

ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்றைய தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.யாழ். ஊடக அமையத்தில் அமையத்தின் தலைவர் கு. செல்வக்குமார் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் நிலக்சனின் உருவ படத்திற்கு மலர் மாலை அணியப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டு, சுடரேற்றப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் ஊடக கற்கை மாணவனும், சாரளம் சஞ்சிகையின் ஆசிரியரும், யாழ், மாணவர் பேரவையின் முன்னாள் தலைவருமான சகாதேவன் நிலக்சன் 2007ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01ஆம் திகதி அவரது வீட்டிலிருந்த வேளை, அவரது வீட்டுக்கு அதிகாலை 5 மணியளவில் சென்ற ஆயுததாரிகள் நிலக்சனை வெளியே அழைத்து அவரது பெற்றோர்கள் முன்னிலையில் சுட்டுப்படுகொலை செய்தனர்.

# உலக தமிழ் பூப்பந்தாட்டத் தொடரின் ஆரம்ப நிகழ்வில் ஆளுநர் பங்கேற்பு





(கரவெட்டி தினகரன் நிருபர்)

ஒன்பதாவது உலக தமிழ் பூப்பந்தாட்டத் தொடர் இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாண பல்கலைக்கழக உள்ளக அரங்கில் பூப்பந்தாட்டத் தொடருக்கான ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வட.மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்து சிறப்பித்தார்.

12 நாடுகளைச் சேர்ந்த 514 வீர, வீராங்கனைகளின் பங்குபற்றுதலுடன் ஆரம்பமாகவுள்ள ஒன்பதாவது உலக தமிழ் பூப்பந்தாட்டத் தொடரின் இறுதி போட்டிகள் எதிர்வரும் 04 ஆம் திகதி நடைபெறவுள்ளன. 33 பிரிவுகளின் கீழ் இந்த போட்டிகள் நடைபெறுவதுடன், சர்வதேச வீரர்களுக்கான பிரிவும் இம்முறை இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

இந்நிகழ்வில் உரை நிகழ்த்திய ஆளுநர்,

உலகில் எந்த நாட்டில் வசிக்கின்ற போதிலும், சொந்த மண்ணை நேசித்து உலக தமிழ் பூப்பந்தாட்டப் பேரவையின் உறுப்பினர்கள் செயற்படுகின்றனர். தமது மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக அந்நியர்களின் மண்ணில் பல்வேறு சவால்களை அவர்கள் எதிர்நோக்கி வருகின்றனர். அவ்வாறான உதவிகளில் ஒன்றே இந்த பூப்பந்தாட்டப் பேரவையின் முயற்சியாகும். ஒரு தனி மனித முயற்சியின் பயனாக இன்று உலகளாவியரீதியில் இந்த பேரவை ஸ்தாபிக்கப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது. இந்த பேரவையின் ஸ்தாபகருக்கு வடக்கு மாகாண மக்கள் சார்பில், வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் கூறிகொள்கின்றேன். நல்லவற்றை ஏற்று, அவற்றை பாராட்டி கௌரவிக்க நாம் பழகிக்கொள்ள வேண்டும்.

அதனை அனைவரும் கற்றுக் கொள்ளவும் வேண்டும். இளைய சமூகத்துக்கு அதனை கற்றுக்கொடுக்க வேண்டும். விளையாட்டை உடல் ரீதியான பயிற்சியாக மாத்திரமின்றி, உளரீதியான பக்குவத்தை ஏற்படுத்தும் விடயமாகவும் கருதவேண்டும். அத்துடன் தாய் நாட்டுக்கான உதவிகளை புரியும் புலம்பெயர் உறவுகளுக்கும் இந்த சந்தர்ப்பத்தில் நன்றிகளை கூறிக் கொள்கின்றேன் என அவர் தெரிவித்தார்.

# மன்னார் வைத்தியசாலையில் மூலிகை பயிர்ச் செய்கை

### பணிப்பாளர் வைத்தியர் எம்.எச்.எம்.அஸாத்

(தலைமன்னார் விஷேட நிருபர் )



மன்னார் பொது வைத்தியசாலை வளாகம் பரந்த பரப்பளவாக காணப்படுவதால் தாவரங்கள் பயிரிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எம்.எச்.எம். அஸாத் தெரிவித்தார்.

மன்னார் பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எம்.எச்.எம்.அஸாத் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் பொது வைத்தியசாலை வளாகம், கட்டடங்கள் தவிர அதிகமான இடங்கள் வெற்றுக் காணிகளாக காணப்படுகின்றன.

ஆகவே வெற்றுக்காணிகளில் மக்களின் உடல் நலத்துக்கு அமைவான பயிர்ச் செய்கைகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை இங்குள்ள யாவரின் ஒத்துழைப்புடன் மேற்கொண்டுள்ளேன்.

அத்துடன் வைத்தியசாலையின் சுற்றுச் சூழலும் சுத்தமாக இருக்க வேண்டும். அண்மையில் இங்கு எமது வைத்தியர்கள், ஊழியர்கள் உட்பட பலரின் ஒத்துழைப்புடன் பாரிய சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த வைத்தியசாலையில் கடமைபுரிவோர் தங்கள் சேவைகளை வழங்குவதுடன் மண் வளத்தையும் பயன்பெறச் செய்வதுடன் சுற்றுச் சூழலையும் துப்புரவாக வைத்திருக்கவும் இது உதவும்.

பயிர்ச் செய்கையில் கிடைக்கும் வருமானத்தை இவ்வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு உதவி செய்யும் ஒரு நோக்கமாகவே இதை முன்னெடுக்கின்றோம்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையானது ஒரு பரந்த காணி பரப்பளவாக காணப்படுவதால் அடிக்கடி சிரமதானத்தின் மூலம் துப்புரவு செய்யும் ஒரு நிலைமையும் காணப்படுகின்றது.

இதை நாங்கள் தொடர்ந்து பராமரிக்காவிடில் இது மீண்டும் பற்றைகளாக மாறும் அபாயமும் தோன்றி வருகின்றது. ஆகவேதான் நாங்கள் தற்பொழுது சோளம் செய்கை மற்றும் மூலிகை வளர்ப்பு போன்ற திட்டத்தை முன்னெடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்

## சாரதிகளுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு



பாடசாலை சிறுவர்களுக்கான பாதுகாப்பு தொடர்பாக போக்குவரத்து சேவை வழங்கும் வாகன உரிமையாளர்கள் மற்றும் சாரதிகளுக்கான விழிப்பணர்வுச் செயலமர்வு யாழ்ப்பாண.மாவட்ட பதில் செயலாளர் ம. பிரதீபன் தலைமையில் நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இச்செயலமர்வில் சிறுவர் துஷ்பிரயோகங்களை அடையாளம் காணுதல், சிறுவர்களுக்கான பாதுகாப்பான பயணம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் செயற்பாடுகள் தொடர்பாக சாரதிகளுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் உதவி மாவட்டச் செயலாளர், உதவி ஆணையாளர் மோட்டார் போக்குவரத்து திணைக்களம், சட்ட வைத்திய அதிகாரி, ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை, மாவட்டச் செயலக பெண்கள் சிறுவர் பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகன உரிமையாளர்கள் மற்றும் சாரதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

## அனலைதீவு வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பம்



(பருத்தித்துறை நிருபர்)

யாழ்ப்பாணம் அனலைதீவு பகுதியில் நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் காணப்பட்ட வீதிகள் அபிவிருத்திசெய்யப்படவுள்ளன.

மிகவும் மோசமாக பழுதடைந்திருந்த வீதிகளை புனரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத்த கோரிக்கைக்கமைவாக அமைச்சரினால் 2024 ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண , நிதி ஒதுக்கீடின் கீழ் 1.7,கிலோமீற்றர் வரையான வீதி புனரமைப்புக்கென ரூ. 25 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்நிலையில் நேற்றையதினம் குறித்த வீதியின் புனரமைப்பு பணிகளின் ஆரம்ப நிகழ்வுகள் அனலைதீவு இறங்குதுறைக்கு அருகில் நடைபெற்றது.

# வெளிநாடு செல்ல இருந்த இளைஞன் கழுத்து நெரித்து கொலை

### பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிப்பு



(மாங்குளம் குரூப் நிருபர்)

வவுனிக்குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்ட இளைஞன் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டுள்ளதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. வவுனிக்குளத்தில் கடந்த 30ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்ட இளைஞன் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட சட்டவைத்திய அதிகாரியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

முல்லைத்தீவு யோகபுரம் மல்லாவி பகுதியைச் சேர்ந்த ஆனந்தராசா ஜீவன் (வயது 27) என்ற இளைஞனே இவ்வாறு வவுனிக்குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். கடந்த 29ஆம் திகதி இரவு ரூ. 20 இலட்சம் பணத்துடன் யோகபுரத்திலிருந்து பாண்டியன் குளம் சென்ற இளைஞனை காணவில்லையென உறவுகள் தேடிய போது அதிகாலை வவுனிக்குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு வருகைதந்து சடலத்தை பார்வையிட்ட முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ் ஏச் மக்ரூஸ் சடலத்தை பிரேதபரிசோதனையின் பின்னர் உறவுகளிடம் ஒப்படைக்குமாறு தெரிவித்தார்

இந்நிலையில் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் இடம்பெற்ற பிரேத பரிசோதனையின் முடிவில் இளைஞன் கழுத்து நெரித்து கொல்லப்பட்டுள்ளதாக சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் நட்டாங்கண்டல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# யாழில் வன்முறை கும்பலை ஏவி கணவன் மீது தாக்குதல்

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் கணவனை வன்முறை கும்பலை ஏவி படுகொலை செய்த குற்றச்சாட்டில் மனைவியும், மனைவிக்கு துணை புரிந்த இளைஞன் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உடுப்பிட்டி இமையான் பகுதியில் கோழி இறைச்சி விற்பனையில் ஈடுபட்டு வந்த குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் கடந்த ஜூன் மாதம் 03ஆம் திகதி அதிகாலை வெளிமாவட்டத்திலிருந்து வாகனமொன்றில் கோழிகள் கொண்டு வரப்பட்டு , அவருக்கு விநியோகம் செய்த பின்னர் வாகனம் திரும்பி சென்றுள்ளது.

அதன்பின்னர் வீட்டின் வெளியே சத்தம் கேட்ட போது குடும்பஸ்தர் வெளியே வந்து பார்த்த போது, வன்முறை கும்பல் அவர் மீது வாள் வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

சத்தம் கேட்டு அவரது மனைவி வெளியே வந்த போது, வாள் முனையில் அச்சுறுத்தி அவர் அணிந்திருந்த தங்க சங்கிலியை கொள்ளையிட்டு அக்கும்பல் தப்பி சென்றுள்ளது.

வாள் வெட்டில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த சில நாட்களில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்

சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்துள்ளனர்.

அந்நிலையில், குடும்பஸ்தரின் கொலையை , நகைக்கான கொலையாக மாற்றவே நகை கொள்ளையடிக்கப்பட்டதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கொலையானவரின் மனைவியை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், மற்றுமொரு இளைஞனையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரிடமும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# தர்காநகர் இஸ்லாமிய நலன்புரி சங்க ஏற்பாட்டில் கௌரவிப்பு








தர்கா நகர் அல்ஹம்ரா,ஸாஹிரா, முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளிலும் 2023 ஆம் வருடம் ஐந்தாம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையில் நூற்றுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை கௌரவித்து பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கும் வைபவம் தர்காநகர் இஸ்லாமிய நலன்புரிச் சங்க ஏற்பாட்டில் அண்மையில் அல்ஹம்ரா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. சங்கத்தின் தலைவர் தேசபந்து ஏ.பி.எம். ஸூஹைர் ஜே.பி. தலைமையில் நடைபெற்றது.

மேற்படி வைபவத்தில் மூன்று பாடசாலைகளிலிருந்தும் 142 மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. வைபவத்தில் பிரதம அதிதியாக அரச மருந்தக கூட்டுத் தாபனத்தின் முன்னாள் தலைவர் கலாநிதி ரூமி ஹாஷிம், கௌரவ அதிதிகளாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஸ்லம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான அம்ஜத், இப்திகார் ஜெமீல், தேசகீர்த்தி நஜீப் ஹாஜியார், விசேட அதிதிகளாக கலிபத்துஷ் ஷாதுலி மௌலவி மபாஸூல் ஹூஸைன், ஜெஸூக் அஹம்மத், அல்ஹம்ரா அதிபர் பஸ்லியா ஸஹ்ரான், ஓய்வு பெற்ற அதிபர்களான எம்.இஸட். எம்.நயீம், முஜீப்தீன். பிரதி அதிபர் பர்ஹான் நளீமி முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான பதியுதீன் ஹாஜியார், நபீல் நஸீர், ஹஸீப் மரிக்கார், முஹம்மது காமில், நகர சபை உறுப்பினரான சியான் முனவ்வர், வைத்தியர்களான ரஹ்மத் துல்லாஹ் நஜீப், ஸாபித் அன்வர் மற்றும் களுத்துறை மாவட்ட ஜனாஸா சங்க உறுப்பினர்கள், மற்றும் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் கலந்து சிறப்பித்தனர்.




(பேருவளை விசேட நிருபர்)

# 85 ஆண்டுகால வங்கிச் சேவையை கொண்டாடுகிறது இலங்கை வங்கி

இலங்கையின் முதன்மையான நிதி நிறுவனமான இலங்கை வங்கி (BOC) தனது 85ஆவது ஆண்டுவிழாவை பெருமையுடன் கொண்டாடுகிறது. ஆரம்பிக்கப்பட்ட முதல் நாளிலிருந்து தனது வாடிக்கையாளர்களின் பல்வேறுபட்ட தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு வங்கி காட்டிய அர்ப்பணிப்பால் விளைந்ததே இந்த 85ஆவது ஆண்டுவிழா என்ற மைற்கல்லாகும். இந்த அர்ப்பணிப்பு கடந்த எட்டரை தசாப்தங்களாக நாட்டின் பொருளாதாரத்திற்கு மகத்தான பங்களிப்பை வழங்கியுள்ளது.

இலங்கை வங்கியானது 1939 ஆகஸ்ட் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, இலங்கைப் பொருளாதாரத்தின் தூணாக நின்று மில்லியன் கணக்கான மக்களின் வங்கிச்சேவை அனுபவத்தை மாற்றியமைத்துள்ளது. சாதாரண மக்களுக்கும் நிதிச் சேவைகளை அருகிற் கொண்டு சென்றதிலிருந்து தற்கால டிஜிட்டல் வங்கித் தீர்வுகள் வரை இலங்கை வங்கியின் பயணம் எப்போதும் மெச்சும்படியாகவே இருந்து வந்துள்ளது.



202 4ஆம் ஆண்டுக்கான 'டெக்னோவேஷன் ' விருதுகளில் இலங்கை வங்கியின் அர்ப்பணிப்பு அங்கீகரிக்கப்பட்டதோடு இதில் வங்கியானது 'ஒட்டுமொத்த விருது டிஜிட்டல் கொடுப்பனவுகளில் சிறந்து விளங்கியமைக்கான தங்க விருது, 'அனைத்து மக்களையும் உள்ளடக்கிய நிதிச் சேவைகளை வழங்கும் ஆண்டின் சிறந்த வங்கிக்கான தங்க விருது, மற்றும் 'ஆண்டின் சிறந்த பொதுவான ATM இயக்கி' போன்ற விருதுகளை வாரிக் குவித்தது. நாம் ஏன் இலங்கையின் முதன்மையான நிதி நிறுவனமாக இருக்கிறோம் என்பதற்கு இந்த பாராட்டுக்கள் சான்று பகர்கின்றன. சவால்கள் நிரம்பிய இக்காலகட்டத்தில் புகழ் பெற்ற 'பாங்கர்' சஞ்சிகையால், இலங்கை வங்கி 'ஆண்டின் சிறந்த வங்கி – இலங்கை வங்கி' என்ற கௌரவத்தைப் பெற்றது.

அத்துடன் தொடர்ந்து 13ஆவது ஆண்டாக உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளில் பட்டியலிடப்பட்ட ஒரே இலங்கை வங்கி என்ற கௌரவத்தையும் வென்றமை வங்கியின் நிலையான வளர்ச்சியையும் வாடிக்கையாளர்கள் வங்கி மேல் கொண்டுள்ள நம்பிக்கையையும் பறைசாற்றுகிறது.

புலம்பெயர் தேசங்களில் அரும்பாடுபட்டு உழைத்துத் தேடிக்கொண்ட வெளிநாட்டு நாணயங்களை பாதுகாப்பாக நாட்டுக்கு அனுப்பியமைக்காக புலம்பெயர் இலங்கையர்களுக்கு வெகுமதி அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட 'பிட்ட பிட்ட ரட்ட தாகி' நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக நடாத்தி முடித்தமை 85 ஆவது ஆண்டின் தனித்துவமான முயற்சிகளில் ஒன்றாகும். இத்திட்டத்தின் மாபெரும் இறுதிப் பரிசாக 30 மில்லியன் ரூபாய் பெறுமதியான, முற்றிலும் தளவாடமிடப்பட்ட ஆடம்பர வீடொன்று அதிர்ஷ்டசாலி வெற்றியாளருக்கு அண்மையில் வழங்கப்பட்டது.

'85ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில், கடந்து வந்த பாதையை பெருமிதத்துடன் பார்க்கும் நாம் இந்த நாட்டிற்கும் அதன் மக்களுக்கும் சேவையாற்றும் உறுதியுடன் வரும்நாட்களை எதிர்பார்த்துள்ளோம்' என இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் திரு. ரஸல் பொன்சேகா தெரிவித்தார். "எங்கள் பயணம் எப்போதுமே வங்கிச் சேவைக்கு மேலதிகமனதாகவே இருந்து வந்துள்ளது. அதாவது இது வெறும் வங்கிச் சேவை என்பதைத் தாண்டி எமது மக்களை வலுப்படுத்துவதையும் தேசிய வளர்ச்சிக்கு உதவுவதையும் இலக்காக கொண்டது. ஒவ்வொரு இலங்கையரும் வளமாக வாழும் வாய்ப்பினை உறுதி செய்வதற்காக நாங்கள் தொடர்ந்து புதுமைகளை உள்வாங்கி எங்கள் சேவைகளை விரிவுபடுத்துவோம்.

இலங்கை வங்கியானது இந்தப் புதிய ஆண்டில், எதிர்காலத்தை மையமாகக் கொண்ட தொலைநோக்குப் பார்வையுடன், புதிய மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை உள்வாங்கிக்கொண்டு நிதிசார் அறிவு, நிலைத்தன்மை மற்றும் சமூக அபிவிருத்திக்கான தனது அர்ப்பணிப்பை விரிவுபடுத்த உறுதிபூண்டுள்ளது.

மேலும் இலங்கை வங்கி அதன் 85வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில், பின்வரும் தயாரிப்புகள் மற்றும் நிகழ்வுகளை அறிமுகப்படுத்துகிறது.

BOC ஸ்மார்ட் சுயாதீனத் தொழில்வாண்மையினர் சேமிப்புத் திட்டம்: இந்த சிறப்பு சேமிப்புத் திட்டம் சுயாதீனத் தொழில் வாண்மையினர் மற்றும் இணையவழி தொழில்முனைவோருக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது Fiverr மற்றும் Upwork போன்ற தளங்களில் இருந்து வெளிநாட்டு நாணய வருவாயை நிர்வகிப்பதை எளிதாக்குவதோடு தனித்துவமான பொருளாதாரத் தேவைகளுக்கு ஏற்ப தடையற்ற வங்கி அனுபவத்தை வழங்குகிறது.




# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பேராதரவு வழங்கும் முடிவை நாட்டு மக்கள் எடுத்துவிட்டனர்

## இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் சுப்பையா ஆனந்தகுமார்

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல்வாதிகள் எத்தகைய முடிவுகளை எடுத்தாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பேராதரவு வழங்கும் முடிவை நாட்டு மக்கள் எடுத்துவிட்டனர் என்று ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூன்றுபேர் கொண்ட குழுவின் உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்தார்.அத்துடன், கட்சி பற்றியோ அல்ல அரசியல் நலன்கள் குறித்தோ சந்திக்கும் நேரம் இதுவல்ல எனவும், நாடு மற்றும் நாட்டு மக்களின் நலன் தொடர்பில் சிந்தித்து செயற்பட வேண்டிய தருணமே இதுவெனவும் அவர் கூறினார்.



ஜனாதிபதி தேர்தலில் தமது கட்சி சார்பில் வேட்பாளர் ஒருவரை களமிறக்க வைப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி எடுத்துள்ள முடிவு சம்பந்தமாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே சுப்பையா ஆனந்தகுமார் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“நாடு பற்றியெரியும் வேளையிலேயே சவால்களுக்கு மத்தியில் நாட்டை எமது ஜனாதிபதி பொறுப்பேற்றார். ஆட்சியை முன்னெடுத்து செல்வதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி நாடாளுமன்றத்தில் தமது பெரும்பான்மை ஆதரவை வழங்கியது. அதனை நாம் வரவேற்கின்றோம்.

தேர்தல் தொடர்பில் முடிவெடுக்கும் உரிமை கட்சி என்ற வகையில் அக்கட்சி உறுப்பினர்களுக்கு உள்ளது. எனினும், இது இணைந்து பயணிக்க வேண்டிய தருணம். ஆதனால்தான் அனைத்து கட்சிகளுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார். எனவே, கட்சியின் எதிர்காலம் பற்றி அல்லாமல் நாட்டின் எதிர்காலம் பற்றி சிந்தித்து முடிவெடுத்திருந்தால் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கும் முடிவையே அக்கட்சியினர் எடுத்திருக்க வேண்டும் என்பதே எனது தனிப்பட்ட கருத்து.

கட்சிகள் எத்தகைய முடிவுகளை எடுத்தாலும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதற்கு நாட்டு மக்கள் தீர்மானித்து விட்டனர்.

நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்குரிய ஆளுமையும், அனுபவமும் தற்போதைய ஜனாதிபதிக்கே இருகின்றது. எனவே, புதிய வேட்பாளர்களுக்கு வாக்களித்து பரீட்சியம் நடத்துவதற்கான நேரம் இதுவல்ல. கட்சிகளும் இது பற்றி சிந்திக்க வேண்டும்.

சுயநல அரசியல் நடத்துபவர்களுக்கு மத்தியில் உண்மையைக் கூறி பொதுநல அரசியல் நடத்தும் ரணிலின் கொள்கையே நாட்டுக்கு தேவை என்றார்.

# 'அஸ்வெசும' 2ஆம் கட்ட கொடுப்பனவு பயனாளிகள் தெரிவுக்கான பயிற்சி



(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலக பிரிவில் அஸ்வெசும இரண்டாம் கட்ட கொடுப்பனவு வழங்குவதற்காக பயனாளிகளை தெரிவு செய்வோருக்கான பயிற்சி நெறி அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி எப்.நஹீஜா முஷாபிர் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சியில் கிராம உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது அஸ்வெசும இரண்டாம் கட்ட கொடுப்பனவுக்காக பயனாளிகளை தெரிவு செய்யும் முறை தொடர்பாக நிர்வாக கிராம உத்தியோகத்தர் ஏ.எல். ஜௌபர் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் உதவியாளர் எச்.எம்.பாத்திமா சப்னா ஆகியோர் விளக்கமளித்தனர்.

இப்பயிற்சியில் தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் ஏ.எம். ஹமீட் மற்றும் மேற்படி பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான கி.ஜயகரன், எம்.இஸட். அஸ்வர், ஏ.றிபானா, ஜெ.பாஹிமா, எம்.எச்.சர்ஜானா, எஸ்.ரீ.சித்தி ஜாயிஸா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கோட்ட மட்ட ஆங்கில மொழி தினப்போட்டி;

# கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலயம் 07 முதலிடங்கள்

புத்தளம் தினகரன் நிருபர்



இம்முறை இடம்பெற்ற கோட்ட மட்ட ஆங்கில மொழி தினப் போட்டியில் மதுரங்குளி கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் ஏழு மாணவர்கள் முதலாம் இடங்களையும் மூன்று மாணவர்கள் இரண்டாம் இடங்களையும் நான்கு மாணவர்கள் மூன்றாம் இடங்களையும் பல்வேறு போட்டிகளில் பெற்றுள்ளதாக பாடசாலையின் அதிபர் பீ.எம் முஸ்னி தெரிவித்துள்ளார்.

இதன்படி தரம் 13 ஐச் சேர்ந்த ஏ.ஆர். அம்ரா மற்றும் தரம் 11 ஐச் சேர்ந்த கே.எப். சமீஹா ஆகிய இருவரும் பார்த்தெழுதல் போட்டியிலும் தரம் 11 ஐச் சேர்ந்த என்.எப். ரீமா சொல்வளம் போட்டியிலும் தரம் 11 ஐச் சேர்ந்த எஸ்.எப். சஸ்மின் , தரம் 10 ஐச் சேர்ந்த எம்.ஐ.எப். சர்ஹா மற்றும் தரம் 05 ஐச் சேர்ந்த எம்.எப். சபியா ஆகியோர் கவிதை போட்டியிலும் தரம் 11 ஐச் சேர்ந்த எப். பர்வீஸ் எழுத்தாக்கம் போட்டியிலும் முதலாம் இடங்களையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

தரம் 09 ஐச் சேர்ந்த ஐ.எம். சதா பார்த்து எழுதல் போட்டியிலும் தரம் 11 ஐச் சேர்ந்த எம்.என்.எப். ரீமா சேர்த்தெழுதல் போட்டியிலும் தரம் 11 ஐச் சேர்ந்த எப். இபா ஆங்கில பேச்சு போட்டியிலும் இரண்டாம் இடங்களை பெற்றுள்ளனர்.

தரம் 08 ஐச் சேர்ந்த எம்.எப். அம்ரா பார்த்தெழுதல் போட்டியிலும் தரம் 11 ஐச் சேர்ந்த எம்.என். அப்ரா சொல்வளம் போட்டியிலும் தரம் 09 ஐச் சேர்ந்த ஐ.எம். இஹ்மா மற்றும் தரம் 03 ஐச் சேர்ந்த எம்.எப். அனீகா ஆகிய இருவரும் கவிதை போட்டியிலும் மூன்றாம் இடங்களை பெற்றுக் கொண்டுள்ளதாகவும் இவர்களின் இவ் வெற்றிக்கு அயராது துணை நின்று ஊக்கம் கொடுத்த ஆசிரியர்களுக்கும் பாடசாலை அதிபர் நன்றி தெரிவித்துள்ளார்.

# அகில இலங்கை நீச்சல் போட்டியில் சாஹிரா மாணவன் மொஹமட் சாதனை



ருஸைக் பாரூக்

49ஆவது அகில இலங்கை பாடசாலைகளின் நீச்சல் சம்பியன்ஷிப் போட்டி அண்மையில் சுகததாச நீச்சல் தடாகத்தில் நடைபெற்றது.

இதன்போது, கொழும்பு, சாஹிரா கல்லூரி மாணவன் எம்.எப். முஹம்மது 18 வயதுக்குட்பட்ட ஒட்டுமொத்த நீச்சல் போட்டியிலும் புதிய சாதனையுடன் இலங்கையின் தேசிய நீச்சல் சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டார்.

இவரை கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் ரிஸ்வி மரிக்கார் தலைமையில் கல்லூரி கபூர் மண்டபத்தில் நடைபெற்றது. அதிபர் ரிஸ்வி மரிக்கார் மேற்படி சாதனை மாணவனுக்கு நினைவு சின்னம் வழங்கி கௌரவித்ததுடன் மாணவன் முஹம்மதை வாழ்த்தி, விளையாட்டு வீரர்களுக்கு உதவ ஸாஹிரா கல்லூரி தயாராக உள்ளது என்றும், ஸாஹிரா பல விளையாட்டு வீரர்களை உருவாக்கி உள்ளது என்றும் அதிபர் இதன்போது கூறினார்.

பிரதி அதிபர்கள் திருமதி சினத் இஸ்மாயில், எம்.டி.எம். இல்ஹாம் , விளையாட்டு உதவி பொறுப்பாளர் தேவஸ்ரீ போடியபடுகே, நீச்சல் பொறுப்பாசிரியர் வீரசூரிய, நீச்சல் பயிற்சியாளர் மொஹமட் பவாஸ், ஸாஹிரா கல்லூரி விளையாட்டு மன்ற செயலாளர் மஸாஹிர் சுஹைர், மாணவன் மொஹம்மதின் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

# காலி இப்னு அப்பாஸில் 06ஆவது பட்டமளிப்பு விழா

(வெலிகம தினகரன் நிருபர்)

காலி இப்னு அப்பாஸ் அறபுக் கல்லூரியின் 6வது அல்ஆலிம் பட்டமளிப்பு விழா நாளை 3ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கல்லூரி வளாகத்தில் மிக விமர்சையாக இடம் பெறவுள்ளது.

25 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள இக்கல்லூரியின் பட்டமளிப்பு விழா கல்லூரியின் தலைவர் அஷ்ஷேக் எம்.ஓ. பத்ஹுர்ரஹ்மான் (பஹ்ஜி) தலைமையில் நடைபெறவுள்ளதோடு, பிரதம அதிதியாக சவூதி அரேபியா நஜ்ரான் பல்கலைக்கழக ஷரீஆ பீட ஹதீஸ் துறை பேராசிரியர் கலாநிதி அஷ்ஷேக் யூ.எல். அஹ்மது அஷ்ரப் (அல் அஸ்ஹரி) கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

2016 முதல் 2023 வரை இக் கல்லூரியில் ஷரீஆ துறையில் கற்ற 61 ஆலிம்களும் 29 ஹாபிழ்களும் சான்றிதழ்கள் பெறவுள்ளனர். மேலும் இவ் விழாவை அலங்கரிக்குமுகமாக இரண்டு நூற்கள் வெளியிடப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# உலக இயற்கை பாதுகாப்பு தினம்; மட்டக்களப்பில் சிரமதானம்





புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

உலக இயற்கை பாதுகாப்பு தினத்தையொட்டி இயற்கையை கண் போல் பாதுகாப்போம், பொலித்தீன் அற்ற எமது நகரம் என்ற தொனிப்பொருளின் கீழ் சிரமதான நடவடிக்கை மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட பணிமனை மற்றும் மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த சிரமதான நடவடிக்கையின் போது பொதுவிடங்களில் வீசப்பட்டிருந்த பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகள் அகற்றப்பட்டன.

மட்டக்களப்பு ஊறணி சந்தி முதல் கொத்துக்குளத்து மாரியம்மன் ஆலயம்வரையான வாவிக் கரை மற்றும் பிரதான வீதியின் இரு மருங்குகளிலும் காணப்பட்ட பெருமளவான பொலித்தீன்கள் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகள் இதன்போது அகற்றப்பட்டன.

மாவட்டத்தின் சகல பாகங்களிலுமிருந்து வருகை தந்த 50 இளைஞர், யுவதிகளும் 16 உத்தியோகத்தர்களும் சிரமதான நடவடிக்கையில் பங்குபற்றினர்.

மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் கழக சம்மேளன செயலாளரும் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரியுமான மாணிக்கப்போடி சசிகுமாரின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற சிரமதான நடவடிக்கையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் நிஷாந்தி அருள்மொழி, மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி சதீஸ்வரி கிருபாகரன் மற்றும் இளைஞர் சேவை உத்தியோகத்தர்களாகிய பலரும் கலந்துகொண்டனர்.

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்

## த.ம.வி.பு. கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன்

பெரியபோரதீவு தினகரன் நிருபர்



மாணவர்களை பாடசாலை செல்ல தயார்ப்படுத்தி சமூக நீரோட்டத்தில் இணைக்கும் அளப்பரிய பணியை மேற்கொண்டு வரும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்த சம்பள கொடுப்பனவு அதிகரிக்கப்பட வேண்டுமென, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

அரசடித்தீவு விக்னேஸ்வரா முன்பள்ளி பாடசாலைக்கு ஒலிபெருக்கி சாதனம் வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது அதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் ஒலிபெருக்கி சாதனம் கொள்வனவு செய்யப்பட்டு மேற்படி முன்பள்ளிக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"சமூகத்தில் பெற்றோருடன் இருக்கின்ற பிள்ளைகள் சமூக நீரோட்டத்துக்கு செல்கின்ற முதல் படியாக பாலர் பாடசாலைகள் அமைந்துள்ளன. சமூக உணர்வு, கல்வி கற்பதற்கு ஆர்வம், சமூகத்தில் வாழக்கூடிய நிலைமையை உணர்த்தி சமூகத்தில் நற்பிரஜைகளை உருவாக்குகின்ற ஆரம்பப் பணியை முன்பள்ளி ஆசிரியர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் முன்பள்ளி பாலர் பாடசாலை உள்ளிட்ட நிர்வாகங்களை வேகப்படுத்துவதற்கான நிர்வாக சுற்றோட்டத்திலும் மாற்றங்களை கொண்டு வருவதும் எமது திட்டமாக இருக்கின்றது" என்றார்.

# பாடசாலை மாணவருக்கு பல்வேறு போட்டிகள்

மாளிகைக்காடு குறூப் நிருபர்



பாடசாலை மாணவர்கள் மத்தியில் சித்திரம் வரைதல், சிறுதொழில் முயற்சியை விருத்தி செய்தல் தொடர்பான கட்டுரை எழுதுதல் போன்ற பல்வேறு போட்டிகள் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவினரால் நடத்தப்பட்டது.

இப்போட்டியில் பங்குபற்றிய இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூரி மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் இறக்காமம் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.றஸான், உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நசீல், சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.எம் ஹஸ்பி, இறக்காமம் அஸ்றப் தேசிய பாடசாலை பிரதி அதிபர் ஏ.எம்.இர்பானா ஆகியோர் கலந்து கொண்டனர்.

கல்முனையில்

# மின் நிலுவை கட்டணம் செலுத்த பாவனையாளர்களுக்கு அறிவிப்பு

ஒலுவில் விசேட நிருபர்

கல்முனை பிராந்திய மின் பொறியியலாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் மாதாந்த மின் கட்டணம் செலுத்தாத மின் பாவனையாளர்கள் நிலுவை கட்டணத்தை செலுத்துமாறு, கல்முனை பிராந்திய பிரதான மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிவித்தல் தொலைபேசி இலக்கங்களுக்கு குறுஞ்செய்தியூடாக அறிவிக்கப்பட்டு வருகின்றது.

சம்மாந்துறை, கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை, காரைதீவு, நிந்தவூர், மாளிகைக்காடு, ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேச மின் பாவனையாளர்களுக்கே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஒரு மாதத்துக்கும் மேலான நிலுவை கட்டணத்தை கொண்டிருப்பவர்களின் மின் துண்டிப்பு செய்யப்படவுள்ளதுடன், அவ்வாறு இணைப்பு துண்டிக்கப்படும் பட்சத்தில் மீள் இணைப்பை பெறுவதற்காக முற்றுமுழுதான மின் நிலுவை கட்டணம், அபராதம் மற்றும் மீள் இணைப்பு கட்டணம் என்பன செலுத்த நேரிடுமெனவும் அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகையால் மாதாந்த மின்சாரப் பட்டியலில் காணப்படும் நிலுவையை உடனடியாக செலுத்தி மின் துண்டிப்பை தவிர்த்துக்கொள்ளுமாறு மின் பாவனையாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

# கிழக்கு மாகாண மக்களின் போசாக்கை அதிகரிக்க திட்டம்

மட்டக்களப்பு குறூப் நிருபர்

கிழக்கு மாகாணத்தில் போசாக்கு குறைந்த மக்களின் போசாக்கை அதிகரிக்கும் நோக்கில் கால்நடை அபிவிருத்தி சுகாதார திணைக்களத்தினூடாக கோழிக் குஞ்சுகள் விநியோகக்கப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 15 கமநல அபிவிருத்தி பிரிவுகளினூடாக தெரிவு செய்யப்பட்ட குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 20 கோழிக் குஞ்சுகள் என்ற படி கோழிக் குஞ்சுகள் விநியோகம் செய்யப்படுகின்றன. சுமார் 36 இலட்சம் ரூபா பெறுமதியில் இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 4,500 கோழிக் குஞ்சுகள் இவ்வாறு குறிப்பிட்ட பிரதேசங்களில் போசாக்கு திட்டத்தை அதிகரிக்க விநியோகிக்கப்படுவதாக, மட்டக்களப்பு மாவட்ட கால்நடை அபிவிருத்தி சுகாதார திணைக்கள பணிப்பாளர் எம்.ஏ.அப்துல் ஹாதி தெரிவித்தார்.

இந்த திட்டத்தின் கீழ் காத்தான்குடி, ஆரையம்பதி, கொக்கட்டிச்சோலை ஆகிய கமநல சேவை பிரிவுகளுக்கு கோழிக் குஞ்சுகள் நேற்று விநியோகிக்கப்பட்டன.

இதில் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி யூ.எல்.நஸ்ருதீன் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உட்பட சுகாதார அதிகாரிகள் பலரும் பங்குபற்றினர்.

இந்த திட்டத்தினூடாக கோழிக் குஞ்சுகளை வளர்த்து அவற்றிலிருந்து கிடைக்கும் முட்டைகளை உட்கொள்வதனூடாக நிறை போசாக்கை பெற்றுக்கொள்ள முடியுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

National Savings Bank

## தேசிய சேமிப்பு வங்கியின் காணி ஒன்றினை விற்பனை செய்வதற்காக கோரப்படுகின்ற விலைமனுக்கோரல்

### இல. 185, கட்டுகஸ்தோட்ட வீதி, மகய்யாவ, கண்டி என்ற முகவரியில் உள்ள 25.84 பேர்ச்சஸ் பரப்பளவு கொண்ட நிலம்

கண்டி கொட்டுகொடல்ல வீதியிலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் கண்டி பிரதான கிளையிலிருந்து கட்டுகஸ்தோட்ட வீதியில் சுரங்கப்பாதையை தாண்டி 100 மீற்றர் அளவில் முன்னே செல்லும் போது இடது பக்கமாக காணப்படுகின்ற இந்திரா ட்ரேடர்ஸ் தாண்டி 50 மீற்றர் அளவில் சென்ற பின் இடது பக்கமாக காணப்படக்கூடிய யுனைட்டட் மோட்டர்ஸ் பி.எல்.சி க்கு அண்மித்ததாக இவ் ஆதனம் அமையப்பெற்றுள்ளது.

இது தொடர்பான டென்டர் விதிகள் அடங்கிய மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் ஆதனத்தை பார்வையிடுவதற்காக நேரம் ஒன்றை ஒதுக்கிக் கொள்வதற்காக அலுவலக நேரத்திற்குள் தொலைபேசி இலக்கம் 011-2372641 ஊடாக பிரதான முகாமையாளர் (அறவீடுகள்) அவர்களை அழைக்கவும்.

சீல் இடப்பட்ட விலைமனுக்கோரல்களை ”ஆதனத்திற்கான விலைத் தொகைகள் கட்டுகஸ்தோட்ட” என கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு 2024.08.23 ஆம் திகதி பி.ப. 02.30 முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அல்லது பிரதான அலுவலக 4ம் மாடியில் கடன் அறவீட்டுப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள சீல் இடப்பட்ட டென்டர் பெட்டியில் இடுதல் வேண்டும்.

ஆகக்கூடிய விலையை முன்வைத்துள்ள கோருபவருக்கு அது தொடர்பில் அறிவிக்கப்படுகின்ற அதேவேளை, டென்டர் திறக்கப்பட்ட தினம் முதல் 07 நாட்களுக்குள் பணத்தை செலுத்தி குறித்த ஆதனத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும், தெரிவு செய்யப்பட்டுள்ள கோருனர் விற்பனை செயற்பாட்டுக்குரிய அரச கட்டணங்கள், ஏனைய வரிகள் போன்றவற்றை செலுத்த வேண்டும்.

சமர்ப்பிக்கப்படுகின்ற எந்தவொரு விலைமனுவையும் அல்லது சகல விலைமனுக்களையும் அல்லது விண்ணப்பங்களையும் ஏற்றுக்கொள்ளுதல் அல்லது நிராகரித்தல் தொடர்பான உரிமை வங்கிக்கு உண்டு.

**உதவிப் பொது முகாமையாளர் - அறவீடுகள்**
**தேசிய சேமிப்பு வங்கி**
**”சேமிப்பகம்“**
**பிரதான அலுவலகம்**
**255, காலி வீதி,**
**கொழும்பு - 03.**

## மனுவின் மீதான விளம்பர அறிவித்தல்

**கொழும்பில் அமைந்துள்ள மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில் (அதன் குடியியல் நியாயாதிக்கத்தில்)**

எச்.சி. (சிவில்) இல. 41/2024/CO

2007 ம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பாகத்தின் கீழ் பொறலஸ்கமுவ, பெப்பிலியான, கொழும்பு றோட், இல. 362 ஐச் சேர்ந்த PB 3259 PQ எனும் கம்பனி பதிவிலக்கத்தைக் கொண்ட முன்னர் பிம்புத் /பைனான்ஸ் பிஎல்ஸி என அறியப்பட்ட பிம்புத் லங்கா இன்வெஸ்ட்மென்ட்ஸ் பி எல் சி என்னும் பெயரால் அறியப்பட்ட கம்பனியை நீதிமன்றத்தினால் ஒடுக்குவதற்கான விண்ணப்பம்

கொழும்பு 02, தபால் பெட்டி இல. 2085, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை ஐச் சேர்ந்த இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

**மனுதாரர்**

மேற் கூறப்பட்ட கம்பனியை ஒடுக்குவதற்கான விண்ணப்பத்தை 2024 ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் திகதி சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 ஐச் சேர்ந்த இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி கொழும்பில் அமைந்துள்ள மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில் (அதன் குடியியல் நியாயாதிக்கத்தில்) சமர்ப்பித்துள்ளதெனவும், மேற்படி மனுவானது 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 24 ஆம் திகதி நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வருவதாக உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், மேற்குறித்த மனு தொடர்பாக மேற் கூறப்பட்ட கம்பனியின் கடன் தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் எவராவது ஆதரவு வழங்கவோ அல்லது எதிர்ப்புக் கட்டளை பிறப்பிக்கவோ விரும்பின் அந் நோக்கத்திற்காக அவர் மேற்குறித்த மனுவின் விசாரணையின் போது நேரடியாகவோ அல்லது அவரது சட்டத்தரணி மூலமாகவோ அல்லது அவரது பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி மூலமாகவோ தோன்றலாம் எனவும், மேற்படி மனுவின் ஒரு பிரதி மேற் கூறப்பட்ட கம்பனியின் எந்தவொரு கடன் தருநருக்கும் அல்லது உதவுதொகை செலுத்துநருக்கும் பரிந்துரைக்கப்பட்ட கட்டணத்தை செலுத்துவதன் மூலம் கீழே குறிப்பிடப்பட்டவரினால் வழங்கப்படுமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**சரவணன் நீலகண்டன் லோ அசோசியேட்ஸ் மனுதாரரின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணிகள் எச்.கியூ கொழும்பு (மாடி 4)**
**இல. 464A டி. பி. ஜயா மாவத்தை**
**கொழும்பு 10**

மேற்குறித்த மனுவின் விசாரணையின் போது சமுகமளிக்க எவராவது நோக்கம் கொண்டிருப்பின் மேலே குறிப்பிடப்பட்ட மனுதாரரின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணிகள் சரவணன் நீலகண்டன் லோ அசோசியேட்ஸுக்கு, அவரின் நோக்க அறிவித்தலை எழுத்தில் தெரிவித்து நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ சமர்ப்பிக்க வேண்டும். இந் நோக்க அறிவித்தலில் குறித்த நபரின் பெயர் மற்றும் விலாசத்தைக் குறிப்பிடவேண்டும் அல்லது ஒரு கம்பனியாயின், கம்பனியின் பெயர் மற்றும் விலாசத்துடன் குறிப்பிட்ட நபரினால் அல்லது கம்பனியினால் அல்லது அவரது பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியினால் (அவ்வாறு எவரேனுமிருப்பின்) கையொப்பமிடப்பட்டு நேரடியாகவோ அல்லது தாபல் மூலமாகவோ அனுப்பலாம். தபால் மூலம் அனுப்பப்படுவதாயின் மேற்குறிப்பிடப்பட்ட மனுதாரரின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணிகளிற்கு போதிய கால அவகாசத்துடன் 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 23 ஆம் திகதி மாலை 6 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

**சரவணன் நீலகண்டன் லோ அசோசியேட்ஸ்**
**மனுதாரரின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணிகள்**

## 2011ஆம் ஆண்டு 40ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தப்பட்ட 2006ஆம் ஆண்டு 5ஆம் இலக்கம் எனும், நிதி மோசடியை தடுக்கும் சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் விடுக்கப்படும் ஆதனத்தை வலுவிழக்கச் செய்யும் கட்டளை

தலைமன்னார், மன்னார் எனும் முகவரியில் வசிக்கும் 822543464V எனும் இலக்க தேசிய அடையாள அட்டை உரிமையாளரான கலோசியோஜோன் ரொகட்சன் என்பவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள மற்றும் அவரால் நிர்மாணிக்கப்பட்டுள்ள பின்வரும் சகல ஆதனங்களையும் அப்புறப்படுத்துதல் அல்லது கைமாற்றுவதை தடுக்கும் பொருட்டு 2024-05-02ஆம் திகதி குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரினால் 2011ஆம் ஆண்டின் 40ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 2006 ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கம் எனும் நிதி மோசடியைத் தடுக்கும் சட்டத்தின் 7(1) அத்தியாயத்தின் கீழ் வழங்கப்பட்டடுள்ள அதிகாரத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட வலுவிழக்கச் செய்யும் கட்டளை மன்னார் மேல் நீதிமன்றத்தில் HC/MN (SPL) 01/2024 இலக்க வழக்கின் கீழ் 2024-05-08ஆம் திகதி உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு உறுதி செய்யப்பட்ட வலுவிழக்கச் செய்யும் கட்டளையின் மேற்கூறிய சட்டத்தின் 8(2) அத்தியாயத்தின் பிரகாரம் 2024-08-07ஆம் திகதி வரையான 03 மாத காலத்திற்கு அமுலாகும் வகையில் மேலும் நீடிக்கப்பட்டு கௌரவ நீதிமன்றத்தினால் கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆதனங்களின் தமது உரிமத்துவத்தை உறுதி செய்வதற்காக உண்மையான மூன்றாம் தரப்பினருக்கு வசதிகள் வழங்கும் பொருட்டு அறிந்து கொள்வதற்காக பிரசுரிக்கப்படுகின்றது.

01. கஸ்பார் க்ளெமென்டா குஞ்ஞா என்பவருக்குச் சொந்தமான மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் தலைமன்னார் கிராம சேவகர் பிரிவில் தலைமன்னார் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு அவர் பொறுப்பில் உள்ள பீபீமன்299ஆம் இலக்க வரைபடத்தில் 37ஆம் இலக்க காணித்துண்டென சித்தரிக்கப்பட்டுள்ள 0.038 ஹெக்டயார் எனக் கணக்கிடப்பட்ட கடற்கரைக் காணி எனும் காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இரண்டு மாடி வீடு
02. இல. 195, பெரியகடை, மன்னார் முகவரியில் இல. MN 78 சின்னக்கடை பிரிவில் அமைந்துள்ள 40 பேர்ச் காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 05 கடை அறைகளைக் கொண்ட வியாபாரக் கட்டிடம் மற்றும் வீடு
03. மேற்கூறிய விடயதாரரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள MR20-RM31-822485B என்ஜின் இலக்கம் மற்றும் HT32-104139 செஸி இலக்கத்தைக் கொண்ட NP CAP 2564 நிசான் எக்ஸ்டேல் வகையான வெள்ளை நிற கார்.

**பணிப்பாளர், சட்டவிரோத சொத்து விசாரணைப் பிரிவு.**

## விலைமனுக்கோரல்

### பதிவாளர் நாயகம் திணைக்களம் துப்புரவு சேவையை வழங்குதல்

1. இந்தத் திணைக்களத்தின் பிரதான அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் 65 க்கு 2024.10.16 ஆம் திகதி முதல் 2025.10.15 ஆம் திகதி வரை துப்புரவு பணியாளர்களை ஈடுபடுத்தி துப்புரவு சேவையை வழங்குவதற்காக திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் 2024.08.23 ஆம் திகதி மு.ப.11.00 மணி வரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
2. விலைமனு ஆவணங்களின் பிரகாரம் விலைமனு கோரப்பட்டுள்ள அனைத்து அலுவலகங்களுக்கும் அல்லது பிராந்திய அடிப்படையில் பட்டியல்படுத்தப்பட்டுள்ள அலுவலக குறிப்பில் வலயங்களின் கீழ் வரக்கூடிய அனைத்து அலுவலகங்களுக்கும் விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும். இதில் ஆர்வமுள்ள விலை பெற்றுக்கொண்டு மனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை 2024.08.22 ஆம் திகதி பி.ப. 03.00 மணி வரை மீளளிக்கப்படாத ரூ.15,000.00 தொகையை இந்தத் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தின் சிறாப்பரிடம் செலுத்தி பெற்றுக்கொண்ட ரசீதை கணக்காளரிடம் (வழங்கல் பிரிவு) சமர்ப்பித்து பெற்றுக்கொள்ள முடியும். மேலதிக தகவல்களை வழங்கல் பிரிவின் கணக்காளரிடம் பெற்றுக்கொள்ள முடியும். தொலைபேசி இலக்கம் 011- 3070870 ஆகும். தேவை எனின் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை இந்த அலுவலகத்தில் பரீட்சிக்க முடியும்.
3. பூரணப்படுத்தப்பட்ட விலைமனு ஆவணங்களை, விலைமனு ஆவணங்களின் நிபந்தனைகளுக்கு அமைய ரூபா. 845,000.00 பெறுமதியான விலைமனுக் காப்பீட்டுடன் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இணைப்பிரதிகளில் தலைவர், திணைக்களக் கொள்முதல் குழு, பதிவாளர் நாயகம் திணைக்களம், இல 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் விலைமனு அனுப்பவோ அல்லது நேரில் வந்து பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடவோ முடியும். விலைமனுக்கள் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் துப்புரவு சேவையை வழங்குவதற்காக விலைமனு கோரல் 2024/13” எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
4. 2024.08.23 ஆம் திகதி மு.ப.11.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். அந்த நேரத்திற்குப் பின்னர் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
5. விலைமனு முன் சந்திப்பொன்று 2024.08.12 ஆம் திகதி மு.ப..10.00 மணிக்கு பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் நடைபெறும்.

**பதிவாளர் நாயகம்**
**திணைக்கள கொள்முதல் குழுத்தலைவர்**

**பதிவாளர் நாயகம் திணைக்களம் இல 234/A3,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல. 2018**

## ஸ்ரீ பாளி வளாகம்

**கொழும்பு பல்கலைக்கழகம்**

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

### நூலக கட்டிடத்தை விரிவுபடுத்தும் நிர்மாணம் (எஞ்சிய வேலை) - கட்டம் I (SPC/CWP/2024/02)

பின்வரும் பெறுகைக்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கொழும்பு பல்கலைக்கழக, திணைக்கள பெறுகைக் குழு (கனிஷ்ட) தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| # | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | விலைமனு இலக்கம்/ பணி விபரம் | விலைமனு மூடும் திகதி மற்றும் நேரம் | விலைமனு ஆவணத்தை வாங்கும் இடம்/ தொ.பே. இலக்கங்கள் | மீளளிக்கப் படாத வைப்பு (ரூபா) | விலைமனு பிணை பெறுமதி (ரூபா) | நிதி மூலம் | விலைமனுக்களை ஒப்படைத்தல் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் | மதிப்பிடப்படும் செலவு (மில். ரூபா) | தேவைப்படும் பதிவு தரம் | விலை மனுவுக்கு முந்திய சந்திப்பு |
| 1 | SPC/ CWP/2024/02 | 2024 ஒகஸ்ட் 23 அன்று பி.ப. 2.30 | உதவிப் பதிவாளர் ஸ்ரீ பாளி வளாகம் வேவல, ஹொரண தொ/பே. 034-2212919 034-2263617 | ரூபா 3,500.00 | ரூபா 270,000.00 | இ.அ. | உதவிப் பதிவாளர் ஸ்ரீ பாளி வளாகம், வேவல, ஹொரண | 18.00 மில். | C6 மற்றும் அல்லது அதற்கு மேல் | 2024 ஒகஸ்ட் 12 அன்று |

01. 2024.08.22 ஆம் திகதி வரை (விலைமனு மூடப்படும் திகதிக்கு ஒரு நாள் முன்) எந்த ஒரு வேலை நாட்களிலும் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரை அலுவலக நேரங்களில் விலைமனு ஆவணங்களின் ஒவ்வொரு தொகுதிக்கும் மேலுள்ள அட்டவணையின் 4ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்ய முடியும். ஹொரண இலங்கை வங்கியில் 719939 என்ற ஸ்ரீ பாளி வளாக கணக்கு இலக்கத்திற்கு வங்கி வைப்பு ஒன்றில் மாத்திரம் கட்டணம் செலுத்தப்படுதல் வேண்டும்.
02. விலைமனுக்களை இறுதித் திகதிக்கு முன்னர் 7ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைப்பதற்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது 7ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட “விலைக்கேட்புப் பெட்டியில்” இடுதல் வேண்டும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் 02 ஆம் இலக்க பந்தியில் குறிப்பிடப்பட்ட விலைமனுவை மூடும் திகதி மற்றும் நேரத்தின் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
03. ஆர்வம் கொண்ட தகுதி பெற்ற விலைமனுதாரர்கள் மேலுள்ள அட்டவணையின் 03 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட இடத்தில் மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரை கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு**
**கொழும்பு பல்கலைக்கழகம்**
**94, குமாரதுங்க முனிதாச மாவத்தை, கொழும்பு - 03**

## 2006ஆம் ஆண்டு 5ஆம் இலக்கம் எனும், நிதி மோசடியை தடுக்கும் சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் விடுக்கப்படும் அறிவித்தல்

இல. 538/11/01, ஹரிஸ்சந்திரபுர, திம்பிரிகஸ்கொட்டுவ, நீர்கொழும்பு எனும் முகவரியில் வசிக்கும் லங்கேசர லால் நிஷாந்த (தே.அ.அ.இல. 751914407V), மீகலாஹந்தி தம்மிகா (தே.அ.அ.இல. 795923110V), லங்கேசர ஹர்ஷ ரஷ்மிக (தே.அ.அ.இல. 970392505V), லங்கேசர ஹர்ஷ ரஷ்மிக (தே.அ.அ.இல. 970392505V), லங்கேசர லஹிரு நிஷாந்த (தே.அ.அ.இல. 200005802846), என்பவர்களால் பேணப்படும் 01ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கிக் கணக்குகளுக்கு 2024-06-27ஆம் திகதி சட்டத்தின் பிரகாரம் 7(1) அத்தியாயத்தின் கீழ் ஆதனங்களை வலுவிழக்கச் செய்யும் கட்டளை நீர்கொழும்பு நீதிமன்றத்தினால் SPL 02/2024 இலக்க வழக்கு 2024-10-03ஆம் திகதி வரையான 03 மாத காலத்திற்கும் மற்றும் மேற்கூறிய நபர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்கள் மற்றும் லங்கேசர ஹர்ஷ ரஷ்மிக என்பவரின் பெயரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடாகிய 02ஆம் பகுதியில் i மற்றும் ii இன் கீழ் காட்டப்பட்டுள்ள சகல ஆதனங்களையும் அப்புறப்படுத்துதல் அல்லது கைமாற்றுவதை தடுக்கும் பொருட்டு 2024-07-10 திகதி குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரினால் சட்டத்தின் 7(1) அத்தியாயத்தின் கீழ் வலுவிழக்கச் செய்யும் கட்டளை நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தில் SPL 03/2014 இலக்க வழக்கின் கீழ் 8(2) அத்தியாயத்தின் பிரகாரம் 2024-10-16ஆம் திகதி வரையான 03 மாத காலத்திற்கு அமுலாகும் வகையில் நீடிக்கப்பட்டு கௌரவ நீதிமன்றத்தினால் கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

**பகுதி 01**

| கணக்கு உரிமையாளர்களின் பெயர் | வங்கிக் கணக்கிலக்கம் |
|---|---|
| லங்கேசர லால் நிஷாந்த (தே.அ.அ.இல. 751914407V) | இலங்கை வங்கி மஹ ஹுணுப்பிட்டிய: 76637699, 80195570, 89323845, 89787200 |
| மீகலாஹந்தி தம்மிகா (தே.அ.அ.இல. 795923110V) | இலங்கை வங்கி மஹ ஹுணுப்பிட்டிய: 70181979, 80405273, 87083123, 89441503 மக்கள் வங்கி, நீர்கொழும்பு: 034200140697467, 0346001000306052 |
| லங்கேசர ஹர்ஷ ரஷ்மிக (தே.அ.அ.இல. 970392505V) | மக்கள் வங்கி நீர்கொழும்பு: 034200170057236 இலங்கை வங்கி நீர்கொழும்பு: 1401074, 000089737627, 000089985962 |
| லங்கேசர லஹிரு நிஷாந்த (தே.அ.அ.இல. 200005802846) | இலங்கை வங்கி நீர்கொழும்பு: 1401075, 000088966381, 00089737683 |

**பகுதி 02**

i. வாகனம்

| வாகன இலக்கம் | என்ஜின் இல. | செஸி இல. | பதிவின் உரிமையாளர் |
|---|---|---|---|
| QV-6525 | AAMBS101355 | MD2AAAAZZSWJ53912 | லங்கேசர லால் நிஷாந்த |
| KN-7853 | IZZ2926323 | ZZ12400143066 | மீகலாஹந்தி தம்மிகா |

ii. காணி மற்றும் வீடு

இல. 538/11/01, ஹரிஸ்சந்திரபுர, திம்பிரிகஸ்கொட்டுவ, நீர்கொழும்பு எனும் முகவரியில் அமைந்துள்ள லங்கேசர சீலசேன என்பவருக்குச் சொந்தமான மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் கட்டான பிரதேச வருமான அதிகாரி பிரிவில் துனகஹ பற்றில் 161 - மஹஹுணுப்பிட்டிய கிராம சேவையாளர் பிரிவில் மஹஹுணுப்பிட்டிய எனும் கிராமத்தில் அமைந்துள்ள ஹெக்டயார் 0.105 அளவைக் கொண்ட தவட்டகஹவத்த எனும் காணியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடு.

**பணிப்பாளர்,**
**சட்ட விரோத சொத்து விசாரணைப் பிரிவு.**

## பெறுகை அறிவித்தல்

### குருவிட்ட பிரதேச சபை – சப்ரகமுவ மாகாணம்

01. மேற்படி வேலை விடயத்திற்காக குருவிட்ட பிரதேச சபையின் பெறுகைக் குழுவின் தலைவரால் 2024.08.21 மு.ப. 11.00 வரை கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

| தொடர் இல. | வேலை விடயம் | பொதுவான மதிப்பீட்டு வேலைப் பெறுமதி (ரூ.மி | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூ) | மீளளிக்கப்படும் கேள்விப்பிணை (ரூ) | ஒப்பந்த பதிவுப் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 01 | “போபத் எல்ல” வாகன நிறுத்துமிட வசதிகளை மேம்படுத்துதல் | 7.5 | 5,000.00 | 75000.00 | C6/C7 |

02. இக்கேள்வி கோரல் திறந்த போட்டி பெறுகை முறைமையின் கீழ் இடம்பெறுவதுடன், இக் கைத்தொழில் ரூ.மி. 50 மில்லியனுக்கு குறைவான படியால் அரச நிதி சுற்றுநிருப இல. 2016/04(II) மற்றும் 2016/04(III) (இன் பிரகாரம் பிரதேச முன்னுரிமை மற்றும் குறித்த) CIDA தர முன்னுரிமையை அடிப்படையாகக் கொண்டு வீதி நிர்மாணத்திற்காக கேள்விதாரர் தேர்ந்தெடுக்கப்படுவர். அச் சுற்றுநிருபத்திற்கு அமைவாக பின்னர் விநியோகிக்கப்பட்ட அரச நிதி சுற்று நிருபம் 2020/03,2020/03(I) மற்றும் 04/2016(iv) என்ற சுற்று நிருபம்
03. 2024.08.05 முதல் 2024.08.20 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை மேற்கண்டவாறு கட்டணங்களைச் செலுத்தி குருவிட்ட பிரதேச சபை அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
04. சகல கேள்விதாரர்களும் இக் கைத்தொழிலிற்காக மேற்படி கேள்விப் பிணை முறி பெறுமதிக்கு குறித்த கேள்வி பிணைமுறியாக அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட கேள்விப் பிணைமுறியொன்றை 2024.08.21 முதல் 2024.12.18 வரை செல்லுபடியாகுமாறு “செயலாளர், பிரதேச சபை, குருவிட்ட” தொழில்தருநராக பெயர் குறிப்பிட்டு பெற்றுக் கொண்ட கேள்விப் பிணைமுறியொன்றின் மூலம் அல்லது குறித்த கைத்தொழிலின் பெயரில் கேள்விப் பிணைத் தொகையாக பிரதேச சபையில் குறித்த தொகையை வைப்புச் செய்து பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுக்களை கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. இக் கைத்தொழில் பற்றிய விபரங்களை குருவிட்ட பிரதேச சபைக்கு வருகைதந்து அல்லது தொ.பே.இல. 045 - 2262276 இடம் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். தேவைப்படும் ஒருவருக்கு வாரத்தின் வேலை நாட்களில் இலவசமாக கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
06. பொறியிடப்பட்ட கேள்விகள் 2024.08.21 மு.ப. 11.00 இற்கு அல்லது அதற்கு முன்பு குருவிட்ட பிரதேச சபை அலுவலகத்தில் பொறியிடப்பட்ட பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன், விலைமனுக்கள் உள்ளிடும் உறையின் இடது மேல் மூலையில் கைத்தொழிலின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும். மேலும் கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட நகல்பிரதியை வேறு உறையில் இட்டு உறையின் இடதுமேல் மூலையில் கைத்தொழிலின் பெயர் மற்றும் நகல்பிரதியெனக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
07. 2024.08.21 மு.ப. 11.00 இற்கு குருவிட்ட பிரதேச சபை அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
08. கேள்விப் பத்திரங்கள் முழுமையாக அல்லது ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை குருவிட்ட பிரதேச சபை பெறுகைக் குழுவிற்கு உரியது.
09. சகல கேள்விகளும் 2024.11.20 வரை செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**குருவிட்ட பிரதேச சபை**
**குருவிட்ட**

**2024.08.02ம் திகதி**

## விலைமனு முடிவுறுத்தலை நீடித்தல்

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

**௨00 எண்ணிக்கையான NEW DELUXE பஸ்களை இலங்கை போக்குவரத்து சபையினால் அதிவேக நெடுஞ்சாலை சேவைகளுக்காக வழங்குநரின் கடன் அடிப்படையில் வழங்குவதற்கான விலைமனு**

**Procurement No.: MT/04/09/CT/547/LOT A**

### 2024.08.02 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு உத்தேசிக்கப்பட்டிருந்த மேலேயுள்ள பெறுகைக்கான விலைமனுக்கோரல் முடிவுறுத்தலானது நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கை, பத்தரமுல்ல, II ஆம் படிநிலை, ‘‘செத்சிரிபாய’’, 7 ஆம் மாடி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை குழுத் தலைவர் மேலேயுள்ள பெறுகைக்கான முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து 2024.09.03 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் இப்போது பெற்றுக் கொள்வார் என்பதுடன் 2024.09.02 ஆம் திகதியன்று வரையும் சாதாரண வேலை நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக 300,000 ரூபாவை செலுத்திய பின்னர் கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபை பிரதான பெறுகை முகாமையாளரிடமிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.

இதற்கமைவாக, விலைமனுக்கள் 2025.01.03 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் பதிவு பெற்ற காப்புறுதி முகவராண்மையொன்றினால் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பதிவு பெற்ற வர்த்தக வங்கியொனறினால் வழங்கப்பட்டதும் இபோச இனால் எழுத்து மூலமான முதலாவது விண்ணப்பப் பத்திரத்தின் மூலமாகவே மாற்ற இயலாததும் நிபந்தனையில்லாமல் மாற்றக்கூடியதும் 2025.02.03 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் 85 மில்லியன் ரூபா பெறுமதிகானதும் II ஆம் இணைப்பின் பிரகாரம் விலைமனுக்கள் பிணைமுறியொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

# இலங்கை வங்கி

**ஏலவிலை கூறலுக்கான அழைப்பு (IFB)**

**கேள்விப்பத்திர இல: P/PROC/2024/300**

பொதுவான இலத்திரனியல் நிதிப் பரிமாற்ற ஸ்விட்ச் (CEFTS) தீர்வினை இலங்கை வங்கிக்கு வழங்கி, வடிவமைத்து, நடைமுறைப்படுத்தி, செயற்படுத்தி, பராமரித்தல்.

மேற்குறித்த சேகரிப்பை இலங்கை வங்கிக்கு வழங்குவதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட ஏல விலைக் கூறல்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வழங்குநர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

| முக்கிய திகதிகள் | |
|---|---|
| விலைகூறல் ஆவணங்களை வெளியிடுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2024.08.22 அன்று 1500 மணி |
| விலைகூறல் ஆவணங்களை வெளியிடுவதற்கான காலப்பகுதி | : வேலை நாட்களில் 0900 மணியிலிருந்து 1500 மணி வரை |
| விலைகூறலுக்கான முற்கூட்டிய கூட்டம் | : 2024.08.09 அன்று 1400 மணிக்கு 14ஆம் தளம், இலங்கை வங்கி, தலைமை அலுவலகக் கட்டடம் |
| விலைகூறலை மூடும் திகதியும் நேரமும் | : 2024.08.23 1000 மணி |
| விலைகூறலைத் திறத்தல் | : விலைகூறல் முடிவடைந்ததும் |

மேலதிக விபரங்களுக்கு, விலைகூறுவோர் www.boc.lk என்ற இலங்கை வங்கியின் வலைத்தளத்தைப் பார்வையிடலாம்.

ஏதேனும் அல்லது அனைத்து விலைகூறல்களையும் நிராகரிப்பதற்கான உரிமையையும் எவ்வித காரணமும் தெரிவிக்காது விலைகூறலை அல்லது ஏதேனும் ஒரு பாகத்தினை ஏற்றுக்கொள்வதற்கான உரிமையினையும் இலங்கை வங்கி கொண்டுள்ளது.

**பிரதான முகாமையாளர்**
சொத்துகளும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி தலைமை அலுவலகம்,
"BOC சதுக்கம்", இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 011 220 4263, 011 254 4310, 011 243 4786
மின்னஞ்சல்: procurement@boc.lk

மேலதிக விபரங்களுக்கு Scan செய்யவும்

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk

**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**

**கட்டடங்கள் திணைக்களம்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**குருநாகல், நீதிமன்ற வளாகத்தில் மாவட்ட நீதிமன்ற அலுவலகத்தின் கூரையை சீரமைத்தல்**

**(ஒப்பந்த இல.: BD-0040sp01-Z3.CT018/24)**

1. மதிப்பிடப்பட்ட 26.2 மில்லியன் ரூபா செலவைக் கொண்ட, கீழ் விபரிக்கப்பட்டவாறு "குருநாகல், நீதிமன்ற வளாகத்தில் மாவட்ட நீதிமன்ற அலுவலகத்தின் கூரையை சீரமைத்தலுக்காக" பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கட்டடங்கள் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகிறது. ஒப்பந்தக் காலம் 133 நாட்களாகும்.
2. தேசிய போட்டி ரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும். 04/2016(iii) ஆம் இலக்க பொது நிதி சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டவாறு இந்தப் பெறுகையின் கீழ் மேற்கொள்ளப்படும் பணியின் பெறுமதி 50 மில். ரூபாவுக்கு உட்பட்டதாக இருக்கும் வரை பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை பொருந்தும்.
3. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் விலைமனுக்கள் மூடப்படும் திகதி வரை செல்லுபடியான, நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) C5 அல்லது C4 தரத்துக்காக கட்டட நிர்மாணத் துறையில் பதிவு செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.

   "விலைமனுதாரர்கள் 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் விதிகளில் உள்ள, இலங்கை பொது ஒப்பந்ததாரர்களின் பதிவாளருடன் தம்மை பதிவு செய்திருத்தல் வேண்டும். பதிவின் அசல் சான்றிதழை (*PCA 03*) விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுதாரர் *PCA 03* சான்றிதழை சமர்ப்பிக்கப்படாதவரை எந்த ஒரு விலைமனுதாரருக்கும் பெறுகை வழங்கப்படமாட்டாது".
4. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் குருநாகல், வில்கொட வீதி, கட்டடங்கள் திணைக்களம், தலைமை பொறியியலாளர் (வலயம் 3) இடமிருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு எந்த ஒரு வேலை நாட்களிலும் 9:00 மணி தொடக்கம் 16:00 மணி வரை அதே முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
5. மீளளிக்கப்படாத கட்டணமாக ஆறாயிரம் ரூபாவை (ரூபா 6,000) செலுத்தி 2024.08.01 ஆம் திகதி தொடக்கம் 2024.08.21 ஆம் திகதி வரை 9:00 மணி தொடக்கம் 15:00 மணி வரை குருநாகல், வில்கொட வீதி, கட்டடங்கள் திணைக்களம், தலைமை பொறியியலாளருக்கு (வலயம் 3) எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை வாங்கலாம்.
6. விலைமனுக்களை 2024.08.22 ஆம் திகதி 10:00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கட்டடங்கள் திணைக்களம், 2ஆவது மாடி, "செத்சிறிபாய", பத்தரமுல்லை என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் பத்தரமுல்லை, "செத்சிறிபாய", 2ஆவது மாடி, கட்டடங்கள் திணைக்கள, ஒப்பந்தப் பிரிவில் விலைமனுக்கள் ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
7. விலைமனுக்களை ஏற்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட கடைசித் திகதி அல்லது எந்த ஒரு நீடிக்கப்பட்ட காலத்தில் இருந்து 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு அவை;
   - விலைமனு ஆவணத்தின் 09 ஆவது பிரிவில் உள்ளடக்கப்பட்ட வடிவத்தில்
   - கட்டடங்கள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில்
   - 350,000.00 ரூபா தொகை ஒன்றுக்காக
   - 2024 டிசம்பர் 18ஆம் திகதி வரை செல்லுபடியான
   - விலைமனு தரவின் 16.2 ITB உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

பாதுகாப்பு சோதனை காரணமாக விலைமனு மூடப்படுவதற்காக குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு குறைந்தது 1 மணி நேரத்திற்கு முன்னர் "செத்சிறிபாய", வளாகத்திற்குள் நுழைவதற்கு விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

**பொறி. (திருமதி) கே.ஜி.எஸ். குமுதினி**
**கட்டடங்கள் பணிப்பாளர் நாயகம்**
**2ஆவது மாடி, "செத்சிறிபாய", பத்தரமுல்லை.**
**www.buildings.gov.lk**

## விலைமனு முடிவுறுத்தலை நீடித்தல்

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

**50 எண்ணிக்கையான NEW ACSMALL பஸ்களை இலங்கை போக்குவரத்து சபையினால் கொழும்பு மாநகர சேவைகளுக்காக வழங்குநரின் கடன் அடிப்படையில் வழங்குவதற்கான விலைமனு**

**Procurement No.: MT/04/09/CT/547/LOT B**

### 2024.08.02 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு உத்தேசிக்கப்பட்டிருந்த மேலேயுள்ள பெறுகைக்கான விலைமனுக்கோரல் முடிவுறுத்தலானது நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கை, பத்தரமுல்ல, II ஆம் படிநிலை, ‘‘செத்சிரிபாய’’, 7 ஆம் மாடி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை குழுத் தலைவர் மேலேயுள்ள பெறுகைக்கான முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து 2024.09.03 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் இப்போது பெற்றுக் கொள்வார் என்பதுடன் 2024.09.02 ஆம் திகதியன்று வரையும் சாதாரண வேலை நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக 300,000 ரூபாவை செலுத்திய பின்னர் கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபை பிரதான பெறுகை முகாமையாளரிடமிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.

இதற்கமைவாக, விலைமனுக்கள் 2025.01.03 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் பதிவு பெற்ற காப்புறுதி முகவராண்மையொன்றினால் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பதிவு பெற்ற வர்த்தக வங்கியொனறினால் வழங்கப்பட்டதும் இபோச இனால் எழுத்து மூலமான முதலாவது விண்ணப்பப் பத்திரத்தின் மூலமாகவே மாற்ற இயலாததும் நிபந்தனையில்லாமல் மாற்றக்கூடியதும் 2025.02.03 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் 85 மில்லியன் ரூபா பெறுமதிக்கானதும் II ஆம் இணைப்பின் பிரகாரம் விலைமனுக்கள் பிணைமுறியொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

# இலங்கை வங்கி

**ஏல விலைகூறலுக்கான அழைப்பு (IFB)**

**கேள்விப்பத்திர இலக்கம்: P/PROC/2024/277**

**௨0௨5 ஆம் ஆண்டிற்காக இலங்கை வங்கி நாட்குறிப்பு புத்தகங்கள் மற்றும் குறிப்பு புத்தகங்களை அச்சிடுதல் மற்றும் வழங்கல்**

**மேற்படி பெறுகைக்காக அச்சக உரிமையாளர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட ஏலவிலை கோரல்கள் இத்தால் கோரப்படுகின்றன**

**முக்கிய திகதிகள்:**

| | |
|---|---|
| CMS/LP/24/ PT/07/052 | GI Plain Sheet 8' X 4' X 2' MM | 18,500.00 | 1,000.00 | 22-08-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/04/024 | CU – XLPE/SWA/PVC/Cable 4X240SQMM 600V/1000V – 400- Meter | 400,000.00 | 3,500.00 | 22-08-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/17/056 | Spare Parts for the Terberg Terminal Tractors | 19,500.00 | 1,000.00 | 22-08-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/10/056 | Spares for UD Nissan Prime Movers | 12,000.00 | 1,000.00 | 22-08-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/03/056 | Cooler GP Fuel 491 – 6748 | 40,000.00 | 1,000.00 | 26-08-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/18/051 | Spare Parts for Terberg Terminal Tractors | 25,000.00 | 1,000.00 | 26-08-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/08/017 | 200 Nos. Single Line Telephone Instruments | 20,000.00 | 1,000.00 | 26-08-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/14/058 | Spares for IHI PIC Rover Mobile Cranes | 50,000.00 | 1,000.00 | 27-08-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/11/052 | Complete Air Dryer and Combi Instruments | 19,500.00 | 1,000.00 | 26-08-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/06/051 | Spares for Terberg Terminal Tractors | 22,000.00 | 1,000.00 | 26-08-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/16/054 | 10 Nos. Mild Steel Plates LR " A" (6000MM X 1500MM X 10MM) | 50,000.00 | 1,000.00 | 28-08-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/10/059 | Bar Soap ( Local ) 650 Grams | 22,000.00 | 1,000.00 | 28-08-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/07/053 | 12 Nos. Injector , STC 3071497 for Cummins NTA 855 CPL 1436 Engine | 35,000.00 | 1,000.00 | 28-08-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/16/055 | Filters for Terberg Yard Tractors at JCT | 18,000.00 | 1,000.00 | 29-08-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/01/058 | Tyres for Kobelco RK 250 – 3 Mobile Cranes | 25,000.00 | 1,000.00 | 29-08-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/07/054 | Bar Soap ( Local ) 650 Grams | 31,500.00 | 1,000.00 | 29-08-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/01/057 | Tyres for Kato KA 900 Mobile Cranes | 30,000.00 | 1,000.00 | 30-08-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/19/054 | Air Compressor | 19,500.00 | 1,000.00 | 30-08-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/07/056 | Normally Open Inductive Sensors for Ram Spreaders | 35,000.00 | 1,000.00 | 30-08-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/19/053 | Pulse Encoder 3001964 – 180 | 50,000.00 | 1,000.00 | 02-09-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/19/051 | Spare Parts for Terberg Terminal Tractors | 22,000.00 | 1,000.00 | 02-09-2024 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை (PCA 03 படிவம்) கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதான முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024 ஆகஸ்ட் 02ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் எண்: 2381652, 2470443**

எனது இல.: RBK/LAN/AQURE/A3/120
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2019/HW/81

**காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2023.11.22 ஆம் திகதிய 2359/19 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

மாகாணம் : சப்ரகமுவ
மாவட்டம் : கேகாலை
பிரதேச செயலாளர் பிரிவு : ரம்புக்கனை
அமைவிடம் : இல.03 ஐ, கணுகொல்ல கிராம நிலதாரி பிரிவில்
கிராமத்தின் பெயர் : பரப்பே
வரைப்பட இலக்கம்: இ.கி.வ. 96, பிற்சேர்க்கை இல. 21, தாள் இல. 18
காணியின் பெயர் : வெலிகொடலன்தேஹேன உட்பட்ட காணித் துண்டுகள் 35
காணித்துண்டுகள் : 2023.11.22 ஆம் திகதி இல. 2359/19 இல் உள்ள அனைத்து துண்டுகள்
விஸ்தீரணம் : இ.கி.வ. 96, பிற்சேர்க்கை இல. 21 - 0.4940 ஹெக்டயார்

**கே.ஜீ.உஸ். நிஷாந்த,
பிரதேச செயலாளர் (ப.அ)
பிரதேச செயலாளர் காரியாலயம்,
ரம்புக்கனை
2024.08.02**

இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசு
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனு அழைப்பு

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 01 | பலாபத்வெல கலேவெல வீதி மேம்படுத்தல் (B-346) (0+000 - 2+400 KM) |
| 02 | பலாபத்வெல கலேவெல வீதி மேம்படுத்தல் (B-346) (28+750 - 30+750 KM) |

தேசிய போட்டி விலைமனு அழைப்பு ஒழுங்குமுறைகளின் கீழ் மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளுக்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றது. விருப்பமுடைய மனுதாரர்கள் **2024.08.05** முதல் **2024.08.26** வரை வீ.அபி.அ மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையத்தளமாகிய **www.rda.gov.lk** க்கு வருகைத்தருமாறு கோட்டுக்கொள்ளப்படுகின்றது.

SMART TRAVELS

## பொது அறிவித்தல்



மேலே படத்தில் உள்ள திரு. ஜயசுந்தர முதியன்சேலாகே டொர்னாடோ பிரமேஷ் தர்மசிறி ஜயசுந்தர (தே.அ. அ இல.197833004783) எனும் நபர் இல.101 காலி வீதி, கொழும்பு 04 இல் அமைந்துள்ள Smart Travels (Pvt) Ltd நிறுவனத்தில் தற்போது பணியில்லை என்பதை பொதுமக்கள், தொடர்புடைய அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அறியத்தருகின்றோம்.

குறித்த நபருக்கு Smart Travels (Pvt) Ltd நிறுவனம் சார்பாக எந்த விதத்திலும் வாடிக்கையாளர்களை தொடர்புகொள்ள அதிகாரம் இல்லை என்பதுடன் Smart Travels (Pvt) Ltd நிறுவனமானது, மேற்குறிப்பிடப்பட்டுள்ள நபரால் செய்யப்படும் எந்தவொரு நிதியியல் அல்லது பிற வேலைகளுக்கும் பொறுப்பேற்காது என்பதையும் அறியத்தருகின்றோம்

**எனது இல. :- RBK/LAN/AQURE/A3/131**
**காணி அமைச்சின் குறிப்பு இல. :- 4-3/7/2021/HW/390**

**காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 2024.05.07ஆம் திகதிய 2383/19 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

மாகாணம் : சப்ரகமுவ
மாவட்டம் : கேகாலை
பிரதேச செயலாளர் பிரிவு : ரம்புக்கனை
அமைவிடம் : இல. 03 நத்தம்புர கிராம நிலதாரி பிரிவில் உள்ள இல. 03 டீ, ஹேவாதிவெல கிராம நிலதாரி பிரிவில் உள்ள
கிராமத்தின் பெயர் : காடவட்டிய, ஹேவாதிவெல
வரைப்பட இலக்கம் : க.வ. 610145 - தொகுதி இல.03, தாள் இல. 01
க.வ. 610145 - தொகுதி இல.02, தாள் இல. 01
க.வ. 610145 - தொகுதி இல.01, தாள் இல. 01
க.வ. 610145 - தொகுதி இல.07, தாள் இல. 01
காணியின் பெயர் : கங்இமேஹேன உட்பட்ட காணித் துண்டுகள் 3 வத்துலியத்த உட்பட்ட காணித் துண்டுகள் 15 கல்லிந்தமுல்லகும்புர உட்பட்ட காணித் துண்டுகள் 6 பூரணேகும்புர உட்பட்ட காணித் துண்டுகள் 17
காணித் துண்டுகள் : 41
விஸ்தீரணம் : 0.7818 ஹெக்டயார்

**கே.ஜீ.எஸ். நிஷாந்த,
பிரதேச செயலாளர் (ப. அ),
பிரதேச செயலாளர் காரியாலயம்,
ரம்புக்கனை.
2024...**

எனது இல.: RBK/LAN/AQURE/A3/111
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2018/HW/382

**காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2024.04.26 ஆம் திகதிய 2381/39 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

மாகாணம் : சப்ரகமுவ
மாவட்டம் : கேகாலை
பிரதேச செயலாளர் பிரிவு : ரம்புக்கனை
அமைவிடம் : இல.03, நத்தம்புர கிராம நிலதாரி பிரிவில்
கிராமத்தின் பெயர் : காடவட்டிய
வரைபட இலக்கம் : இ.கி.வ. 141, பிற்சேர்க்கை இல. 21, தாள் இல. 18
காணியின் பெயர் : பமுணுமுல்லேவத்தை உட்பட்ட காணித் துண்டுகள்
காணித்துண்டுகள் : 7
விஸ்தீரணம் : 0.0947

**கே.ஜீ.உஸ். நிஷாந்த,
பிரதேச செயலாளர் (ப.அ)
பிரதேச செயலாளர் காரியாலயம்,
ரம்புக்கனை
2024.08.02**

**எனது இல. :- RBK/LAN/AQURE/A3/108**
**காணி அமைச்சின் குறிப்பு இல. :- 4-3/7/2018/HW/378**

**காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 2023.11.23 ஆம் திகதிய 2359/33 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

மாகாணம் : சப்ரகமுவ
மாவட்டம் : கேகாலை
பிரதேச செயலாளர் பிரிவு : ரம்புக்கனை
அமைவிடம் : இல. 6பீ, இஹல வல்பொல மற்றும் இல. 03 ஜீ கொட்டவெல்ல கிராம நிலதாரி பிரிவுகளில்
கிராமத்தின் பெயர் : இஹல வல்பொல மற்றும் கொட்டவெல்ல
வரைப்பட இலக்கம் : இ. கி. வ. 143, பிற்சேர்க்கை இல. 6, தாள் இல. 6, இ. கி. வ. 142, பிற்சேர்க்கை இல. 6, தாள் இல. 6
காணியின் பெயர் : பன்சல்வத்தை உட்பட்ட துண்டு 3 மற்றும் ஹிட்டினாவத்தை, பெலிகஹமுலவத்தை உட்பட்ட துண்டுகள் 51
காணித் துண்டுகள் : 2023.11.23 திகதி இல. 2359/33 இல் உள்ள அனைத்து துண்டுகள்
விஸ்தீரணம் : இ. கி. வ. 143, பிற்சேர்க்கை இல. 6-0.0021 ஹெக்டயார் இ. கி.வ. 142, பிற்சேர்க்கை இல. 6-0.5605 ஹெக்டயார்

**கே.ஜீ.எஸ். நிஷாந்த,
பிரதேச செயலாளர் (ப. அ),
பிரதேச செயலாளர் காரியாலயம்,
ரம்புக்கனை.
2024...**




**தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை**
**கைத்தொழில் அமைச்சு**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இரத்தினபுரி தெமுவவத்த ''இரத்தினக்கல் கோபுரத்தில்'' அமைந்துள்ள உணவகத்தை (Cafeteria) 5 வருட காலத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான கேள்வி அழைப்பு

**விலைக்கோரல் இல. NGJA/18/63/2024**

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் சார்பில் கேள்விக் குழுவின் தலைவரினால் ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து இரத்தினபுரி - தெமுவவத்த இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைக்குச் சொந்தமான ''இரத்தினக்கல் கோபுரம்'' உணவகத்தை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| விபரங்கள் | விலை / திகதி |
|---|---|
| மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் | ரூபா 10,000.00 + 2.5% SSCL + 18% VAT (மொத்த தொகை ரூபா 12,095.00) |
| விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள்/நேரம் | 2024-08-23ஆம் திகதி பி.ப. 2.00 மணி |
| விலைமனுக்கள் திறக்கப்படுதல் | 2024-08-23ஆம் திகதி பி.ப. 2.05 மணி |

| தொ. இல. | மாடி | பரப்பளவு (சதுர அடிகள்) | உத்தேச பாவனை | பாதுகாப்பு வைப்பு (ரூபா) | அடிப்படை பெறுமதி (ரூபா) (வரி இன்றி) | பிணை முறி (ரூபா) (வரி இன்றி) |
|---|---|---|---|---|---|---|
| 01 | 5ஆம் மாடி | 2045 | உணவகம் | 840,000.00 | 13,450,000.00 | 200,000.00 |

**நிபந்தனைகள்**

(I) தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் பெறுகைகள் மேற்கொள்ளப்படும் (NCB)

(II) மீளளிக்கப்படாத ரூபா 10,000.00 + 2.5% (ரூபா 250.00) SSCL + 18% VAT (ரூபா 1,845.00) தொகையை (ரூபா 12,095.00) கொழும்பு 03, அல்பிரட் ஹவுஸ் கார்டன், ''மெக்சன்ஸ் டவர்'' 12ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் நிதியாளருக்குச் செலுத்தியதன் பின் உதவிப் பணிப்பாளர் (பெறுகைகள்) அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்கள் மற்றும் இயைபுடைய நிபந்தனைகளை 2024-08-02 ஆம் திகதி முதல் 2024-08-22ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் வழங்கல் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(III) முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுப் படிவங்களை 2024-08-22ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் தலைவர், கேள்விக் குழு, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை, இல. 12, ''மெக்சன்ஸ் டவர்'', அல்பிரட் ஹவுஸ் கார்டன், கொழும்பு-03 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை, வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இரத்தினக்கல் கோபுரத்தில் உணவகத்தை குத்தகை அடிப்படையில் வழங்குதல் - 2024" எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

(IV) பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களுடன் விலைமனுப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிணை முறியின் பெறுமதியை இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் காசாளரிடம் வைப்புச் செய்து அந்தப் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(V) விலைமனுக்கள் 2024-08-23ஆம் திகதி பி.ப. 2.05 மணிக்கு தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபையின் 07ஆம் மாடியிலுள்ள கேட்போர்கூடத்தில் திறக்கப்படும் என்பதுடன் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். இந்த விலைமனு திறப்பு நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு: உதவிப் பணிப்பாளர் (பெறுகைகள்) - 071 5362536/ 011 2332197

**தலைவர் - அமைச்சுக் கேள்விக் குழு,
தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபை,
இல. 12, ''மெக்சன்ஸ் டவர்'', அல்பிரட் ஹவுஸ் கார்டன், கொழும்பு 03.
தொலைபேசி 0112-329295, 2325364 மற்றும் 2390645-8 தொலைநகல் 011-2320758, 011-2332197
இணையதளம்: www.ngja.gov.lk**

**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

1. பின்வரும் ஒப்பந்த வேலைகள் /பணிகளுக்காக ஆர்வமுள்ள சாரார்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகளை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | கேள்வி பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| EW/8/ PT/235/T/ TC/2024 | 01 Year Term contract for Service and Repairs of Air Conditioning Systems of Terberg Yard Tractors – Year 2024/2025 | 150,000.00 ரூபா | 4,500.00 ரூபா | 2024.08.27 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு |
| EW/8/ PT/406/2024 | 01 Year Term Contract for rebuilding of Motor Tyres – Year 2024/2025 | 30,000.00 ரூபா | 6,000.00 ரூபா | 2024.08.27 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்துசாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுவதுடன், உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச்சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக்குறைந்தது கடந்த மூன்று (3) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, பொறிமுறை பொறித்தொகுதி பொறியியல் பிரிவின் பொறிமுறை பொறித்தொகுதிக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2024.08.06 ஆம் திகதியிலிருந்து (மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும்) மூடும் திகதிக்கு முதல் நாள் வரையும் மேலேயுள்ள அட்டவணையின் 4 ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பொறிமுறை பொறித்தொகுதி பிரதான பொறியியலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, பொறியியல் வேலைகள் கிளையிலிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்திற்குப் பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான பிணைமுறியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான முகாமையாளர் (பொறிமுறை பொறித்தொகுதி).
பொறிமுறை பொறித்தொகுதி பொறியியல் பிரிவு,
இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,
இல. 45,லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 011 2451920, 011 2482960
தொலைநகல் இலக்கம்: 011 2324071**

## விலைமனுக்களுக்கான அழைப்பு...!

**மேல் மாகாண கல்வித் திணைக்களம் - 2024**

கீழ்க்காணும் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு 2024.08.26 மு.ப.10.00 வரை தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விக்காக அழைப்பு விடுக்கப்படுகிறது.

| செயற் றிட்டம் | உருப்படி | கொள்வனவு செய்யும் அளவு | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | விலைமனுப் பிணை முறி (ரூபா) (காசாக அல்லது வங்கிப்பிணை மூலம்) |
|---|---|---|---|---|
| P1 | Desktop Computers | 118 | 3,500.00 | 175,000.00 |
| P2 | Tablet Computers | 70 | 1,000.00 | 35,000.00 |
| P3 | Bluetooth speakers | 55 | 1,000.00 | 5,000.00 |
| P4 | Digital Scale (Body Weight) | 38 | 1,000.00 | 4,000.00 |
| P5 | Laptop Computers | 22 | 1,000.00 | 45,000.00 |
| P6 | Mathematics Tool kits | 150 | 1,000.00 | 50,000.00 |

ஒவ்வொரு செயற்றிட்டத்திற்கும் வேறுவேறாக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

1. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான முறையினால் மேற்கொள்ளப்படும்.
2. மேற்கூறப்பட்ட விலைக்கோரலுக்காக ஆர்வம் காட்டும் தகைமையுடனான கேள்விதாரர்களுக்கு மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம் II) இடம் (தொ.பே இல.0112875722) மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், 2024.08.05 முதல் 2024.08.23 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மேல் மாகாண கல்வித் திணைக்களத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையான அலுவலக நேரங்களில் விலைக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் நிர்வாகப் பிரிவு (இரண்டாம் மாடி) இற்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து, இந்தத் திணைக்களத்தின் சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை நிர்வாகப் பிரிவிற்குச் செலுத்தியதன் பின் 2024-08-05ஆம் திகதி முதல் 2024-08-23ஆம் திகதி வரை விலைக்கோரல் ஆவணங்களை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று (Pre-Bid Meeting) 2024-08-15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் மூன்றாம் மாடியிலுள்ள கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என்பதுடன் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.
5. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2024 ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதிக்கு மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் மூன்றாம் மாடியிலுள்ள கணக்காளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும் அல்லது மேல் மாகாண கல்வித் திணைக்களம், இல. 89, ரன்மல்பாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்த உடனடுத்து 2024-08-26ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு தனிப்பட்ட ரீதியில் வருகை தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். சகல விலைமனுக்களுடனும் விலைக்கோரல் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் விலைக்கோரல் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. இந்த விலைக்கோரலை இரத்துச் செய்தல் அல்லது எந்தவொரு மாற்றத்தைச் செய்தல் தொடர்பான அதிகாரத்தை மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**டபிள்யூ.ஏ. நீலிகா பெரேரா,
தலைவர், பெறுகைக் குழு,
மேல் மாகாண கல்வித் திணைக்களம்,
இல. 89, 'ரன்மல்பாய',
பத்தரமுல்ல.
2024 ஓகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி.**




# நாட்டுக்காகவே ஜனாதிபதி தீர்மானங்களை எடுத்தார்

## சண்முகம் திருச்செல்வம்

(ஹட்டன் சுழற்சி நிருபர்)



நாட்டு மக்களின் நலன் கருதியே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியுடன் இணைந்து ஜனாதிபதி ரணில் விக்கிமரசிங்க செயற்பட்டதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் கொத்மலை தேர்தல் தொகுதியின் வலய அமைப்பாளரும், கொத்மலை அரசியல் அதிகார சபையின் உப தலைவருமான சண்முகம் திருச்செல்வம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்த அவர்,

ஜனாதிபதி, ராஜபக்ஷ குடும்பத்தின் பாதுகாவலர் அல்ல எனவும், மொட்டு கட்சிக்காக அன்றி நாட்டுக்காகவே தீர்மானங்களை எடுத்ததாகவும் அவர் குறிப்பிட்டார். இதன்போது, மேலும் கருத்து தெரிவித்த சண்முகம் திருச்செல்வம், இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கான தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்குரிய ஏற்பாடுகளை தேர்தல் ஆணைக்குழு வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்நாடு அதாள பாதாளத்துக்குள் விழுந்திருந்தது. எனினும், எதற்கும் அஞ்சாது, சவால்களை கண்டு ஒதுங்காது நாட்டை பொறுப்பேற்று, இன்று நல்ல நிலைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொண்டுவந்துள்ளார்.

தனி ஒருவராக நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை கொண்டிருந்த கட்சியுடன் இணைந்து இதற்குரிய வேலைத்திட்டங்களை அவர் முன்னெடுத்திருந்தார்.

அந்தவகையில், எமது நாடு இன்று பொருளாதார ரீதியில் அபிவிருத்தி அடைந்து வருகின்றது.

வங்குரோத்தில் இருந்த எமது நாட்டை, குறுகிய காலப்பகுதிக்குள் ஜனாதிபதியால் மீட்டெடுக்கப்பட்டுள்மைக்கு, உலக நாடுகளும், சர்வதே அமைப்புகளும் பாராட்டு தெரிவித்து வருகின்றன.

எனினும், எதிர்க்கட்சி தலைவர் உட்பட எதிரணி உறுப்பினர்கள் மற்றும் சில குழுவினர் போலி குற்றச்சாட்டுகளை முன்வைத்து வந்தனர்.

மேலும், ஜனாதிபதி நாட்டின் அரசமைப்பு மற்றும் சட்டதிட்டங்களுக்கு அமைய செயற்படுபவர். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு அவரே முதல் நபராக கட்டுப்பணம் செலுத்தியுள்ளார். தான் தேர்தலுக்கு அஞ்சுபவன் அல்ல என்பதைக்கூறி இதன்மூலம் எதிரணிகளின் வாயை அடைக்கச் செய்துள்ளார்.

நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாக்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன்தான் ஜனாதிபதி மொட்டு கட்சியுடன் இணைந்து செயற்பட்டார். அத்துடன், இன்று சுயாதீன வேட்பாளராகவே ரணில் விக்கிரமசிங்க களமிறங்கவுள்ளார். மொட்டு கட்சி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக தனி வேட்பாளரை களமிறக்கவுள்ளது. இதனால் போலிக்குற்றச்சாட்டை முன்வைத்த எதிரணிகள் தலைகுனிந்துள்ளன. எவ்வாறாயினும், ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிப்பதற்கு நாட்டு மக்கள் தீர்மானித்துவிட்டனர். எனவே, அரசியல் கட்சிகளும், தொழிற்சங்கங்களும் நல்ல முடிவை எடுக்க வேண்டும். நாட்டின் நலன் கருதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# எல்லயில் கீழே தவறி விழுந்த பிரித்தானிய பெண் காயம்



எல்ல பசறை வீதியில் அமைந்துள்ள சிறிய ஶ்ரீ பாதையைப் பார்ப்பதற்குச் சென்ற வெளிநாட்டுப் பெண் ஒருவர் கீழே தவறி விழுந்து பலத்த காயமடைந்துள்ளதாக எல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று (01) வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

33 வயதுடைய பிரித்தானிய நாட்டுப் பெண்ணொருவரே இந்த சம்பவத்தில் காயமடைந்துள்ளார்.

இப் பெண், எல்ல பகுதியில் அமைந்துள்ள சிறிய ஶ்ரீ பாதையைப் பார்ப்பதற்குச் சென்ற போது திடீரென கீழே தவறி விழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தினையடுத்து, அம்புலன்ஸ் மூலம் பதுளை போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட குறித்தப் பெண் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரின் ரூ.15 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் வெலிமடை டயரபா கே.கே. டிவிஷனுக்கான, சுமார் 2 கி.மீ நீளமுடைய பாதை நிர்மாணப்பணிகள் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

# கலவான வீதியில் மண்சரிவு அனர்த்தம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி கலவான வீதியில் மண்சரிவு அனர்த்தமொன்று ஏற்பட்டுள்ளது. மண்சரிவை தடுப்பதற்காக மதில் கட்டும் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கையிலேயே அவ்விடத்தில் மீண்டும் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

கலவான 281 மைல்கல் அருகில் இந்த மண்சரிவு இடம்பெற்றுள்ளது. இவ்விடத்தில் ஏற்கனவே மண்சரிவு அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. அந்த அவதான நிலையை நீக்குவதற்காகவே கடந்த 24 ஆம் திகதி அவ்விடத்தில் மதில் கட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கட்டட ஆராய்ச்சி நிறுவனம், அவ்விடத்தில் ஆய்வுப்பணிகளை மேற்கொண்டுள்ளது. இதனால் அவ்விடத்தில் ஆய்வுப் பணிகள் நிறைவு பெறும் வரை மதில் நிர்மாணப்பணிகளை நிறுத்துமாறு கட்டட ஒப்பந்த நிறுவனத்துக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட கட்டட ஆய்வு நிறுவன அதிகாரிகள் நேற்று தெரிவித்தனர்.

# பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு!





(ஊவா சுழற்சி நிருபர்)



“பாடசாலை செல்லும் மாணவர்களை பெற்றோர் எப்படி கண்காணித்து காப்பாற்றுவது” எனும் தொனிப் பொருளில் விசேட விழிப்புணர்வு நிகழ்வொன்று வெல்லவாயவில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வு, மொனராலை, வெல்லவாய மல்வத்தவளை தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

இந் நிகழ்வை, கல்வி அமைச்சு, இலங்கை பொலிஸ் மற்றும் மாஞ்சி நிறுவனம் இணைந்து நடத்தியுள்ளது. இதன் போது, பாடசாலை மாணவர்கள் முகங்கொடுக்கக்கூடிய பிரச்சினைகள் குறித்தும், அவற்றை எவ்வாறு கையாள்வது என்பது குறித்தும் தெளிவுபடுத்தப்பட்டது. இது குறித்து, உளவியலாளர் கலாநிதி பாக்யா அபேசிங்க மற்றும் சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக விசாரணைப் பிரிவின் பிரதான பொலிஸ் பரிசோதகர் அமில ஜயரத்ன ஆகியோரால் தெளிவூட்டப்பட்டதுடன், விசேட விரிவுரைகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், மல்வத்தவளை தேசிய பாடசாலையின் அதிபர் நயன மங்கள, மொனராகலை பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்தி உடுகமசூரிய மற்றும் பிரதேசத்தின் உயர் பொலிஸ் அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறப்பிடத்தக்கது.

# முன்பள்ளி ஆசிரியர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் தலவாக்கலையில் இராதாகிருஷ்ணன் உறுதி!





முன்பள்ளி ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை பாராளுமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்து உரிய தீர்வை பெற்றுக்கொடுப்பேன் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி வேலுசாமி இராதாகிருஷ்ணன் உறுதியளித்துள்ளார்.

அத்துடன், இதுதொடர்பாக கல்வி அமைச்சு உட்பட சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்பள்ளி ஆசிரியர்களின் சேவையைப் பாராட்டி, அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு, தலவாக்கலை தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வை முன்பள்ளி ஆசிரியர் சம்மேளனம் மற்றும் அதன் நுவரெலியா மாவட்ட கிளை என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

இந் நிகழ்வில் கலந்துக்கொண்டு கருத்தரைக்கும்போதே அவர்மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



இதன்போது, முன்பள்ளி ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்று பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணனிடம் கையளிக்கப்பட்டது.

தமது தொழிலில் உள்ள பாதுகாப்பு இன்மை, தொழிலுக்குரிய அங்கீகாரம் இன்மை, சம்பளப் பிரச்சினை உட்பட பல விடயங்கள் குறித்த மகஜரில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மகஜரை பெற்றுக்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன், முன்பள்ளி ஆசிரியர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

எதற்குமே அடித்தளம், ஆரம்பம் சிறப்பாக இருந்தால்தான் வெற்றிகரமாக முன்னோக்கி பயணிக்க முடியும். அந்தவகையில் முன்பள்ளி ஆசிரியர்களின் சேவைகள் போற்றுதலுக்குரிய எனக் குறிப்பிட்டார்.

மேலும் அவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும், இது பற்றி தான் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவேன் எனவும் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கல்வி அமைச்சர், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் அரச நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, உரிய தீர்வை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பேன் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்,

இந்நிகழ்வில், நுவரெலியா, கண்டி மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் முன்பள்ளி ஆசிரியர்களாக கடமையாற்றுவர்கள், கௌரவிக்கப்பட்டதுடன், அவர்களுக்கான பாராட்டு சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில், வலப்பனை கல்வி வலயத்திற்குட்பட்ட இராகலை உயர் தேசிய பாடசாலை மத்திய மாகாணத்தில் முதலிடத்தை பெற்று, தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

# கண்டியில் டெங்கு ஒழிப்பு ஊர்வலம்!



சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் செயற்பாட்டுக்கு அமைவாக, கண்டியில் டெங்கு விழிப்புணர்வு ஊர்வலமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. கண்டி மோப்ரி கல்லூரியின் ஏற்பாட்டில் மற்றும் குண்டசாலை சுகாதார வைத்தியர் அலுவலகம், பிரதேச பிரதேச சபை, பிரதேச செயலகம் ஆகியன இணைந்து மேற்கொண்ட குறிந்த டெங்கு விழிப்புணர்வு ஊர்வலம் மோப்ரி கல்லூரியின் அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, குண்டசாலை சுகாதார வைத்தியர் அலுவலகர் வைத்தியர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள், தாய் சேய் மருத்துவ தாதிமார்கள், ரஜவெல இந்து கல்லூரி, கெங்கல்ல தேசிய பாடசாலை மாணவ மாணவிகள் உள்ளிட்ட பலர் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

'டெங்கு இல்லாத நாட்டை கட்டியெழுப்புவோம்' என்ற தொனிப் பொருளுக்கிணங்க டெங்கு நோயின் தாக்கம் தொடர்பான பதாதைகளை ஏந்திய வண்ணம் மாணவர்கள் இந்த ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

இந்த நடைபவனி பேரணி, கெங்கல்லை தேசிய பாடசாலை மைதானத்தில் இருந்து ஆரம்பமாகி, திகன வரை சென்று மீளவும் குண்டசாலை சுகாதார வைத்திய அலுவலகம் வரை சென்று நிறைவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஹொரணை விபத்தில் ஒருவர் உயிரிழப்பு!

ஹொரணை, பொருவதன்ட பிரதேசத்தில் நேற்று (01) வியாழக்கிழமை இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக ஹொரணை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கார் ஒன்று வீதியை விட்டு விலகி அருகிலிருந்த கால்வாயில் மோதுண்டு, பின்னர் வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டி ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது. சாரதியின் நித்திரைக் கலக்கமே விபத்துக்கான காரணம் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த விபத்தின் போது முச்சக்கர வண்டியில் இருந்த இருவர் படுகாயமடைந்துள்ள நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இருவரில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை, புளத்சிங்கள பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞரொருவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

காயமடைந்தவர் அருணகம பிரதேசத்தைச் சேர்ந்த 61 வயதுடைய நபரொருவர் என்பதுடன் இவர் உயிரிழந்த இளைஞரின் காதலியின் தந்தை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்தினையடுத்து காரின் சாரதியை கைதுசெய்துள்ள பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை மாணவருக்கிடையில் மோதல் நான்கு பேர் வைத்தியசாலையில் அனுமதி!

ஹட்டன் கல்வி வலையத்திற்குட்பட்ட, பிரபல பாடசாலை ஒன்றில் மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் நான்கு மாணவர்கள் காயமடைந்துள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளாகிய நான்கு மாணவர்களும் டிக்கோயா கிழங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று (01) வியாழக்கிழமை மாலை இடம் பெற்றுள்ளது. குறித்த பாடசாலையில் கல்வி பயின்று வரும் இரண்டு மாணவர் குழுக்களுக்களும், பாடசாலை நிறைவடைந்து வீடு திரும்பி கொண்டிருக்கையில், ஹட்டன் பேருந்து நிலையத்தில் வைத்து ஒரு மாணவன் மற்றைய மாணவனை கத்தியால் வெட்டியுள்ளார்.

இதன்போது, ஏற்பட்ட மோதலில் நான்கு மாணவர்கள் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இதில் ஒரு மாணவனுக்கு கைபகுதியில் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.இதேவேளை தாக்குதலை மேற்கொண்ட மாணவனை கைது செய்துள்ள, ஹட்டன் பொலிஸார், சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடதக்கது.



### இந்தியாவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் இன்று

# பத்திரணவுக்கு பதிலாக ஷிராஸ் இலங்கை அணிக்கு அழைப்பு: காயங்களால் நெருக்கடி

இந்தியாவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டி கொழும்பு, ஆர். பிரேமதாச மைதானத்தில் இன்று பகலிரவு ஆட்டமாக நடைபெறவுள்ள நிலையில் இலங்கை வேகப் பந்து முகாம் மேலும் பின்னடைவை சந்தித்துள்ளது.

வேப்பந்து வீச்சாளர் மதீஷ பத்திரண தோள் பட்டை உபாதைக்கு உள்ளாகி இருப்பதோடு டில்ஷான் மதுஷங்க தொடைப் பகுதியில் காயத்திற்கு உள்ளாகியுள்ளார். ஏற்கனவே சுகவீனம் காரணமாக துஷ்மன்த சமீர மற்றும் கட்டை விரலில் முறிவு ஏற்பட்ட நுவன் துஷார ஆகியோர் நடந்து முடிந்த இந்தியாவுக்கு எதிரான டி20 தொடர் தொடக்கம் விளையாட முடியாத நிலையில் உள்ளனர்.

அதேபோன்று டி20 தொடரில் இடம்பெற்ற வேகப்பந்து வீச்சாளர் பினுர பெர்னாண்டோவும் சுகவீனம் காரணமாக அணியில் இருந்து விலகியுள்ளார். இதனால் இதுவரை தேசிய அணிக்கு ஆடாத வலது கை வேகப்பந்து வீச்சாளர் மொஹமட் ஷிராஸ், மதீஷ பத்திரணவுக்கு பதில் ஒருநாள் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார். அதேபோன்று புதுமுக வீரராக வலது கை வேகப்பந்து வீச்சாளர் ஏஷான் மாலிங்கவும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

'மதீஷவின் தோள்பட்டையில் வலி ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியின்போது இதே பிரச்சினையை அவர் எதிர்கொண்டார். அவரை தேர்வு செய்து அவதானத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை' என்று அணி முகாமையாளர் மஹிந்த ஹலன்கொட குறிப்பிட்டார். பல்லேகலவில் நடந்த மூன்றாவது டி20 போட்டியில் காயத்துக்கு உள்ளான பத்திரண முன்கூட்டியே ஆடுகளத்தில் இருந்து வெளியேறினார். அதற்கு முன் அந்தப் போட்டியில் அவர் ஒரே ஒரு பந்தையே வீசி இருந்தார்.




பத்திரணவுக்கு பதில் அணிக்கு அழைக்கப்பட்டிருக்கும் 29 வயதான மொஹமட் ஷிராஸ் தற்போது நடைபெற்றுவரும் பிரதான கழகங்களுக்கு இடையிலான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில் சோபித்த நிலையிலேயே தேசிய அணியில் வாய்ப்பு பெற்றுள்ளார்.

கடைசியாக கடந்த செவ்வாய்க்கிழமை (30) நடைபெற்ற போட்டியில் அவர் குருநாகல் அணிக்கு எதிராக பி.ஆர்.சி. அணி சார்பில் 7 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை வீழ்த்தி இருந்தார். இதுவரை 47 முதல்தர ஒருநாள் போட்டிகளில் ஆடியிருக்கும் ஷிராஸ் 80 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

இந்நிலையில் இலங்கை பதினொருவர்களில் இடம்பெறக் கூடியவர்களான மதீஷ மற்றும் மதுஷங்க அணியில் இருந்து விலகி இருக்கும் சூழலில் ஷிராஸ் இன்றைய போட்டிக்கு அழைக்கப்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் 2019 ஆம் ஆண்டு தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்திற்கான இலங்கை டெஸ்ட் குழாத்தில் மொஹமட் ஷிராஸ் இடம்பெற்றபோதும் அவருக்கு ஒரு போட்டியில் கூட ஆடுவதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை

இதேவேளை இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான குழாத்தில் மேலும் மூன்று வீரர்கள் மேலதிகமாக சேர்க்கப்பட்டுள்ளனர். இதன்படி டி20 தொடரில் சோபித்த குசல் ஜனித் பெரேராவுடன் பிரமோத் மதுஷான் மற்றும் ஜெப்ரி வன்டர்சே பதில் வீரர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தியாவுக்கு எதிரான டி20 தொடரை முழுமையாக இழந்த சரித் அசலங்க தலைமையிலான இலங்கை அணி புதிய காயங்களால் மேலும் நெருக்கடியை சந்தித்துள்ளது. இந்தியாவுக்கு எதிராக இலங்கை கடைசியாக ஆடிய 10 அனைத்து வகை கிரிக்கெட் போட்டிகளிலும் தோல்வியையே சந்தித்துள்ளது.

இந்நிலையில் இந்திய ஒருநாள் குழாத்திற்கு அனுபவ வீரர்களான அணித் தலைவர் ரோஹித் ஷர்மா மற்றும் விராட் கொஹ்லி ஆகியோர் திரும்பி உள்ளமை இலங்கைக்கு மேலும் நெருக்கடியாக உள்ளது. எனினும் சொந்த மண்ணில் ஆடும் வாய்ப்பை இலங்கை அணி சாதகமாக பயன்படுத்திக் கொள்ள இன்று முயற்சிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

## செப். 11 தாக்குதல் குற்றத்தை ஒப்புக்கொள்ள மூவர் இணக்கம்



2001 செப்டெம்பர் 11 தாக்குதலை நடத்த சதி செய்ததாக குற்றம்சாட்டப்பட்ட மூவரும் வழக்கு விசாரணைக்கு முந்திய இணக்கத்திற்கு வந்திருப்பதாக அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கியூபாவில் உள்ள அமெரிக்க கடற்படை தளமான குவான்தனாமோ பேயில் பல ஆண்டுகளாக வழக்கு விசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் காலித் ஷெய்க் முஹமது, வலீத் முஹமது சாலிஹ் முபாரக் பின் அத்தாஸ் மற்றும் முஸ்தபா அஹமது ஆதம் அல் ஹௌசாவி ஆகியோர் இவ்வாறு இணக்கத்திற்கு வந்துள்ளனர். இதன்படி இந்த மூவரும் மரண தண்டனை அளிக்கக் கூடாது என்ற நிபந்தனையில் வழக்கு விசாரணையில் குற்றத்தை ஒப்புக்கொள்ள இணங்கி இருப்பதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. உடன்பாடு குறித்து சந்தேக நபர்களின் குடும்பத்தாருக்குக் கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டதாக நியூயோர்க் டைம்ஸ் பத்திரகை குறிப்பிட்டுள்ளது. செப்டம்பர் 11ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில் சுமார் 3,000 பேர் கொல்லப்பட்டனர்.

## 3 சிறுமிகளை கொன்ற 17 வயதானவர் கைது



வடமேற்கு இங்கிலாந்தில் உள்ள சௌத்போர்ட் நகரில் 3 சிறுமிகள் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து 17 வயது இளையர் மீது கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

பிரபல பாடகி டெய்லர் சுவிப்ட்டின் பாணியில் பிள்ளைகளுக்கு நடன வகுப்பு நடந்துகொண்டிருந்தபோது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. மேலும் அந்த இளையர் 10 கொலை முயற்சிக் குற்றச்சாட்டுகளையும் எதிர்கொண்டுள்ளார்.

அவர் நேற்றுக் காலை (1) லிவர்பூல் சிட்டி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். நடன வகுப்பில் இருந்த 8 பிள்ளைகளுக்கும் 2 பெரியவர்களுக்கும் காயம் ஏற்பட்டது. அவர்களில் பலரின் உடல்நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக உள்ளது. இதில் 6 தொடக்கம் 9 வயதான சிறுமிகளே கொல்லப்பட்டுள்ளனர். இதற்கிடையில் சௌத்போர்ட் நகரில் ஏற்பட்ட மரணங்களுக்காக மத்திய லண்டனில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. அதில் கலந்துகொண்ட 100க்கும் அதிகமானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கத்திக்குத்து தாக்குதல் நடத்திய இளைஞர் குடியேறிய கடும்போக்கு இஸ்லாமியவாதி என்று சமூக ஊடகத்தில் வதந்தி பரவியதை அடுத்தே இந்த ஆர்ப்பாட்டம் வெடித்தது.

எனினும் தாக்குதல் நடத்தியவர் பயங்கரவாதத்துடன் தொடர்புபட்டவரல்ல என்றும் பிரிட்டனில் பிறந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சர்வதேச செய்திகள்

# பழிதீர்க்கும் உறுதியுடன் ஆயிரக் கணக்கானோரின் பங்கேற்பில் ஈரானில் ஹனியேவின் இறுதிக் கிரியை

## காசாவில் 300ஆவது நாளாக இஸ்ரேலின் தாக்குதல் நீடிப்பு



படுகொலை செய்யப்பட்ட ஹமாஸ் அரசியல் பிரிவுத் தலைவர் இஸ்மைல் ஹனியேவின் இறுதிக் கிரியை பெரும் திரளானோரின் பங்கேற்புடன் ஈரான் தலைநகர் டெஹ்ரானில் நேற்று (01) இடம்பெற்றதோடு இந்தப் படுகொலை காசாவில் நீடிக்கும் போர் பிராந்திய அளவில் பரவும் அச்சுறுத்தலை அதிகாரித்துள்ளது.

ஈரான் தலைநகரில் வைத்து இஸ்ரேலால் நடத்தப்பட்ட தாக்குதலில் ஹனியே கொல்லப்பட்டதாக நம்பப்படும் நிலையில், அது ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையே நேரடி போர் ஒன்றுக்கான அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. எனினும் இந்தப் படுகொலை தொடர்பில் இஸ்ரேல் தொடர்ந்து மௌனம் காத்து வருகிறது.

இந்நிலையில் ஈரான் மண்ணில் நடத்தப்பட்ட தாக்குலுக்கு பதிலடியாக இஸ்ரேலுக்கு எதிராக நேரடி தாக்குதலை நடத்த ஈரான் உயர் மட்டத் தலைவர் ஆயதொல்லா அலி கமனெய் உத்தரவிட்டதாக ஈரானிய அதிகாரிகளை மேற்கோள்காட்டி அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

டெஹ்ரான் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற இறுதிக் கிரியையில் உயர்மட்டத் தலைவர் முன்னின்று தொழுகை நடத்தினார். இதில் கறுப்பு நிற உடையுடன் பங்கேற்ற ஆயிரக்கணக்கான மக்கள் 'இஸ்ரேல் ஒழிக' மற்றும் 'அமெரிக்கா ஒழிக' என்று கோசம் எழுப்பினர்.

இறுதிக் கிரியையை அடுத்து அவரது உடல் காசாவில் இருந்து வெளியேறிய பின் அவர் பெரும்பாலான காலம் தங்கி இருக்கும் கட்டாருக்கு எடுத்துச் செல்லப்பட்டதோடு அங்கு இன்று நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

'அபூ அல் அபெத் இஸ்மைல் ஹனியே, அமைதி கொள்ளுங்கள். சியோனிச ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு எமது நாடு, ஈரான், எதிப்பாளர்கள், உங்களது மக்கள், உங்களது போராளிகள் ஒன்றுபட்டுள்ளனர்' என்று ஹமாஸ் பிரதித் தலைவர் கலீல் அல் ஹய்யா, காசாவில் இருந்து தொலைக்காட்சி வழியாக இறுதிக் கிரியையில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

கடந்த புதன்கிழமை அதிகாலையில் தனது மெய்க்காவலர் ஒருவருடன் ஹனியே படுகொலை செய்யப்படுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் முன்னணி தளபதியான புவாத் ஷுக்ரி படுகொலை செய்யப்பட்டார்.

இந்த சம்பவங்கள் பிராந்தியத்தில் போர் பதற்றத்தை அதிகரிக்கச் செய்திருக்கும் சூழலில் ஐ.நா. பாதுகாப்புச் சபை நேற்று முன்தினம் அவசரமாகக் கூடியது. மத்திய கிழக்கை போர் பள்ளத்திற்குள் இஸ்ரேல் இழுத்துச் செல்வதை சர்வதேச சமூக நிறுத்த வேண்டும் என்று பலஸ்தீன தூதுவர் வலியுறுத்தியதோடு சீனா, ரஷ்யா மற்றும் அல்ஜீரிய நாடுகள் ஹனியேவின் படுகொலையை கண்டித்தன. பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மையை நிலைகுலைப்பதற்கு ஈரான் ஆதரவு அளிப்பதாக அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் நாடுகள் குற்றம்சாட்டியதோடு மத்திய கிழக்கில் முழு அளவில் போர் வெடிக்கும் அச்சம் பற்றி ஜப்பான் கவலை வெளியிட்டது.

பதற்றத்தைத் தணிக்கும் முயற்சியாக காசா போர் நிறுத்தத்திற்கு வலியுறுத்தப்பட்டு வருகிறது. டெஹ்ரான் மற்றும் பெய்ரூட் தாக்குதல் 'ஆபத்தான வகையில் மோதலை அதிகரிக்கச் செய்யும்' என்று ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ் தெரிவித்துள்ளார்.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டி காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் பணயக் கைதிகளை விடுவிப்பதை நோக்கி அனைத்து முயற்சிகளும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

எவ்வாறாயினும் காசாவில் இஸ்ரேல் நடத்தி வரும் உக்கிர தாக்குதல்கள் நேற்று (01) 300 ஆவது நாளை தொட்டது. மத்திய காசாவின் அல் மகாசி அகதி முகாமுக்கு அருகில் பொதுமக்கள் பயணித்த வாகனம் ஒன்றை இலக்கு வைத்து இஸ்ரேலிய போர் விமானங்கள் நேற்றுக் காலை நடத்திய தாக்குதலில் எட்டுப் பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது.

மத்திய காசாவில் நுஸைரத் அகதி முகாமில் நேற்று இடம்பெற்ற தாக்குதலில் மேலும் நால்வர் கொல்லப்பட்டதோடு முன்னதாக அந்த முகாமில் இருக்கும் வீடு ஒன்றை இலக்கு வைத்து நடத்தப்பட்ட பிறிதொரு தாக்குதலில் மூவர் பலியானதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கடந்த புதன்கிழமை இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் அல் ஜசீரா அரபு மொழி செய்தியாளர் இஸ்மைல் அல் கவுல் மற்றும் அவரது படப்பிடிப்பாளர் ராமி அல் ரிபி ஆகியோர் கொல்லப்பட்டனர். காசா நகரில் மேற்கே உள்ள ஷெட்டி அகதி முகாமில் இவர்கள் இருந்த கார் வண்டியை இலக்கு வைத்தே இஸ்ரேல் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது.

காசாவில் போர் வெடித்தது தொடக்கம் அங்கு 113 ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப்பணியாளர்கள் கொல்லப்பட்டிருப்பதாக ஊடகவியலாளர்களை பாதுகாப்பதற்கான குழு என்ற அமைப்பு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் குறைந்தது 35 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் 55 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 39,480 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும 91,128 பேர் காயமடைந்துள்ளனர்.

## ஹமாஸ் ஆயுதப் பிரிவு தலைவர் தெயிப் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் அறிவிப்பு



தெற்கு காசாவில் கடந்த ஜுலை 13 ஆம் திகதி நடத்திய வான் தாக்குதலில் ஹமாஸ் ஆயுதப் பிரிவுத் தலைவர் முஹமது தெயிப் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது. எனினும் இதனை பலஸ்தீன போராட்ட அமைப்பான ஹமாஸ் உடன் உறுதி செய்யவில்லை.

'முஹமது தெயிப் ஒழிக்கப்பட்டுள்ளார் என்பதை எம்மால் இப்போது உறுதி செய்ய முடியும்' என்று இஸ்ரேல் இராணுவம் நேற்று கூறியது.

தெயிபை காசாவின் ஒசாமா பின் லாடன் என்று அழைத்த இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லன்ட், ஹமாஸ் படை மற்றும் காசாவில் உள்ள அதன் நிர்வாகத்தை ஒழித்துக் கட்டும் செயற்பட்டில் அவரது மரணம் முக்கிய மைல்கல் என்று கூறினார்.

தெயிப் கொல்லப்பட்டிருக்கும் நிலையில் ஹமாஸின் வீழ்ச்சி முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு நெருங்கி இருப்பதாக நிதி அமைச்சர் பெசாலல் ஸ்மொட்ரிட்ச் குறிப்பிட்டுள்ளார்.

கான் யூனிஸின் மேற்கே 'பாதுகாப்பு வலயம்' என்று இஸ்ரேல் அறிவித்த அல் மவாசியில் தெயிபை இலக்கு வைத்து இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் குறைந்தது 90 பேர் கொல்லப்பட்டனர்.

இதன்போது இஸ்ரேலிய போர் விமானங்கள் இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் கூடாரங்கள் மற்றும் நீர் சுத்திகரிப்பு அலகு ஒன்றை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தின.

ஹமாஸ் ஆயுதப் பிரிவான கஸ்ஸாம் படையின் நிறுவனர்களில் ஒருவரான 58 வயது தெயிப் 20 வருடங்களுக்கு மேலாக அதனை வழிநடத்தி வருகிறார்.

ஹமாஸின் சுரங்க அமைப்பு மற்றம் ஆயுதத் தயாரிப்புகளை மேம்படுத்தியவர்களில் முக்கிமானவராக கருதப்படும் தெயிப், பல தசாப்தங்களாக இஸ்ரேலினால் அதிகம் தேடப்படுபவராக இருந்து வருகிறார்.

2014 இல் இஸ்ரேலின் வான் தாக்குதல் ஒன்றில் அவரது மனைவி 7 மாதக் குழந்தை மற்றும் 3 வயது மகள் ஆகியோர் கொல்லப்பட்டனர். இதற்கு முன்னர் அவர் இஸ்ரேலின் ஏழு படுகொலை முயற்சிகளில் உயிர்தப்பியவர் என்று நம்பப்படுகிறது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு திட்டமிட்ட மூன்று இராணுவக் கௌன்சில் உறுப்பினர்களில் தெயிபும் ஒருவர் என்று இஸ்ரேல் நம்புகிறது.

இந்தக் குழுவில் இருந்த மற்ற இருவரில் ஒருவர் காசாவுக்கான ஹமாஸ் தலைவர் யங்யா சின்வார் கடந்த மார்ச் மாதம் இஸ்ரேலால் கொல்லப்பட்ட பிரதித் தலைவர் மர்வான் இஸ்ஸாவும் அடங்குகின்றனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஓகஸ்ட் மாதம் 2ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.